# சுதேசமித்திரன்

6 பிப்ரவரி '49........4 அணா





# தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

# WOODWARD'S
## GRIPE WATER
*keeps baby well*

I·WW108-111' W. WOODWARD LTD LONDON. ENGLAND

ஜுபிடர்
பிக்சர்ஸ் மகிழ்ச்சியுடன்
வெளியிடப்போகும்......
வேலைக்காரி
கதை. வசனம்: ஸி.என். அண்ணாத்துரை · டைரக்ஷன்: ஏ.எஸ்.ஏ.சாமி
எம்.வி.ராஜம்மா · வி.என். ஜானகி · கே. ஆர்.ராமஸ்வாமி
டி.எஸ்.பாலையா நடித்தது · நடனங்கள் · லலிதா-பத்மினி
சீக்கிரமே வெளிவருகிறது!
JUPITER PICTURES CIRCUIT

# சுதேசமித்திரன்

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| ஒரு பொறி! | 'சுகி' | 9 |
| சொப்பன வாழ்க்கை (தொடர் கதை) | 'ஆர்வி' | 11 |
| ரமாவைக் கேளுங்கள்! | குங்குமம் | 16 |
| கலாமண்டபம் | | 23 |
| உங்கள் கால பலன் | ராவ் | 29 |
| பெரிய புராணம் | பி ஸ்ரீ. | 33 |
| சிறுவர் கதை | ராசு | 35 |
| கூத்தாடி | எஸ் டி ஸ்ரீ. | 41 |
| நாமொன்று நினைக்க... | ய. மகாலிங்க சாஸ்திரி | 45 |

வாழிய செந்தமிழ்!

# சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்!

Vol. XX] ஸர்வதாரி௵ தை௴ 24௳ ★ 1949-௵ பிப்ரவரி௴ 6௳ No. 1

## வேலை நிறுத்தம் வேண்டாம்

பண்ட உற்பத்தி பெருகுவதொன்றே தற்போதைய பொருளாதாரத் தொல்லைகள் பலவற்றிற்கும் நிலையான பரிகாரம். சில இனங்களில் சென்ற வருஷத்திய உற்பத்தி அதற்கு முன் வருஷத்தியதைவிட ஓரளவு அதிகம் என்பது ஆறுதலளிக்கக்கூடும். ஆனால் இந்த அதிகரிப்பு பரவலானதாயில்லை. மேலும் தொழிற்சாலைகள் உள்ள சாதனங்களைக்கொண்டே இன்னும் அதிகமான உற்பத்தி செய்திருக்க முடியும். எப்படியும் நாட்டின் தேவைகளைக்கவனிக்கையில், இந்த அதிகரிப்பு விகிதம் கண்டு சிறிதும் திருப்தியடைவதற்கில்லை. மத்தியத் தொழில் ஆலோசனை சபையில் டாக்டர் சியாமப் பிரசாத் முகர்ஜி எடுத்துக்காட்டியது போல், பலவகைப் பண்டங்களும் இன்னும் பெருவாரியாக உற்பத்தியாகவேண்டும்; இதோடு ஒரு நியாயமான விலைவாசியை ஸ்திரப்படுத்தி, பண்டங்கள் நேர்மையாக விநியோகமாக வழி செய்தால்தான் வறுமையில் கிடந்துழலும் மக்களின் வாழ்க்கைத்தரம் உருவாக உயர முடியும்.

இந்நோக்கம் துரிதமாக ஈடேறுவதற்குத் தற்போதுள்ள தடைகள் யாவை? மற்றனைத்தையும் விட முதலாளிகளும், தொழிலாளர்களும் முழு மூச்சுடன் உற்பத்திப் பெருக்கில் முனையாததே முக்கிய காரணம். முதலாளிகளைப் பொறுத்தவரை, தொழில்கள் தேசியமாக்கப்படுவதுபற்றி வெளியான அறிக்கைகள் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்ததில் ஆச்சரியமில்லை. மேற்கொண்டு தொழில் துறையில் தாங்கள் முதல் போட்டு நடத்தும் முயற்சிக்குத் தக்க பலன்கிடைக்காதோ என்று அவர்களுக்கு கலக்கம். அக்கலக்கத்தைத் தணிக்கும் கருத்துடன் சர்க்கார் சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் தங்கள் தொழில் கொள்கையை விளக்கி ஒரு அறிக்கை வெளியிட்டார்கள். குறிப்பிட்ட சில தொழில்கள் இன்னும் பத்து வருஷ காலம் தனிப்பட்டவர்களிடமே இருந்துவருமென்பதும், அதற்குப்பிறகு அவற்றை தேசிய உடைமையாக்குவதுபற்றி சர்க்கார் யோசிப்பரென்பதும் அவ்வறிக்கையின் முக்கிய அம்சங்களில் ஒன்று. இதற்குப் பிறகும் முதலாளிகள் தயக்கம் காட்டி வந்திருப்பதற்கான காரணங்கள் ஏற்கெனவே வெளியானவை. பின்னர் நிதி மந்திரியும், இப்போது பிரதம மந்திரி, தொழில் மந்திரி ஆகியவர்களும், தொழில்களை தேசியமயமாக்குவதுபற்றி விடுத்துள்ள அறிக்கைகள் முதலாளிகள் கலக்கத்தை விசேஷமாகத் துடைக்க உதவும்.

தொழில்களை தேசியமயமாக்குவது என்பது தற்போதுள்ள சர்க்கார் வகுக்கும் கொள்கையை மட்டும் பொறுத்ததன்று; எதிர்காலத்தில் அக்கொள்கை அமுலுக்கு வருவது வேறு எவ்வளவோ அம்சங்களைப் பொறுத்தது; அக்கொள்கையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு வேண்டிய பெருவாரியான தொழிலறிவுள்ளவர்களும், மற்ற சாதனங்களும், பண வசதியும் ஏற்பட்டாலன்றி அக்கொள்கை நிறைவேற முடியாது என்று பண்டித நேரு வற்புறுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. எப்படியும் இன்னும் நெடுநாள்வரை மிக்கப் பெரும்பாலான தொழில்கள் விஷயத்தில் தேசியமயமாக்கும் கொள்கை அமுலுக்கு வருவதற்கில்லையென்று உறுதி கூறி முதலாளிகளின் அச்சத்தைத் தணிப்பதே அவர் கருத்தென்பதில் சந்தேகமில்லை.

பிரதம மந்திரியின் இந்த உறுதிமொழி தொழில் துறையில் நாட்டமுள்ளவர்களிடையே நம்பிக்கையை வளர்க்குமென்றே எண்ணலாம். ஆயினும் உற்பத்தி துரிதமாகப் பெருகுவதற்கு இது மட்டும் போதியதன்று. அதற்கு ஆக்கமளிக்க சர்க்கார் திட்டமான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்வது அவசியமாகும். அதாவது தொழில் விஸ்தரிப்புக்கு அவர்கள் பல வகைகளிலும் ஊக்கமளிக்கவேண்டும். தேய்மானத்தை ஈடுசெய்தல் புதிய தொழில்களுக்கான வருமான வரி விகிதம் முதலிய அம்சங்களில் சர்க்கார் ஏற்கெனவே சில சலுகைகள் அளித்திருப்பது உண்மையே. எனினும் அவை தற்போதைய தேவைகளை சர்க்கார் முற்றிலும் உணர்ந்திருப்பதாகக்குறிப்பவையன்று. உதாரணமாக, தேய்ந்துபோகும் இயந்திரங்களை ஈடு செய்வதற்கான செலவு தற்போது மிக்க அதிகரித்திருப்பதை அவர்கள் கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை. மேலும் தற்போது தொழில்கள்

—அடுத்த பக்கம்.

## வழிகாட்டும் ஜோதி.




மீதுள்ள வரிப்பளு மிகவும் அதிகமென்பதை சமீபத்தில் நிதி மந்திரியே ஒப்புக்கொண்டுள்ளார். இத்தகைய இனங்களில் போதிய நிவாரணமளிப்பது சர்க்காரின் உடனடியான கடமை.

தொழிலாளரைப் பொறுத்தவரை, அவர்களுடைய க்ஷேமத்தில் பண்டித நேருவை விட அதிகமான அக்கரைகொண்டவர் யாருமிருக்கமுடியாது. தங்கள் குறைகளுக்குப் பரிகாரம்தேடும் ஆத்திரத்தில் அவர்கள் தங்கள் வாழ்வுக்கே உலை வைத்துக் கொண்டுவிடக்கூடாதென்பதே அவர் வற்புறுத்துவதெல்லாம். வேலை நிறுத்தம் செய்ய தொழிலாளருக்கு உள்ள உரிமையை யாரும் ஆட்சேபிக்கவில்லை. ஆனால் நாட்டின் தற்போதைய நிலையில் தொழிலாளர் அதைக் கையாள்வதால் அவர்கள் உள்பட அனைவருக்கும் விபரீதம். ஒவ்வொரு வேலை நிறுத்தமும் உணர்த்தியுள்ள அனுபவம் இதுதான். அதற்காக குறை எதுவானாலும் அவர்கள் வாய் திறவாமல் சகித்துக்கொண்டிருக்க வேண்டுமென்று யாரும் சொல்லவில்லை. அக்குறையை வேலை நிறுத்த அவசியமின்றியே சமரசமாகத் தீர்த்துக்கொள்வதற்கு உருவாகியுள்ள முறையை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதே தேசத் தலைவர்கள் கோரிக்கை. சமுதாய க்ஷேமத்தில் அக்கரையும், பொறுப்பும் உள்ள தொழிலாளர் தலைவர் எவரும் அதற்கு மாறான வழியில் தொழிலாளரைத் தூண்டுவதற்கில்லை. அதுவும் ரயில்வே பஸ், முதலிய பொது ஜன வசதிகளில் வேலையாயிருக்கும் தொழிலாளரை, (உணவு நெருக்கடி தேசத்தின் கழுத்தை நெறித்து வந்தும் இந்த சமயத்தில்) ஸ்டரைக் செய்யத் தூண்டுவது தேசத்துரோகம், சமூகத் துரோகம்—ஏன் ஆத்ம துரோகமாகவும் முடியும். இதனால் தொழிலாளருக்கும் பெருந் தீங்கு ஏற்படும். பிறத்தியானுக்கு இரண்டு கண் போக தன் ஒரு கண்ணைப் பொட்டையடித்துக்கொண்ட கதையில்தான் முடியும்.

# சென்னையில் கிரிக்கெட் 'டெஸ்ட்'



சென்ற வாரம் இந்தியருக்கும் மேற்கு இந்தியத் தீவு கோஷ்டிக்கும் இடையே நான்காவது கிரிக்கெட் "டெஸ்ட்" துவங்கியது முதலில் யார் ஆட வேண்டுமெனப் பார்ப்பது முறையல்லவா? பூவா, தலையா பார்த்தபின் மே. இ. கோஷ்டி பாட் செய்தது. இந்தியத் தலைவர் அமர்நாத்தும் மே. இ. கோஷ்டி தலைவர் கோடார்டும் பெவிலியனை விட்டு ஆட்டத்தை ஆரம்பிக்க வெளியே வருகின்றனர்.

இந்திய கோஷ்டியினர் சென்ற 29-ந்தேதி தங்களது முதல் ''இன்னிங்ஸைத்'' துவக்கினர். ''பாட்'' செய்ய ரீகேயும் முஷ்டாக் அலியும் முன்வந்தனர். அடுத்த இரண்டு படங்கள் முஷ்டாக் அலியின் இரு ''திருப்பல்''களை சித்தரிக்கின்றன. கடைசிப் படத்தில் ரீகே ஆடுகிறார்.

# தேர்த்தட்டு வார்த்தை

வாரன்

## 13

## மருந்தே உணவும் ஆனால்.....

★

'தானுகவந்த போரைக் கைவிட்டு உயிரோடிருந்தால் உலகினர் பழிப்பர். மகாரதர்களாகிய கர்ணன் போல்வாரும் இகழ்வர். அப்பழி மரணத்தினும் கொடியது என்று கண்ணன் உபதேசித்தபோதிலும் அர்ஜுனனல் போரைத் தொடங்க முடியவில்லை. போர்க்களத்தினின்றும் நீங்கி உயிரைவைத்துக்கொண்டு வாழ்ந்தால்தானே பழி தன்னை வாட்டும். ஆசாரியர்களைக்கொல்லுவதற்குப் பதில் தன்னைத்தானே முடித்துக் கொண்டால் பழியின் வேதனை தனக்கு எங்ஙனம் உண்டாகும்? அல்லது போர்க்களத்திலேதான் வாளாவிருந்து பகைவரே தன்னைக் கொல்ல அனுமதித்திருந்தால் பழி என்ன செய்யும்? ஆசார்யர்களின் மரணத்திற்குத்தான் காரணமாயிருப்பதைவிடத் தற்கொலை மேல் அல்லவா?' என்று ஆலோசிக்கலானன் அதை அறிந்துகொண்ட கண்ணன் சுயதர்மம் அல்லது கடமையின் மேன்மையை உபதேசித்தார்.

நோயாளிக்குச் சில வைத்தியர்கள் கொடுக்கும் மருந்து கசப்பாக இருக்கிறது. கசப்பின் மிகுதியால் மருந்தில் வெறுப்பும் ஏற்பட்டு அதனுல் அதை உட்கொண்ட உடனே வாந்தியும் உண்டாகி உடலுக்கு வேதனை ஏற்படுவதும் உண்டு. அதற்குமேல் மருந்து சாப்பிடும் காலங்களில் வைத்தியர்கள் நோயாளிக்கு விதிக்கும் பத்தியம் கடுமையாகவிருந்தால் அனுஷ்டிக்க அரிதாகிவிடுகிறது. வைத்தியர் சொன்னபடி உணவுகளை விலக்கி மருந்தையும் பத்தியத்தையும் ஏற்றுக்கொண்டால் உடல் வாடித் தளர்ந்து போகிறது. 'என்றைக்கோ குணம் ஏற்படப்போகிறது' என்று வைத்தியர் சொல்லும் வார்த்தையை வேதமாக நம்பி நோயாளி கஷ்டங்களை மேற்கொள்வது துர்லபம்தான். ஆனால் பத்தியமே இல்லாமல் கொடுக்கும் மருந்து உடலை வளர்க்கக் கூடிய சிறந்த ருசியுள்ள உணவுமாயிருந்தால், அதை ஏற்றுக்கொள்ள எந்த நோயாளியாவது மறுப்பானு? நோயைப் பரிகரித்தாலும் பரிகரிக்காவிட்டாலும் சாப்பிட ருசியாயிருக்கிறது. ஆகாரமும் ஆகிறது! பரிகாரமாவது பின்னே தெரியட்டும் என்று எவனும் உடனே வாங்கி விழுங்குவனே. அம்மருந்துபோல் அல்லவா அரசர்களுக்குச் சுயதர்மமாகிய போரும்.

இன்று இகலில் பொன்றில்நீ
இந்திரலோகம்பெறுதி
வென்றிஉறில் ஆளுதிஇம்
மேதினியை—என்றுஇதனை
ஓர்ந்துஅதனல் கௌந்தேயா!
உற்றுஎழுநீ வெஞ்சமத்துத்
தீர்ந்து மனத்தோடும்
தெளிந்து.

(இ-ள்) இன்று இகலில் பொன்றில்—இப்பொழுது போரில் மாண்டால், நீ இந்திரலோகம் பெறுதி—நீ சுவர்க்கத்தை அடைவாய், வென்றி உறில்—வெற்றிபெற்றால், இ மேதினியை ஆளுதி—இந்தப் பூமியை அரசாள்வாய், என்று இதனை ஓர்ந்து—எனக்கொண்டு இதை நன்கு உணர்ந்து, அதனல் தீர்ந்து மனத்தோடும் தெளிந்து—அதனல் முடிவும் தெளிவும் கொண்டமனத்தோடு, கௌந்தேயா!—அர்ஜுனு! நீ வெம்சமத்து உற்று எழு—நீ கடும் போரைச் செய்ய விருப்பத்தோடு எழுவாயாக.

2 3
ஹதோவா ப்ராப்ஸ்யஸே ஸ்வர்கம்
4
ஜித்வாவா போக்ஷ்யஸே மஹீம்
2
தஸ்மாத் உத்திஷ்ட கௌந்தேய
3 4
யுத்தாய க்ருத நிச்சய:

(இ-ள்) ஹே கௌந்தேய—குந்தி புத்திரனே!, ஹதோவா-கொல்லப்பட்டாயாகிலும், ஸ்வர்க்கம்—சுவர்க்கத்தை, ப்ராப்ஸ்யஸே-அடைவாய். ஜித்வாவா-ஜயித்தாயாகிலும். மஹீம்
4
போக்ஷ்யஸே—பூமியை அனுபவிக்கப்போகிறாய், தஸ்மாத்-ஆகையால், க்ருத நிச்சய:—நீ நிச்சயம் பண்ணிக்கொண்டு, யுத்தாய உத்திஷ்ட—யுத்தம் செய்ய எழுந்திரு

சில தர்மங்களை அனுஷ்டிப்பது துன்பமாகவேயிருக்கும். அவற்றால் ஏற்படும் பலன் இம்மையில் பெற முடியாததாயிருக்கும். மறுமையில் மாத்திரம் நற்பயன் கிட்டும்' என்ற நம்பிக்கை கொண்டு அவற்றை அனுஷ்டிக்க முற்படுவோர் அரிதாயிருப்பர். மறுமையில் கஷ்டங்கள் வந்தாலும் இம்மையில் சுகம்தரும் என்றிருக்கும் கருமம் அதர்மமாயிருந்தாலும் அதை அனுஷ்டிக்கப் பலர் முற்படுவர் இம்மையிலும் சுகம், மறுமையிலும் சுகம் பயக்கும்' என்ற தர்மத்தை எல்லோரும் ஏற்பர். மறுமையில் நம்பிக்கையில்லாத நாஸ்திகரும் அத்தருமத்தை ஏற்பரேயொழிய விலக்கத் துணியார். உனக்கு எதிரியாக வந்திருக்கும் ஆசார்யர் பாட்டன்மார் முதலியோர் 'வென்று இருந்தாலும் இம்மையில் செல்வம் போர் செய்து மாண்டாலும், மறுமையில் செல்வம்! என்பதை நன்கு தெளிந்து இருக்கவோ இறக்கவோ இரண்டிற்கும்தயாராகிப் போர் பெய்ய வந்திருக்கின்றனர். வேதத்திலும், வேதம் கூறும் மறுமைப் பயன்களிலும் நம்பிக்கை கொண்டிருக்கும் ஆஸ்திகனுகிய நீ இச்சுய தர்மத்தைச் செய்ய ஏன் கலங்குகிறாய்? இம்மை மறுமை இரண்டிலும் நன்மை தரும் போரை உறுதியுடனும் உற்சாகத்துடனும் செய்ய இப்பொழுதே முற்படு' என்று கண்ணன் கூறினர்.

கூறிய போதும் அர்ஜுனன் தயங்கவே செய்தான் போரை மேற்கொள்ளவில்லை பகைவராய் வந்த பெரியோர்கள் விஷயமாய்த் தன் மனதில் அன்பும் அனுதாபமும் பெருகித் தடை செய்யும் பொழுது அத்

தடையை மீறிக்கொண்டு அவர்களை எப்படிக் கொல்வது? அக்கொலைத் தொழிலால் தனக்குப் பாவம் உண்டாகாதா? என்ற எண்ணம் அர்ஜுனனுக்கு உடாண்யிற்று. அதனால் கண்ணன் பாவம் அர்ஜுனனைப் பற்றாதிருக்கப் போர் செய்யுமுன். எவ்வித மனப்பான்மையைக் கொள்ளவேண்டும்' என்பதைப்பற்றி அடுத்தபடியாக விதிக்கிறார்.

**இன்பம் துன்பம் பேறு**
**இழவு சயாசயங்கள்**
**உன்பந்தத்து ஒக்க**
**உணர்வு எய்தி—வன்பந்தத்**
**தெவ் வகையார் வெம்சமத்தைச்**
**சேர்வுறு நீ பாவத்தை**
**இவ்வகையான்**
**மேலணையாய் இங்கு.**

(இ-ள்) இன்பம் துன்பம்— சுக துக்கங்களையும். பேறு இழவு—லாப நஷ்டங்களையும், சய அசயங்கள்—வெற்றி தோல்விகளையும், உன் பந்தத்து ஒக்க உணர்வு எய்தி—உனக்கு (அவை சம்பந்தமாக உள்ள) உறவை சமமாகப் பாவிக்கும் ஞானப் பண்பை அடைந்து. நீ வன் பந்த தெவ் வகையார் வெம் சமத்தை சேர்வுறு—நீ மிக்க ஒற்றுமையுடையுடைய பகைவர் கூடிய கொடிய போரை மேற்கொள். இவ்வகையான் இங்கு பாவத்தை மேலணையாய்—இவ்வாறு செய்வதால் இப்போரில் பாவத்தை அடைய மாட்டாய்.

2 3 2
**ஸுகது:கே ஸமேக்ருத்வா**
4 4
**லாபாலாபௌ ஜயாஜயௌ**
3 4
**ததோ யுத்தாய யுஜ்யஸ்வ**
**நைவம் பாபம் அவாப்ஸ்யஸி**

(இ-ள்) சுகதுக்கே—சுகதுக்கங்களையும். லாபா லாபௌ—லாபநஷ்டங்களையும் ஜயா ஜயௌ—வெற்றி தோல்விகளையும், ஸமேக்ருத்வா—சமமாக எண்ணி, தத:—அதன் பிறகு, யுத்தாய—யுத்தத்தின் பொருட்டு, யுஜ்யஸ்வ—கூடு, ஏவம்—இப்படியானால், பாபம்—பாபத்தை, ந அவாப்ஸ்யஸி—அடைய மாட்டாய்.

சுகம் லாபம் ஜயம் இவற்றைப் பெறவே எல்லோரும் விரும்புகின்றனர். முயல்கின்றனர். தானாகவோ முயற்சியாலோ வந்தால் அளவு கடந்து சந்தோஷிக்கின்றனர் துக்கம், நஷ்டம், தோல்வி இவற்றை வெறுக்கின்றனர். விலக்கப் பார்க்கின்றனர். தானாகவோ பிறிதொன்றைக் கருதிச் செய்யும் முயற்சியாலோ அவைகளில் ஒன்றோ பலவோ வந்தால் மிகவும் கவலை கொள்கின்றனர்.

'அவ்வாறின்றி ஒரு செயலை ஆற்றுவதால் வரும் சுக துக்கம், லாப நஷ்டம், ஜயம் தோல்வி இவைகளில் ஒரு ரகத்தை மாத்திரம் எப்பொழுதும் அடையவேண்டும்; மற்றொரு ரகத்தை அடையவே கூடாது என்ற எண்ணம் கொள்ளாமல் எல்லாவற்றையும் சமமாகக் கருதிச் செய்தால் பாவத்திற்கு ஆளாக வேண்டியதில்லை. சமமாகக் கருதினால் பேராசைக்கு இடமில்லாமல் போகும். பேராசையொழிந்தால் சமூகத்தில் தன்னையொழிந்த பிறருக்குத் தீங்கு செய்ய மனம் வராது அதுவே தனக்கும் பிறருக்குச் சுகம் தேடும் உண்மை மார்க்கம் ஆதலால் பலனில் சமத்வ புத்தி கொள்ளுவது உலக நோய்க்கே உரிய சிறந்த பரிகாரமாகக் கண்ணனால் சொல்லப்பட்டது. மனித சமூகத்தில் பல்வேறு துறைகளில் இருந்து உழைப்போர் கண்ணன் அர்ஜுனனை வியாஜமாக வைத்துக் கூறிய இவ்வுண்மையை அறிந்து கடைப்பிடிப்பார்களானால் உலகம் வியக்கத்தக்க ரீதியில் முன்னேறும் மகாத்மா இவ்வுண்மையை உணர்ந்து கடைப்பிடித்தார். உலகமும் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஆவல் கொள்ளவும் செய்தார் அதற்காகக் கீதையைப் படிப்பதில் தினம் அரைமணியாவது செலவிடவேண்டுமென்று அடிக்கடி சொல்லியும் வந்தார்.

இச்சுலோகத்திற்கு ஒரு உரை ஆசிரியர் பின்வருமாறு கூறுகிறார்: சுகதுக்கங்களுக்குக் காரணம் லாப நஷ்டங்கள். லாப நஷ்டங்களுக்குக் காரணம் ஜயாபஜயங்கள். ஆகவே காரண காரியம் இரண்டையும் சமமாக எண்ணி இரண்டின் விஷயமாக வரும் விருப்பு வெறுப்பைவிட வேண்டும்.

இதுவரைச் சொல்லப்பட்ட விஷயம் இன்னது என்பதையும் மேலே சொல்லப்போகிற விஷயம் இன்னது என்பதையும் அடுத்தபடியாகக் கண்ணன் சொல்லுகிறார்.

**சாங்கியத்தின் தன்மையின்மேற்**
**புந்தித்தகவு உரைத்தேன்**
**ஈங்குகன்ம யோகத்து**
**இயல்பில் இதன்—பாங்கியம்பக்**
**கேளாய் இப் புத்தியினைக் கிட்ட**
**வினைக்கட்டினை நீ**
**மூளாமல் நிற்றி முயன்று.**

(இ-ள்) சாங்கியத்தின் தன்மையின் மேல்—சாங்கிய தத்துவத்தை ஒட்டி, புந்தித் தகவு உரைத்தேன்—அறிவிற்கு உரியதைச் சொன்னேன், ஈங்கு—இப்பொழுது. நீ—, புத்தியினைக் கிட்ட—ஞானத்தைப் பெற. கன்மயோகத்து இயல்பில் இதன் பாங்கு இயம்பக் கேளாய்—கர்மயோகத்தில் இப்பகுதியின் தன்மையைச் சொல்லக் கேட்பாயாக, (அதனால்) வினைக்கட்டினை—பந்தத்தை, நீ முயன்று மூளாமல்—நீ உன் முயற்சிகொண்டு அதிகரித்துக் கொள்ளாமல், நிற்றி—(ஒரே நிலையில்) இருப்பாய்.

4 2
**ஏஷாதே பிஹிதா ஸாங்க்யே**
3 3 4 3
**புத்திர் யோகேத் விமாம்ச்ருணு**
3 3 4 2
**புத்த்யா யுக்தோ யயாபார்த**
3 3
**கர்ம பந்தம் ப்ரஹாஸ்யஸி**

(இ-ள்) பார்த்த—அர்ஜுனா!, ஸாங்க்யே—ஸாங்க்யத்திலுள்ள தத்துவ விஷயத்தில் ஏஷா புத்தி:—இதுவரை இவ்வாறு சொன்ன புத்தியானது, தே அபிஹிதா—உனக்குச் சொல்லப்பட்டது, யோகே—கர்மயோகவிஷயத்தில், யயா புத்யா—எந்த அறிவை, யுக்த: த்வம்—நீ அடைந்தால், கர்ம பந்தம்—கர்மத்தால் வரும் ஸம்ஸாரத்தை, ப்ரஹாஸ்யஸி—விட்டுவிடுவாயோ, இமாம்—(அந்த) இதை, ச்ருணு—கேள்.

கீதை முதல் அத்தியாயத்தில் அர்ஜுனன் அடைந்த சோகம் விவரிக்கப்பட்டது அதனால் சோகம் என்று பொருள் தரும் 'விஷாதம்' என்ற சொல்லால் அப்பகுதியைப் பெரியோர் 'விஷாதயோகம்' என்று வழங்குவர். பொருளின் உண்மைத் தன்மையை ஆராய்ந்து அறிவதே சோகத்திற்குப் பரிகாரமாதலின் தத்துவ ஆராய்ச்சியாகிய ஸாங்க்யத்தின் பகுதியைக் கண்ணன் சோகம் கொண்ட அர்ஜுனனுக்கு முதலில் உபதேசித்தார். அடுத்தபடியாக ஸாங்க்யத்தின் மற்றோர் பகுதி என்றே கொள்ளத்தக்க வேறோர் யோகத்தைப் பின்னும் கூறலானார். அதை அடுத்த இதழில் காண்போம்.

'நெருப்புப் பெட்டி வாங்கிவர வில்லையா?'

வீட்டிற்குள் நுழைந்ததும் முதலில் என் செவியில் பட்ட அனல் தெறிக்கும் வார்த்தை இதுவே. வாங்கி வர மறந்து விட்டேன் ஒரு நாள்கூட நெருப்புக் குச்சியின் தயவின்றி வீடு புகையாது. இதனால், எனக்கும் காந்தி மகிக்கும் புகைச்சல் ஏற்பட்டது. தீப்பொறி போன்ற வார்த்தைகள் எழுந்தன ; ஜுவாலை மூண்டது ; முடிவில் கோபக் கனல் கக்க, மீண்டும் கடை வீதிக்கு நெருப்புப் பெட்டி வாங்கப் புறப்பட்டேன்.

ஆதியிலே குகையில் வசித்த மனிதனும் அவளுக்குப் பயந்து தான் சிக்கி முக்கி கல்லைக கண்டு பிடித்திருக்க வேண்டும். நிலவற்ற இரவு நேரத்தில் அவளைப் பிரிந்து எங்காவது ஆனந்தமாகப் பொழுது போக்க அவன் சிக்கி முக்கி கல்லைக் கண்டு பிடித்திருக்க வேண்டும், என்றோ எதேச்சையாகப் பிறந்த ஒளி, சாகாமல் நின்று பல்வேறு ரூபங்களில் ஒளிந்தும் நிறைந்தும் நம் வாழ்க்கையில் 'கண்ணாமூச்சி' ஆடுகிறது.

நமது நாகரீகத்தின் வளர்ச்சிக்கு, ஒளி காட்டிய ஆதிகர்த்தாவை ஈசனை (பேயன் பித்தன் என்றழைக்கும் ரீதியில்) தீவர்த்தித் தடியன் என்றே கூற வேண்டும்.

இயற்கையின் வான வெளி வட்டங்கள் நம்மைச் சூழ்ந்து நின்றாலும் வானத்திலிருந்து வர்ணங்களை வழங்கினாலும் நெருப்பைக் கண்டுபிடித்த முதல் மனிதன் இருக்கிறானே அவனே ஆதிப் பரஞ்சோதி. சுடரொளி விளக்கு. நமது வணக்கத்திற்கும் உரியவன் ஆகிறான். அவன் யாரெனத் தெரியாத காரணத்தால் ஆதியாய், அனாதியாய், ஒளியாய், இருக்கும் ஈசனை பக்த கோடிகள், ஞானப் பிழம்பென்றும் தீப லக்ஷ்மி என்றும், தீக்குள் விரலை வைத்தால் ஈசனைத் தீண்டுமின்பம் கிடைக்குமென்றும் பலவாகப் போற்றுதலைக் காண்கிறோம். இதெல்லாம் உள்ளத்திலே உண்மையொளி படைத்தவர்கள் காட்டும் கலங்கரை விளக்கம்.

ஒளியில் நமக்குத்தான் எத்தனை ஈடுபாடு! வீடுகளிலே ஐந்து முகத்தோடு குத்து விளக்குக்குப் பொட்டிட்டு, பூச்சரம் சூட வணக்கம் செலுத்துகிறோம். சுற்றி வந்து கும்பிடுகிறோம்; கும்மியும் பாடுகிறோம். கார்த்திகை மாதத்திலே மாடங்களில், மதில்களில், மாடிகளில் கோபுரங்களில், குளிர் தென்றல் உலாவு குளக்கரைகளில், குளத்தில் மிதக்கும் தெப்பங்களில் எங்கும் வரிசை வரிசையான அகல் விளக்குகள். மேலும் பத்தாயிரம் தீபம், லக்ஷ தீபம் சொக்கப்பனை இப்படி ஒளி பொருந்தியதீபோற்சவங்க்ள்.கண் வழி ஒளியும் செல்ல, கருத்து வழி கடவுள் ஏக எங்கும் கண்டு களிக்கிறோம். ஒளியை வைத்தே விளையாடுகிறது சமயம்.

இந்த ஒளிப்பெருக்கிலே எல்லோருக்கும் பங்குண்டு. கார்த்திகைக்கு கோவில் செல்லலாம். காணலாம். கூட்டத்தோடு கும்மாளம் போடலாம். ஆனால் இன்றைய ஒளிக்கோயில், மின்சார நிலயத்தில் என்ன காண்கிறோம்? யாருக்காக அந்த மின்சாரத் தேக்கங்கள்? அழகுண்டா? இதிலே ஆர்வமுண்டா?

என் மனசிலே திடீரென இக் கேள்விகளால் அந்தகாரம் சூழ்ந்தது...உலகமே இரு வகையாகப் பிரிந்து நிற்கிறது. வெளிச்சம், இருள். ஆனால் இருளிலே ஒளியைக் காண்பதே கலை. அந்நாளில் இருட்பிழம்பு நிறைந்த மூலஸ்தானத்திலே கடவுளின் சாந்நித்தியத்தைக் கண்டார்கள்; கை கட்டி கரங்குவித்து நெஞ்சொடு நெக்கு நெக்காக உருகினார்கள். ஆனால் இன்று எல்லாம் வெளிச்சமாகப் போய்விட்டது; வெட்ட வெளிச்சமான மூலஸ்தானத்தின் ஒளி நமது இதயத்திலே பக்தியென இருளைப் படர வைக்கவில்லை.

ஒரு பக்தர் "ஆண்டவனே நீ எங்கே ஒளிந்து கொண்டாய்? இந்த அகண்ட உலகத்திலே இருள் நிறைந்த பகுதி எனது நெஞ்சந்தானே? இதை விட வாய்ப்பான இடம் நீ ஒளிந்து கொள்ள உனக்கு எங்கே கிடைக்கும்...வா"...என்று புலம்பினார் என்பதாக ஒரு ஸமஸ்கிருத சுலோகம் இருக்கிறது ஆகவே பக்தியென்ற இருள் நம் நெஞ்சத்தை விட்டகன்று அங்கே சூனியத்தை குடியிருக்க விட்டுவிட்டோம்.

கோயில்களிலே, கோபுரவாசல் வழியாக என்று ஒளி குடியேறியதோ அன்று முதல் பக்தியும் மடைப்பள்ளி வழியாக ஓடிவிட்டது. அந்நாளில் இருந்த பக்திப் பெருக்கும், மனச் சாந்தியும் இன்றைய நாளில் கிடைக்கின்றனவா? கிடைத்தால் அது பிளாக் மார்க்கெட்டில்தான் கிடைக்க வேண்டும்!

பக்தி ஒளியை நம்மில் எல்லோரும் அறிய முடியாது.சினிமா,ஆகா சினிமா என்பது என்ன? இருளிலே ஒளியைக் காட்டும் கலைதானே. ஒளிக்கு எவ்வளவு சக்தி, வலிமை உண்டென்பதை இருளில் தான் காண்கிறோம். ஒளி போன்ற

கவிதைகளை நாம் ரஸிக்கிறோமா? இல்லை. நிழலுக்குத்தான் உயிர் கொடுக்கிறோம். ஓவியங்களை ஒளி மங்கிய இடத்தில் பார்ப்பதில் தனி சுகம் உண்டு. அஜந்தா ஓவியங்களை குகை இருட்டிலே காண்பதில் எத்தனை ஆனந்தம் இருக்க வேண்டும். ஆனால் ஒளியை, உண்மைக்கும் உயர்வுக்கும், நன்றிக்கும் ஞானத்திற்கும் கல்விக்கும், கலைக்கும் உவமை கொடுப்பதிலிருந்து சினிமாவும் கலைகளுக்குள் சிறந்ததென நாம் சொல்லித்தான் ஆக வேண்டும். ஆனால் இருளைத் துன்பத்திற்கும், துக்கத்திற்கும், மோசம், பொய், வஞ்சனை முதலான துர் குணங்களுக்கும் துர் செயல்களுக்கும் உவமை கூறுவதால் இருட்டிலே விளையாடும் ஒளியை என்னென்று இயம்புவது. சினிமா ஒளியா? இல்லை இருளா?

இருளில் ஒளியாகவும், ஒளியில் இருளாகவும் நிற்பதை பரமாத்மா என்றுதான் சொல்லவேண்டும். இந்த ஒளிக்கெல்லாம் இன்று காளியாக இருப்பது 'எலக்டிரிஸிடி' இக்காளியின் திருவிளையாடல்கள் தாம் இன்றைய உலகத்தின் நாகரிகம். ஓட்ட சாட்டம் முன்னேற்றம், விஞ்ஞானத்தின் அடித்தனம் இம் மின்சாரமே.

மின்சாரம் வீடு பெருக்கும், சமையல் செய்யும்; பசுவைப் பால் கறக்கும்; பல பொருள்களை உலர்த்தியோ வறுத்தோ பொடியாக்கும்; நெல்லை வேக வைத்துக் குத்தி அரிசியாக்கும்; பயறுகளைத் தோல் போக்கிப் பருப்பாக்கும்; இட்லிக்கு அரைத்து தோசைகளாகச் சுட்டு அடுக்கும்; ரொட்டியாக அறுத்து அவற்றை வாட்டும்; துணிகளை உடுப்புகளை இஸ்திரி போடும்; விளக்கேற்றும்; குளிர் காலத்தில் காய்ந்து அனல் தரும்; வேனிற் காலத்தில் வீசி வெம்மை குறைத்து பகலில் வேலை செய்விக்கும்; இராவில் தூங்குவிக்கும்; வந்த விருந்தினரை மணியடித்துத் தெரிவிக்கும்; அவருக்குத் தலைவாயிலைத் திறக்கும்; விரைவில் இயங்கும் படிக்கட்டுகளால் அல்லது ஏற்றத்தால் அவரை மேல் மாடத்திற்கு ஏற்றித் தலை வாயிற் கதவை அடைக்கும். வான் ஒளியை அவரும் அவரது நண்பரும் கேட்டு மகிழச் செய்யும்; தூரத்தியுள்ள நண்பரோடு அவர் சல்லாபஞ் செய்ய உதவும்; உணவுப்பொருள்களை, விரைவிற் செய்து எண்ணிப் பொதியும்; உணவுப் பொருள்களைச் செய்து காற்றில்லாத கலங்களில் அளந்து வைத்து வாயை உருக்கிமூடும்; செய்தித் திரட்டி உருக்கி அடித்து எண்ணி அச்சிட்டு கொண்டு தரும்...............

இப்படியாக மின்சாரத்தின் பெருமையை—ஒளியின் சிறப்பை யாண்டும் காண்கிறோம். நமக்காகச் சமைக்கிறது; நம்மையே கழுவேற்றுகிறது. இந்த மின்சாரம் நமக்காக வருங்காலத்தில் சூல் கொண்டால் ஆச்சர்யப்பட வேண்டாம்? பெட்டைக் கோழிக்காக, இது முட்டைகளை அடை காப்பது போல, பிள்ளைப்பேறு அடையக் கூடாதா?

விஞ்ஞானத்தினால் மக்கள் குலம் அளத்தற்கரிய நன்மைகளை அடைகின்றன. மின்சாரம் இத்தகைய நன்மைகளைச் செய்வதை அறிகிறோமா? எங்கே செய்கின்றன? எங்கள் சயன்சு வாத்தியார் வீட்டிலே ரேடியோ கிடையாது; மின்சார விசிறி கிடையாது; ஏன் மின்சார சாதனமே, செப்புக் கம்பி கூடக் கிடையாது. ஆனால் கரி மூட்டையும் கறியும் காபியும், விற்பனை செய்கிறார்களே. அங்கேதான் மின்சாரம் துணை புரிகின்றன.

விஞ்ஞானிகள், அன்றாடம் கண்டு பிடிக்கும் புத்தம் புதிய உண்மைகள் கருவிகள் யாருக்குப் பயன் தருகின்றன? பண வெறியர்களுக்கும், அதிகார ஆதிக்க வெறியர்களுக்கும் பயன் தருகின்றன. மின்சாரத்தைக் கண்டு பிடித்த விஞ்ஞானி உலகம் அதனால் உய்யும் ஏழையும் பாழையும் நலமடைவார்கள் என்ற நோக்கத்தோடுதான் கண்டு பிடித்தான். உலகத்திலுள்ள பணக்காரர்களுக்கும், அதிகார வெறியர்களுக்கும் இந்த அற்புத சாதனத்தை தம தாக்கிக்கொண்டு ஆட்சிசெலுத்துகிறார்கள்.

சிருஷ்டிகர்த்தாவிடம் அதன் நலனைப் பிறருக்கு வழங்கும் உரிமை இல்லை. நெல்லை விளைவிக்கிறான் விவசாயி. சாக்குடன் வந்து விடுகிறான் வியாபாரி. மின்சாரத்தைக் கண்டு பிடிக்கிறான்? கம்பனியுடன் கூடி விடுகிறான் பணக்காரன். புதிய மருந்து கண்டு பிடித்துள்ளார்களா; மொத்த விற்பனைக்குப் போய் நிற்கிறான். உலக நன்மைக்காக கண்டுபிடிக்கிற எந்தப் பொருளையும் விலை கூறி அட்டை போல உறிஞ்சி வாழ வந்து விடுகிறார்கள் பணக்காரர்களும் அதிகார வெறியர்களும்.

உண்மையான அதிகாரம் யார் கையில் இருக்கிறது? கண்டுபிடிக்கிற விஞ்ஞானி கையிலா? கவி பாடுகிற கவிஞன் நாவிலா? தூலிகை பிடிக்கும் ஓவியன் திரையிலா? அல்ல. உலகத்தின் நன்மைக்காக புதிய புதிய ஒளிகளைக் கண்டுபிடித்து விடுவதால் மட்டும் பயன் உண்டா?

இல்லவே இல்லை. அந்த ஒளிகளையும் ஒளிப்பிழம்புகளையும் விழுங்கும் ராகு கேதுக்கள்-பண வெறியன் -அதிகாரவெறியன்- இருக்கின்றன.

இந்த ராகு கேதுக்கள் இருக்கும்வரை. இரவைப் பகலாக்கும் மின்சாரம் இருந்தும் ஒன்றுதான், செத்தும் ஒன்றுதான்.

விஞ்ஞானிகளையும் அறிவாளிகளையும் நொந்து பயனில்லை. ஆதிக்கமும், அதிகாரமும் பணமும் வைத்திருப்பவர்கள் ஒளியின் திருடர்கள். அவர்களை நொந்து கொள்ள என்னாலும் உங்களாலும் முடியாது.

* * * * *

என் வீட்டில் மட்டும் எலக்டிரிஸிடி இருந்தால் என் சிந்தனைப் பொறி இப்படிச் செல்லுமா?

—O—



# சொப்பன வாழ்க்கை

ஆர்வி

## 1

பொழுது விடியச் சிறிது நேரம் இருக்கும்போதே பெங்களூர் மெயில் ஸெண்ட்ரல் ஸ்டேஷனுக்கு வந்துவிட்டது. வழக்கமாக வரும் நேரத்தில்தான் அது வந்து நின்றது. இரண்டு வருஷங்களுக்கு முன்பென்றால் இந்த வண்டி வந்து நின்றதும் ஸ்டேஷன் இப்படியா இருக்கும்? ஒரே ரகளைப்படாதா? மிலிடெரிக் கூட்டமும் பணப் புழக்கமும் அதிகமாயிருந்த நாட்கள் அவை. கூட்டம் ஜே, ஜே என்றிருக்கும் டாக்ஸிகள் பறக்கும்; ரிக்ஷாக்கள் எங்கும் வட்டமிடும்; கூப்பிட்டால் கூட கூலிகள் வர மாட்டார்கள். இப்படியா 'ஹோ' என்று போய் விடும்!

இப்போது வரிசையாக நின்றிருந்த போர்ட்டர்களுககே அலுப்பு. கிராக்கி ஏதாவது சிக்கும் என்பதில் அவர்களுக்கு நம்பிக்கை போய்விட்டது. ஒரு வருஷத்துக்குள்தான் இந்த ஜனங்களிடம் எத்தனை மாறுதல்! திடீரென்று இந்த ஜனங்களுக்கு வலு வந்துவிட்டதா. அல்லது மனசு மாறிப் போய் விட்டதா? எவ்வளவு பெரிய பெட்டியாய் இருந்தாலும் போர்ட்டர் உதவியில்லாமலேயே தூக்க ஆரம்பித்து விடுகிறார்களே! போட்டர்கள் அப்படியும் ஆசைக்கு மோசம் செய்யாமல் 'கூலி, கூலி' என்று கேட்டுக்கொண்டே அவநம்பிக்கை நடையிலே பெட்டி பெட்டியாக எட்டிப் பார்த்தார்கள். அநேகமாய் எல்லா வண்டிகளுமே காலியாகிவிட்டன.

"அடே என்னடா வெறும் செகிண்டுகிளாஸ் வண்டியைப் போய் எட்டிப் பாத்துக்கினு நிக்கிறே?" என்றான் ஒருவன் மற்றவனைப் பார்த்து.

கூலி இல்லாவிட்டால் கேலிப்பேச்சுக்குப பஞ்சமா? "வண்டிங்கள்ளாம் உடையாமே கொள்ளாமே வந்திருக்குதான்னு பார்க்க வேணுமாடா?" என்றான் எட்டிப்பார்த்தவன்.

இருவருமு சிரித்தார்கள்.

இந்தச் சிரிப்பிற்கிடையே வண்டிக்குள் சிறிது சந்தடி உண்டாயிற்று.

"போர்ட்டர், செண்டிரல் ஸ்டேஷனா இது?" சிரித்துக்கொண்டிருந்த போட்டர் இந்தக் கேள்வி வந்த திக்கைப் பார்த்தான். கௌரவம் வாய்ந்த குடும்பத்தைச்சேர்ந்த ஒரு பெண் எழுந்துகொண்டிருந்தாள். பக்கத்தில் பெட்டி, படுக்கைகள் இருந்ததைக் கண்ட அவன், "ஆமாம் அம்மா, கூலிவேணுங்களா?" என்றான்.

"இன்னும் பொழுது விடியல்லே போலிருக்கே?"

"வெளியிலே ரிக்ஷாவிலே கொண்டு வச்சுடறேங்க"

"ரிக்ஷாவா?"

"ஆமாங்க....பஸ், டிராம் ஓட இன்னும் அரைமணி ஆவுங்களே!"

அந்தப்பெண் மௌனமாக ஜன்னலைப் பார்த்துக் கொண்டு வெளியிலே எட்டிப்பார்த்தாள். போர்ட்டர் அவளுக்கு இடம் கொடுத்து ஒதுங்கிக் கொண்டான். வயசு இருபதுக்கு ஒன்றிரண்டு குறைவாக இருக்கலாம். சிவந்த மேனி. மெத்தையில் சாய்ந்திருந்த கன்னம் மாதுளை முத்துமாதிரி இன்னும் சிவந்துபோயிருந்தது. உதய நட்சத்திரம்போல முகத்தில் வெளிச்சம் பட்டதும் பளீரென்று காதுகளில் வைரத்தோடு மின்னியது. தூக்கத்தில் தலைமயிர் லேசாகச் சிலும்பியிருந்தது. நன்றாகத் தூங்கி அமைதியடைந்த கண்கள் பாலைப் பூசியது போல் பளபளத்தன.

'நிச்சயம், ஒரு நால்ரூபாய்க்கும் பழுதில்லே. கொடுத்ததை வாங்கிக்கிட வேண்டியதுதான். அப்புறம் பொழுதுக்கும் பேரம் எதுவும் படியாது' என்று போர்ட்டர் மனசுக்குள் முடிபோட்டுக் கொண்டான்.

"படுக்கை எடுத்து வரட்டுங்களா?"

"சரி வா...டாக்ஸி கிடைக்குமா?"

"கிடைக்காமே என்னுங்க. முன்னியப்போலவா? வேண்டியது கிடைக்குங்க!"

வெளியில் வந்ததும் டாக்ஸிகாரனுக்கும் பாதி நம்பிக்கைதான், இருந்தாலும், "இந்த நேரத்திலே

மீட்டர் கணக்கெல்லாம் இல்லை அம்மா! மயிலாப்பூருக்கு அஞ்சு ரூபாய் கொடுத்துடணும்'' என்றான். கொடுக்க முடியாதபோதிலும் அவன் இந்த 'டிரிப்'பைக்கைவிடத் தயாராய் இல்லை. சொல்லிப் பார்ப்பது அவன் வழக்கம். பலித்தால் பலிக்கட்டுமே—

"எது வழக்கமோ அதை வாங்கிக்கோயேன் இதிலென்ன?'' என்றாள் அவள்.

போர்ட்டருக்கு எட்டணாவைக் எடுத்துக் கொடுத்துவிட்டு வண்டியிலேறி உட்கார்ந்துகொண்டாள். டாக்ஸி வளைவைத் தாண்டிக்கொண்டு மெயின்ரோடு வழியாக மயிலாப்பூரை நோக்கிச் செல்லவாரம்பித்தது. ஆனால் வண்டியில் வந்தவளுடைய கோமளமான மனசோ கட்டிலடங்காமல் அமைதியில்லாமல் தவிக்க ஆரம்பித்தது.

கீழ்வானத்திலே இருட்டை விழுங்கவரும் வெளிச்சம் பரவும் சமயம். அவளுடைய மனசில் கவிந்திருக்கும் இருளைப் போக்கும் வெளிச்சமாக இந்தப் பிரயாணம் இருக்குமா?

"இருக்காது; ஒருபோதும் இருக்காது. இரண்டு நேர்க்கோடுகள் எப்பொழுதும் ஒன்றுசேர முடியாது.''

அவள் சம்பந்தப்பட்ட மட்டில் அவளிடத்தில் இந்தப் பதில் தயாராய் இருந்தது.

அவளுக்கு மனசுக்குள் ஒருபுறம் திகிலாய் இருந்தது. காரணம் தெரியாத அச்சம், எதிர்காலத்தைப் பற்றி நிச்சயம் தெரியாத ஓர் அவஸ்தை அவளைப் பிடுங்கிக்கொண்டே இருந்தது. வண்டி ஐலண்டு கிரவுண்டு போய் மௌண்ட்ரோடைத் தாண்டிக் கொண்டிருந்தது.

ஒரு மாதத்துக்கு முந்திதான் அவள் இதே பாதை வழியாகச் செண்டிரலுக்குச் சென்றாள். பக்கத்தில் அவளை ஊருக்கு அனுப்ப ஸ்டேஷனுக்குக்கொண்டு விட வந்த அண்ணா உட்கார்ந்திருந்தான். இருவரும் குதூகலமாய்ப் பேசிக்கொண்டே வந்தனர். வயசில் ஐந்தாறு வருஷம் மூத்தவனே ஒழிய வயசிலிருந்த வித்தியாசமெல்லாம் பெரியவன், சின்னவள் என்ற பேதமெல்லாம் அவளுடைய மணவாழ்வின் ஸ்தானத்தால் விலகிவிட்டன. அவளுக்கு அவனுக்குத் தெரிந்ததைவிட சில விஷயங்கள் அதிகமாகவேத் தெரியும். மெட்ரிகுலேஷன்வரையிலும் படித்ததனால் மட்டும் அல்ல; ஐநூறு ரூபாய் சம்பளம் வாங்கும் உத்தியோகஸ்தனின் மனைவி அவள். பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன் அவள் கணவன். அதட்டி ஒரு வார்த்தைக் கேட்டு உரத்து ஒரு வார்த்தை பேசி அறியாதவன் அவன்.

இட்ட ஏவல்களைச் செய்ய பலர் இருந்தனர். பெரிய மனித தோரணையில் நடைபெறும் குடும்பத்தின் மூத்த எஜமானி அவள். இன்ஷியூரன்ஸ் கம்பனியில் நூற்றைம்பது ரூபாய்ச் சம்பளத்தில் உள்ள அண்ணாவைவிட, அவனுடைய வெளி விவகாரங்களில் உள்ள அநுபவங்களைவிட அவள் நிர்வாகம், பொறுப்பு முதலிய பல விஷயங்களைத் தெரிந்துகொள்ளச் சந்தர்ப்பம் இருந்தது. எவ்வளவோ நூற்றைம்பது ரூபாய் ஆசாமிகளை அவள் தினம் தினம் தன் கணவனிடம் வந்து நிற்க நேரும்போது கண்டிருக்கிறாள். இவன் ஒரு பொருட்டா? ஆனால் இவனைப் பொருட்டாக எண்ணித்தான் அவள் இன்று திரும்பி வந்திருக்கிறாள். அண்ணாவின் வீட்டில் முன்பு ஒரு மாதம் போலத் தங்கியிருந்தபோது குடும்ப வரவு செலவு ஒருவாறு அவளுக்குத் தெரிந்திருந்தது. அண்ணாவோடு கூடவே இருந்த அவள் தம்பி குமார் வேறு அறுபது எழுபது வீட்டுக்குக் கொடுப்பான். நூறு ரூபாய் சம்பளம் வாங்குவானே என்னமோ அவன் உடைகளையும் வாரம் தவறாமல் சினிமா போவதையும் பார்த்தால் நூற்றைம்பது அவனுக்கு மட்டும் போதுமா என்பதே சந்தேகம்தான் வீட்டில் ஒவ்வொன்றையும் கணக்குப் போட்டு, சிக்கனமாக எண்ணி எண்ணிச் செலவிடுவதைப் பார்த்து அவள் மனசுக்குள் சிரித்திருக்கிறாள். ஒவ்வொரு நாளும் தான் இருப்பதால் இவர்கள் குடும்ப பட்ஜெட்டில் துண்டு விழுவதற்கு இடமளிக்க கூடாது என்று கருதி மறைமுகமாகப் பணமோ, பண்டமோ எந்த ரூபத்திலாவது உதவி செய்வாள். அவ்விதம் ஊருக்குப் போய்விட்டால் போதும் என்று துடித்துக் கொண்டிருந்தவள் இன்று அதே வீட்டுக்குத் திரும்பி வருகிறாள்.

திடீரென்று இவளைப் பார்த்தும் அண்ணா தான் என்ன நினைப்பார்! அந்த மன்னியும் அவள் கண்களும்—

'சே. சே...இங்கே ,எத்தனை நாளைக்கு இருக்க முடியும்?'

அவள் கண்களில் கண்ணீர் வந்து விடும் போலிருந்தது. வெகு பிரயாசப்பட்டு அடக்கிக்கொண்டு, "எந்த இடம் அப்பா இது?' என்றாள் டிரைவரிடம்.

"ராயப்பேட்டை ஆஸ்பத்திரி!"

"ஓ! — மயிலாப்பூர், ரங்கா கார்டன்ஸ் முதல் வீடு......தெரியுமா?''

"தெரியுது......"

வண்டி வீட்டு வாசலில் வந்து நின்றது. வாசற்படியில் பால் பாத்திரத்துடன் நின்ற மன்னி வாசற்படியிலும், மாடி முகப்பில் நின்ற அண்ணா அதே இடத்திலும், குளிப்பதற்குத் துண்டைக் கட்டிக்கொண்டு வாயில் பிரஷ்ஷைக் கௌவிக் கொண்டு நின்ற குமார் கம்பிகளுக்கிடையிலும் அப்படி அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்றார்கள்.

குறுக்கே ஓடிவந்த நாலைந்து வயசுச் சிறுமி ஒருத்தி மட்டும், "எங்க சுசி அத்தை வந்துட்டாடோய்யா!'' என்று கைகளைக் கொட்டிக் கொண்டு கூத்தாடினாள்.

மன்னி சிரிக்க யத்தனித்துக்கொண்டே வரவேற்கும் தோரணையில் தலையை அசைத்தாள். சுசிலாவோ இத்தகைய வரவேற்பில் இருந்த அதிருப்தியை மறைக்க புன்சிரிப்புடன் தன்னருகில் ஓடிவந்த குழந்தை சரோஜாவை ஆசையுறத் தழுவிக் கொண்டாள்.

## 2

சொல்லப்போனால் அவள் டாக்ஸியைவிட்டு இறங்கியதிலிருந்து வீட்டில் இருப்பவர்களைப் பார்த்துப் பேசியவரையில் அவ்வளவு முக்கியமல்லாத விஜயமாய் இருக்கலாம். ஆனால் உண்மையில் அது பார்ப்பதற்கு எவ்வளவு சுவாரஸ்யமான விஷயம் என்பதை வர்ணிப்பது மிகவும் கடினம்.

"ஏன் வந்திருக்கிறாள், எதற்கு வந்திருக்கிறாள்?" என்பவை ஒவ்வொருவர் மனசிலும் கிடந்து உழல, இதை மற்றவரிடம் கேட்கவும் முடியாமல் கண்ணால் மௌனமாய்ப் பார்த்து, உற்சாகம் கொண்டதுபோல முகத்தைப் பாவனைச் செய்துகொண்டு நின்றதை சுசீலா வெகு நுட்பமாகக் கவனித்தாள்.

சொல்லமுடியாத அவஸ்தைப்படும் அவர்களைப் பார்த்து, "என்னமோ தோன்றிற்று உங்களைப் பார்த்துவிட்டுப் போகலாம் என்று வந்துவிட்டேன். நீங்கள் என்னை எதிர்பார்க்கவில்லையே?" என்று கேட்டுவிட்டும் போலியாகச் சிரிக்க முயன்றாள்.

"அதனாலென்ன, நீ எதற்கு வந்திருந்தாலென்ன சுசீ! இன்னும் இரண்டு வருஷமோ, மூன்று வருஷமோ என்று இருந்தோம் எப்படியோ வரவேண்டும் என்று வந்தாயே!" என்றாள் மன்னி

"ஒரு லெட்டர் போடக்கூடாதா சுசீ?" என்றான் குமார் உண்மையிலேயே ஆதங்கத்துடன். அவன் கூறியதை ஆமோதித்தான் அண்ணா. அந்த ரங்கத்தில் குமாருக்குத்தான் தான் வந்ததில் மகிழ்ச்சி என்பதைக் கண்டுகொண்டாள் சுசீலா.

இதற்குப் பதில் சொல்லுமுன் சுசீ குழந்தையிடம் கொஞ்சினாள். அதற்குள் காபி வந்துவிட்டது. அந்த உபசாரத்தில் லெட்டர் போட முடியாததைப்பற்றிக் கேட்க எல்லாருக்குமே மறந்துவிட்டது.



சுசீலா முன் தடவை வந்திருந்தபோது தங்கியிருந்த மாடி அறையிலே இப்பொழுதும் இருக்க விரும்பினாள். பெட்டி படுக்கைகளை அங்கே கொணர்ந்து வைத்துவிட்டு ஆபீசுக்குப் போய்விட்டான் குமார். எப்போதும் அந்த மாடியில் சூழ்ந்திருக்கும் ஒரு சூனியம் அவளுக்கு மிகவும் பழக்கமானதுபோல இருந்தது. அந்தச் சூனியத்திலே அவள் கலந்து ஒன்றாகிவிட விரும்பித்தான் சென்னைக்கு வந்தாளோ? எதிரே ஒரு பீரோவில் நிலைக்கண்ணாடி பதிந்திருந்தது. அதில் தென்பட்ட அவள் முகத்தைப் பார்க்க அவளுக்கே லஜ்ஜையாக இருந்தது. இந்த அழகினால் எல்லாம் அவளால் எதைச் சாதிக்க முடிந்தது? அவளது யௌவனமும் அந்த யௌவனத்தைச் சோபிக்கச் செய்கிற மினுமினுப்பும் சற்றும் மங்கவுமில்லை; மறையவுமில்லை. பார்வைக்குப் பதினெட்டு வயது போலத் தோற்றும் அவள் உண்மையில் இருபத்திரண்டு வருஷங்களைப் பார்த்துவிட்டாள் என்று எந்தக கண்களால்தான் கூறமுடியும்?

'அழகை வர்ணிக்க வேண்டியதில்லை; ஆனால் அந்த அழகினால் விளைகிற விளைவுகளைச் சித்தரித்தால் போதும்' என்று ஒரு பிரபல கவி கூறியிருக்கிறானம்! இந்த நினைப்பு வந்ததும் தன் அழகான கூர் விரல்களினால் வனப்பு மிகுந்த முகத்தைக் கோரமாகக் கிழித்துக்கொண்டுவிடலாமா என்று எண்ணினாள். ஆனால் அடுத்த நிமிஷமே, அப்படிச் "செய்ய வேண்டியதற்கான அவசியம் என்ன வந்துவிட்டது?" என்று தோன்றிற்று.

திடீரென்று புறப்பட்டு வந்ததற்கான காரணத்தை இன்று வேணுமானால் இவர்களிடம் சொல்லாமல் மழுப்பிவிடலாம். ஆனால் இன்னும் ஒரு

வாரமோ அல்லது ஒரு மாதமோ கழித்து?

"எப்படியும் தெரிந்து கொள்ளட்டும் அதற்கெல்லாம நான் எப்படிக் கவலைப் பட முடியும்? எதற்காக உண்மையில் நான் கவலைப்பட்டுக் கொண்டிருந்தேனே [illegible] இது பெரிது? பெங்களூரிலிருந்து நாளைக்கே கடிதம வரும் வரட்டுமே! நான் கொஞ்சம தணிவாகப் போயிருக்கலாமோ? அதை எண்ணி என்ன பிரயோசனம் இனிமேல். நடந்தது நடந்துவிட்டது கண்ணுக்கு முன்னால் கணவன் இன்னொருத்தி கையைப் பற்றுவதை—அது சாதாரணமாகவே இருக்கட்டும் — அதைச் சகிப்பதற்கு நான் தயாராய் இல்லை. எல்லாம் முடிந்துவிட்டது. இனி என்ன செய்யவேண்டும் என்பதுதான் முக்கியம். எதுவும் நடக்கிறபடி நடக்கட்டும்" என்று அவள் தனக்குள்ளாகவே கூறிக் கொண்டாள் பிறகு அப்படி அவசியம் எதுவும் நேர்ந்தால் என்ன சமாதானம் கூறுவது? "ஏதோ மனசுக்குப் பிடிக்கவில்லை; கிளம்பிவிட்டேன்" என்று சொல்லிவிடலாமா என்று நினைத்தாள். இந்தச் சமாதானத்தில் சிறிதும் விவேகம் இல்லை என்பது அவள் மனசுக்கே நன்கு புலப்பட்டது. சென்ற தடவை இங்கு வந்திருந்தபோது அண்ணா, மன்னி, தம்பி மூவருக்குள்ளும் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது "ஒருவர் செய்வது மற்றவருக்கு எப்போதும் சரியாகப்படும் என்று சொல்ல முடியாது. பார்க்கப் போனால் இது எங்கும் சகஜம். ஆனால் விட்டுக் கொடுத்து ஒத்துப்போவதில்தான் இருக்கிறது பெருமை" என்று அவள் சமரஸப் படுத்தி வைத்தாள். இஷ்டத்துக்கு விரோதமாய் இருந்தபோதிலும் அண்ணாவோ வேறு யாருமோ சுசீலாவின் வார்த்தைக்கு மறுவார்த்தை பேசத் துணியவில்லை. அவளுக்கு அதனால் மதிப்பு ஒரு படி உயர்ந்ததுபோலிருந்தது. அத்தகைய சுசீலாவா இன்று விளையாட்டுக் குழந்தைபோல இந்த நொண்டிச்சமாதானம் கூறுகிறாள் என்று இவர்கள் எண்ணமாட்டார்களா? பிடிக்கவில்லை என்றால் கிளம்பிவிட வேண்டுமா என்று யாருக்கும் கேட்கத் தோன்றாதா என்ன? ஆனால் உண்மைதான் என்ன? பிசகு யார்மேல்? நிச்சயம், கிளம்பியது தன் பிசகல்ல என்பது அவளுக்குத் தெரியும்.

"நீ எங்கு வேண்டுமானாலும் போகலாம். உனக்குச் சர்வ சுதந்தரமும் கொடுத்துவிட்டேன். கொடுப்பதற்கு எனக்கு உரிமையில்லை என்று எண்ணினால் அதுவும் உண்மைதான். உனக்கே அந்தச் சுதந்தரம் இருக்கிறது" என்ற வார்த்தைகளை ஒரு புருஷன், அதுவும் செய்வதைச் செய்துவிட்டு சொல்லக்கேட்ட பின்பும் அந்தப் பிசகு யார்மேல் என்பதைச் சொல்லவா வேண்டும்?

"என்னவானாலும் சரிதான்; இது என் சொந்த விஷயம், இதில் பிறர் எப்படித் தலையிடக்கூடாதோ அதைப்போல இதைப்பற்றி யாரும் எதுவும் கேட்கவும் கூடாது கேட்டாலும் நான் பதில் சொல்லக்கூடாது எதற்காகச் சொல்வது?" என்று முடிவு செய்துகொண்டாள்.

சிறு வயசிலும் சரி, கல்யாணமாகிப் புருஷன் வீடு போனபின்பும் சரி, அவளுக்கு வீம்பும் பிடிவாதமும் அதிகம் என்று எல்லாருக்குமே ஒரு நினைப்பு. கிராமத்தில் இருக்கும் அவள் தந்தையே இப்படிக் கூறுவதை அவள் கேட்டிருக்கிறாள்.

"ஏற்கனவேயே பிடிவாதம் ஜாஸ்தி. இதில் அண்டுவார் அடக்குவார் இல்லாமல் கையில் வைத்துச் செல்லமாய்த் தாங்கும் குடும்பத்தில் வேறு வாழ்க்கைப்பட்டுவிட்டாள். கேட்பானேன்? அவள் சுபாவம் அது என்று விட்டுவிடு; போ!" என்று அவர் ஒரு சமயம் தன் தாயிடம் கூறியது அவளுக்கு ஞாபகம் வந்தது. அதற்கு அடுத்த வருஷமே அவள் தாயார் இறந்துவிட்டாள். ஆனால் அவர் அன்று கூறிய வார்த்தைகள் அவள் மனத்திலிருந்து அழியவில்லை. இதை விட்டால் அங்கு அப்பாவிடம் போக

வேண்டியிருந்தாலும் இருக்கும். ஒரு வேளை சாப்பிடாமல் படுத்துக்கொண்டுவிட்டதற்கு அம்மாவிடம் இப்படிச் சொன்னவர் கிளம்பிவந்துவிட்ட மர்மம் புரியாமல் இருந்தால் எதைத்தான் சொல்லமாட்டார் இவருடைய பெண்ணுக்குப் பிடிவாதம் அதிகம் என்ருல் அது அவரிடமிருந்துதான் ஏற்பட்டிருக்கிறது என்பதை அவர் எங்கே ஒப்புக்கொள்ளப் போகிருர்? இரண்டு பிள்ளைகள் பட்டணத்தில் சமபாதிக்கும்போது கூப்பிடக் கூப்பிட அவர்களுடன் வந்து இருக்காமல் கிராமத்திலேயே பொங்கித் தின்றுகொண்டு உட்கார்ந்திருப்பதுமட்டும் வீண் பிடிவாதத்தில் சேர்ந்ததில்லையா?

பெண்ணுகப் பிறந்துவிட்டால் எவ்வளவு சங்கடம்! அவள் எவ்வளவு பலஹீனமாய் இருக்கிருள் நியாயம் என்பதற்காககூட அவள் எதையும் சுதந்தரம் என்ற பெயருடன் செய்ய முடியாது ஆனல் சுசீலா இதையெல்லாம் தாங்கி நிற்கத்தான் வேண்டும். அண்ணுவோ, அப்பாவோ குறுக்கே வந்தாலும் சரிதான் சுசீலாவின் விஷயத்தில் அவர்கள் தலையிட முடியாது. அவர்கள் தலையிட்டு நடக்கக்கூடிய விஷயமல்ல இது. !

கீழேயிருந்து, 'சுசீ!'' என்று மன்னி அழைத்ததைக கேட்ட பின்புதான் அவளுக்குச் சுயஉணர்வு வந்தது.

வந்ததும் வராததுமாக இவ்விதம் தனியாக உட்கார்ந்து குருட்டு யோசனை செய்வது அவர்களுக்கு மேலும் சந்தேகத்தைத்தான் வளர்க்கும் என்று தோன்றியது. சென்ற தடவை எவ்வளவு கலகலப்பாக இருந்தாள்! இப்பொழுது மட்டும் இதென்ன அசடடுத்தனம்!

மனசைத் திடம் செய்துகொண்டு கீழே வந்ததும், "இல்லை மன்னி, ரெயிலில் அசாத்தியக்கூட்டம். அந்த அசதி! சாப்பிட்டுவிட்டு நன்ருக ஒரு தூக்கம் போடவேண்டும்'' என்ருள்.

"செகிண்ட் கிளாசிலுமா கூட்டம்?'' "உம்—''

"சரி; வெந்நீர் எடுத்துவைத்திருக்கிறேன். ஸ்நானம் செய்துவிட்டுச் சாப்பிட வா, போ!''

"ரைட், இதோ!''

குளிப்பதற்குத் துண்டையும் சோப்பையும் எடுக்க மாடிக்கு வந்தபோது அவளுக்கே சிரிப்பு வந்தது. "பொய்யும் புளுகும் ரொம்பச் சரளமாய் வர ஆரம்பித்துவிட்டதே எனக்கு'' என்று கூறிக்கொண்டாள்.

சாபபிட உட்காருகையில் "அண்ணு ஆபீசுக்குப் போனதே தெரியவில்லையே. சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டான?''

"அவர் ஆபீசுக்கு இன்று போகவில்லை. நீ வந்து சேர்ந்ததற்குத் தந்தி கொடுக்கப் போயிருக்கிருர். போன தடவையே தந்தி கொடுக்காததற்கு உன் வீட்டுக்காரர் எழுதவில்லையா? நீ முன்னுல் சாப்பிடு, அவர் மெதுவாக வரட்டும்.''

சுசிலா அவசர அவசரமாய் ஒரு வாய் அள்ளிப போட்டுக் கொண்டு தூங்கப் போவதாகச் சொல்லி விட்டு மேலே போனுள். படுக்கையைப் போட்டு அதன்மேல் படுத்தபடி வெறுமே கண்களை மூடிக் கொண்டாள். அந்த கண்கள் மட்டும் என்ன செய்தும் மூட மறுத்து விட்டன.

(தொடரும்.)

இரண்டு ஆணிகளை ஒன்றின்மேல் ஒன்ருக நிறுத்தி அதன் மேல் ஒரு நாணயத்தையும் நிறுத்தி மூக்கின்மேல் வைத்து 'சரபல்லம்' செய்யும் விசித்திரம் இது. கொலம்பியா சர்வகலா சாலை மின்சார நிலையத்தில் இத்தகைய அதிசயம் செய்து காட்டப்பட்டது.



அதிகச் செலவில்லாமலும், சாம்பலைப்போட 'டிரே' இல்லாமலும் ஸிகரெட் பிடிப்பதற்கான சாதனத்தை மேலே பாருங்கள். இதை மாஜி போலந்து ஸோல்ஜர் கண்டுபிடித்தார். இதற்குப் புகையிலை அதிகம் தேவையில்லையாம்.

அன்புள்ள கீதாவுக்கு!

5

‘இந்த நவநாகரிகப் பெண்கள், ரவிக்கையின் அளவை அங்குலம் அங்குலமாக உயர்த்திக்கொண்டு தோள்பட்டைக்கே கொண்டு போனாலும் போகட்டும், அல்லது அங்குலம் அங்குலமாகத் தாழ்த்திக்கொண்டு வந்து முழுக்கை ஷர்ட்டாகவே ஆக்கிவிட்டாலும் ஆக்கிவிடட்டும். ‘வி’ நெக், ‘ப’ நெக், ‘ரவுண்டு நெக்’ என்று புதுப்புது ‘மோஸ்தரில்’ பெயர்களைச் சொல்லிக்கொண்டு, அழகை எந்த தினுசில் வேண்டுமானாலும் எடுத்துக் காட்டட்டும், மிக மெல்லிய மஸ்லினுக்கும் ‘லேசான’ புடவைகளை உடுத்திக்கொள்ளட்டும், புடவைத் தலைப்பை பின்னால் இடுப்புவரை வேண்டுமானாலும் தொங்கவிடட்டும், அல்லது பாதி முதுகோடு நின்றுவிடும்படி வேண்டுமானாலும் விட்டுக்கொள்ளட்டும், தலை மயிரைச் சுருள் சுருளாகக் கத்தரித்து விட்டுக்கொண்டாலும் கொள்ளட்டும். அல்லது இடுப்புக்கும் கீழ் தொங்கும்படியாகப் பின்னல்போட்டு விட்டுக்கொண்டாலும் கொள்ளட்டும், ஆனால் வயசு வந்த பிற புருஷப் பசங்களுடன் ‘அத்து’ மீறிப் பழகாமல் மட்டும் இருந்தால் போதும் என்று எங்கள் பாட்டி அடிக்கடி சொல்லி, இந்தப் பெண்கள் உலகம் ‘ஒரே மூச்சில் முன்னேறும்’ போக்கைக் கண்டு அடிக்கடி கஷ்டப்பட்டுக்கொள்வாளே ஞாபகம் இருக்கிறதா? நன்றாகத்தான் இருக்கிறது! ஏன்பாட்டி! ரோட்டில் போகும்போதோ, யாருடனாவது பேசும்போதோ நகத்தைத் துண்டு துண்டாகவோ, ஒரு மொத்தமாகவோ வேண்டுமானால் கடித்துக் கடித்து துப்பிக்கொண்டே இருக்கட்டும். புடவைத் தலைப்பைத் திரித்துத் திரித்து வேண்டுமானால் பல்லின் இடுக்கில் வைத்து புடவையின் சாயத்தை உரியட்டும் அல்லது திரிக்காமலே வேண்டுமானாலும் உரியட்டும், விதம் விதமான பீடங்கள் வைத்த செருப்புக்களைப் போட்டுக்கொண்டு தத்தித் தத்தி வேண்டுமானாலும் நடக்கட்டும், பாதத்தோடு பர்தமாக ஒட்டிக்கொள்ளும் பாதரக்ஷைகளைப் போட்டுக்கொண்டு சருக், சருக் என்று ஓசை கேட்கும்படியாகத் தேய்த்துத் தேய்த்து நடந்தாலும் நடக்கட்டும் என்பதையும் தான் அந்த ‘நாகரிகப் புராணத்தில் கொஞ்சம் சேர்த்துக்கொள்ளுங்களேன்’ என்று அவளுக்குத் தகுந்தமாதிரி ஒத்து பாடி அவள் கோபத்தை மேலும் கொஞ்சம் கிளறிவிட்டு வேடிக்கை பார்ப்பாயே. உன்னைப் போய் ஞாபகம் இருக்கிறதா என்று கேட்கிறேன்! என் ஞாபகத்தைச் சொல்லு!

சுத்த கர்னாடகம் பத்தாம் பசலி. இப்படிச்சொல்லிச் சொல்லித்தான் பெண்கள் முன்னேறவே வழியில்லாமல் செய்து தேசத்தைக் குட்டிச்சுவர் அடித்து விட்டார்கள். ஒரு சீதையும் அஹல்யையும் எவ்வளவு படிப்பு படித்திருந்தார்கள்? இவர்களால் பெண்கள் உலகத்துக்கே ஒரு மகத்தான மதிப்பு இருந்ததே ஒழிய அவர்கள் படிப்பினால் யாருக்கும் எவ்வித தீங்கும் இருந்ததாகத் தெரியவில்லையே பாட்டி. என்று நான் இந்தப் பெண்கள் முன்னேற்றத்துக்குப் பரிந்து பேசும்போதெல்லாம் ‘அடி பைத்தியமே! அந்தப்படிப்பு வேறு. இந்தப் படிப்புவேறு. அது, பெண்களின் க்ஷேமத்துக்காக ஏற்பட்ட படிப்பு. இது பெண்கள், ஏன், உலகத்தினுடையவே, நாசத்துக்காக ஏற்பட்ட படிப்பு. ஒரு வேளை இதை மாற்றியமைத்தால் என்னவோ? என்று அவள் உள்ளக் கொதிப்புடன் சொல்லுவதின் அர்த்தத்தை இங்கு



“............காலாகாலத்தில் நல்ல வரனாக............”

வந்த பிறகல்லவோ தெரிந்து கொண்டேன்!

என்ன? ஒரே புதிர்மாதிரி இருக்கிறதா? என்னுடைய சிறிய நாத்தனுர்—காலேஜ் குமாரி—வஸந்தாவைத்தான் சொல்லுகிறேன். அடீயம்மா! நாலு எழுத்து படித்துவிட்டாலும் படித்து விட்டது! என்ன தலை கவிழ்ந்து போகிறது! பெரியவர்கள், சிறியவர்கள் ஒரு மட்டு மரியாதை ஏதாவது உண்டா? இங்குதான் போகலாம், இங்குதான் போகக்கூடாது, இன்னுருடன்தான் பேசலாம், இன்னுருடன் பேசக்கூடாது என்று ஒரு வியவஸ்தை உண்டா?

அது எஸ். எஸ். எல். சி. பரீக்ஷை பாஸ் செய்தவுடனே மாமனுர் சொன்னுராம். போதும் இத்துடன் படிப்பு. இவள் உத்யோகம் செய்யப்போகிறது என்ன முழுகிப் போகிறது? காலா காலத்தில் நல்லதாக ஒரு வரனைப் பார்த்துக் கல்யாணத்தைச் செய்து வைத்து விட்டால் அதுவாயிற்று அதன் அகமுடையானுயிற்று. அப்புறம் அதைப்பற்றின விசாரம் நமக்கில்லை' என்றுராம்.

'நன்ருக இருக்கிறது! மாகாணத்திலேயே முதல் வகுப்பில் பாஸ் செய்திருக்கிறுள் படிப்பில் நல்ல அக்கரை இருக்கிறது பி. ஏ. வரையில் படிக்கட்டுமே. அப்புறம் இருக்கவே இருக்கிறது கல்யாணம் செய்துகொள்ளுவதும் குழந்தைகளைப் பெறுவதும். இப்பொழுது ஒன்றும் அவளுக்குக் கல்யாணத்துக்கு அவசரமில்லை. அப்படி ஏதாவது திடீரென்று நல்ல வரனுக வந்தால் அன்றைக்குத்தான் அந்தக் கல்யாணத்தைச் செய்தால் போகிறது. அவள் காலேஜில் சேர்ந்து படிக்கட்டும்' என்றுளாம் அத்தை.

'அன்று, திடீரென்று வரன் நேர்ந்தால் உடனே செய்துவிடுவதென்பது சாத்தியப்படுமா?' என்றுராம் மாமனுர்.

'ஏன்? சாத்யப்படாமலென்ன? முன் காலமா, கல்யாணத்துக்கென்று உளுந்து வாங்க நாள் பார்க்கவேண்டும், அதை உடைப்பதற்கு நாலு சுமங்கலிகளை அழைத்து, 'லக்ஷ்மீ கல்யாணம்' பாடி நல்ல வேளையில் அதை உடைக்கவேண்டும் என்பதற்கு? அது சுமங்கலிகள்தான் உடைத்து இடுகிருர்களோ, அமங்கலிகள்தான் உடைத்து இடுகிருர்களோ அல்லது ஆண்களேதான் இடித்து இடுகிருர்களோ, நினைத்த நேரத்தில் பலவித பெயர்களில் ஆயிரக்கணக்கில் கட்டுக்கட்டாகக் கடைகளில் அப்பளாம் வாங்கிக் கொள்ளலாம். காலையில் ஆபீஸுக்குப்போகும்போது ஒன்றுமே இல்லாமலிருந்த தெருவில் சாயங்காலம் திரும்பி வரும்போது நானுவித பல்புகளுடன், அழகிய பூப்பந்தல். கிடைக்காத சாமான்கள் கிடையாது. 'ம்' என்றுல் போதும், மேளக்காரர்கள், சமையற்காரர்கள் நான், நீ என்று போட்டி போட்டுக்கொண்டு வந்து விடுவார்கள். அரை மணியிலும் முடித்துவைக்கத் தெரியும், ஆறு மணியிலும் முடித்துவைக்கத் தெரியும் என்று பெருமை பேசும் புரோகிதர்கள் கணக்கு வழக்கு இல்லாமல் இருக்கிருர்கள். பணம் ஒன்றுதான் தேவை. அது இருந்தால் எந்த நிமிஷத்திலும் செய்துவிடலாம்' என்றுளாம் அத்தை.

'அதற்குச் சொல்லவில்லையடி. இப்பொழுது எஸ். எஸ். எல். சி. பாஸ் செய்திருக்கிறுளா? குறைந்தது ஒரு பி. ஏ. வாவது பார்க்க வேண்டும். இவள் பி. ஏ. படித்த பிறகு வரன் தேடுவதென்றுல் அதற்குத் தகுந்தமாதிரி யோக்யதையுள்ள ஒருவனை தேடுவது இருக்கட்டும். அப்பொழுது இவளுக்குப் பத்தொன்பது, இருபது வயதாகிவிடும். இந்த வயதுக்கு ஈடான ஒரு பையன் அகப்படுவதுதான் கஷ்டமாகஇருக்கும். காலம் போகிற போக்கில் 'குதிரை குதிரையாக'க் கலியாணமாகாத பெண்கள் இருக்கிறதுகளேயொழிய அதற்குத் தகுந்தமாதிரி காளைகாளையாகப் பிரும்மசாரிகள் அகப்படுவதுதானே பெருங் கஷ்டமாகப் போய்விட்டது,' என்றுராம் மாமனுர்.

என்னமோ, மாமனுர் இஷ்டத்துக்கு விடவில்லை. வஸந்தாவை மேலே படிக்கவைத்து விட்டார்கள் அவ்வளவுதான், இப்பொழுது கல்யாணப் பேச்சை எடுத்தால், காதிலேயே போட்டுக் கொள்ளாமல் போய்க் கொண்டிருக்கிறதாம். ஒரு சமயம் பி ஏ. முடிந்த பிறகுதான் செய்துகொள்ளப் போகிறேன் என்கிறது. ஒரு சமயம் நான் கல்யாணமே செய்துகொள்ளப் போகிறதில்லை என்கிறது. இதையும் மீறி மாமனுர் ஏதாவது வரன்களைக் கொண்டுவந்தால் இது சொள்ளை, அது சொத்தை என்று ஆகாததற்கு எதையாவது காரணம் கூறி ஒதுக்கிக் கொண்டிருக்கிறது.

இது மாமனுருக்குப் பெரிய விசாரம் பாவம்! அத்துடன் அது



"......பழக்கமெல்லாம் ஆண்பிள்ளைகளோடு......"



"......................கல்யாணப்பேச்சை எடுத்தால்......................"

போகிறபோக்கோ நாலுபேர் நாலு விதமாக வம்பளக்காமல் இருக்க வேண்டுமேயென்று ஒரே பயமாக இருக்கிறது. படிக்கிற பசங்கள், நாலு இடத்துக்குப்போக வேண்டியதுதான், நாலுபேருடன் பழக வேண்டியதுதான். இடிச்சப் புளி மாதிரி வீட்டிலேயே 'மொட்டு மொட்டென்று' உட்கார்ந்திருப்பதென்பதும் முடியாத காரியம் தான், போகட்டும், பழகட்டும், வேண்டாமென்று சொல்லவில்லை. பழகுவதைப் பெண்களோடு மட்டும் நிறுத்திக்கொள்ளக்கூடாதோ. பழக்கமெல்லாம் ஆண் பிள்ளைகளோடு, ஏதாவது கேட்டால் கர்நாடகங்களுக்கெல்லாம் உலகத்தின் போக்கையே புரிந்து கொள்ளத் தெரியாது என்று நம் வாயை ஒரே அஸ்திரத்தை உபயோகித்து அடக்கி விடுகிறதுகள்.

எனக்கு இதெல்லாங்கூட அவ்வளவு கஷ்டமில்லை. சகித்துக் கொள்ளலாம்போலிருக்கிறது! கோபாலன் என்று ஒரு பையனைப் பற்றி முன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேனே. அது செய்கிற ஒரு மாயாவித்தனம்! அடேயம்மா! சொல்லியே முடியாது போயேன். காலேஜ் போகிறவேளை தவிர மீதி வேளையெல்லாம் இங்கேயேதான். ஒரு சமயம் 'புர்' என்று காரில் வந்து இறங்கும். ஒரு சமயம் தொட தொடவென்று மோட்டார் சைக்கிலில் வந்து இறங்கும். ஒரு சமயம் சாதாரண சைக்கிலில் வந்து நிற்கும். அது இங்கு வராத வேளையில் இவள் (வஸந்தா) அங்கே போய் விடுவாள்.

நான் மாத்திரம் முதலிலேயே பயப்பட்டதுண்டு, பயப்பட்டதும் வீண் போகவில்லை. நேரமாகி விட்டது. மற்றவை அடுத்த கடிதத்தில்.

உன் அன்புள்ள,

ரமா.


## "சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

### சந்தா விவரம்

★

(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)

| | இந்தியா சிலோன் | வெளிநாடு |
|---|---|---|
| 1-வருஷம் | 13 0 | 18 0 |
| 6-மாதம் | 7 0 | 9 8 |
| 3-மாதம் | 3 12 | 5 0 |

தனிப்பிரதி அணா 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட்ரோட், மதராஸ்.



## ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்




# 16

## காந்தியடிகளின் மோகனச் சிரிப்பு

★

'காந்தியடிகள் சத்தியத்திற்கும் அஹிம்ஸைக்கும் வழிகாட்டியிருக்கிறார் என்கிறார்கள் எல்லாரும். நானோ நாகரிகத்திற்கும் அழகிற்கும் கூட அவர் வழி காட்டியிருக்கிறார் என்று நினைக்கிறேன்' என்றேன்

அதற்குக் கமலா, 'நீ சொல்லப் போகிற நாகரிகம் இன்னதென்று எனக்குத் தெரியுமே சொல்லட்டுமா? போர் என்ற கொலை-வழியும் ராஜதந்திரம் என்ற பொய் வழியும் உலகம் துறந்து நல்வழியாகிய அஹிம்ஸை—வழியே செல்லும் போது உலகம் ஒரு புதிய நாகரிகம் பெற்றுப் புதுமைப் பெரு வாழ்வு வாழும் என்று தானே சொல்லப் போகிறாய்?' என்று ஒரு பதில் கேள்விபோட்டாள்.

'நீ சொல்வது சரிதான் எல்லாருக்கும் தெரிந்த விஷயம் நான் அதை மட்டும் சொல்லவில்லை காந்திஜி எப்போதும் முகமலர்ச்சியுடன் இருப்பாரே—தெரியுமா?' என்று நானும் ஒரு கேள்வி கேட்டேன்

'யாருக்குத் தெரியாது? அந்த பொக்கைவாய்ச் சிரிப்பு உலகப்பிரசித்தமல்லவா? எத்தனையோ கவலைகளுக்கிடையே அவ்வளவு சிரிப்பு எப்படித்தான் கிடைத்ததோ அவருக்கு?' என்று கமலாவும் ஒருகேள்வி போட்டாள்.

அதுவரையில் சம்பாஷணையில் கலந்துகொள்ளாமலே நாங்கள் பேசிக்கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த ஸரோஜா, 'அவருடைய நகைச்சுவைதான் அந்தப் பொக்கை வாய் நகைப்பிற்குக் காரணம். நகைச்சுவை இல்லாவிட்டால் அந்தப் பெரியாரும் தம் இதயத்திலே இந்தியக் கவலைகளையெல்லாம் சுமந்திருக்க முடியாது' என்றாள்.

நான் சொன்னேன்: 'காந்தியடிகளின் அக மகிழ்ச்சிக்கும் முக மலர்ச்சிக்கும் அந்தப் பிரசித்தி பெற்ற சிரிப்பிற்கும் அவருடைய ஹாஸ்ய ரஸம் மட்டும் காரணமல்ல. காந்தியடிகளுக்கு நகைச் சுவையும் அபாரமாக உண்டு எனினும் அந்தப் பொக்கை வாய்ச் சிரிப்பு அப்படி மோகனச் சிரிப்பாய் இருந்ததற்கு முக்கிய காரணம் கள்ளங்கவடற்ற அந்தக் குழந்தையுள்ளம்தான் உண்மையான பக்தர்களைப்போல் காந்தியடிகளும் ஒரு ஞானக் குழந்தை!'

'ராமன் கூடச் சிரித்த முகத்துடன் இருந்ததாகச் சொல்லுகிறார்களே எப்போதுமே சிரித்த செந்தாமரை போல் இருந்த முகம், "காட்டுக்குப் போ" என்று கைகேயி அம்மாள் சொன்னதும் முன்னிலும் மும்மடங்கு சிரிப்பால் ஜொலித்ததாமே! அப்படித்தான் காந்தியடிகளின் திருமுகமும் துன்பங்களைக் கண்டு சிரித்திருக்கவேண்டும்!' என்றாள் ஸரோஜா.

'உண்மைதான் அந்தக் காலத்துப் புருஷோத்தமர் "ஹே ராமா!" என்று கடைசியாகச் சொல்லிப் பிராணனை விட்ட பரம ராம பக்தரான காந்தியடிகளேயாவர். 'ராமன்' என்ற பெயருக்கே "மகிழ்ச்சியோடிருப்பவன், பிறர் இதயங்களுக்கும் மகிழ்ச்சி விளைவிப்பவன்" என்று பொருள். அப்படியேதான் இந்த ராம பக்தரும் வாழ்க்கை நடத்தினார்' என்றேன்.'

'இப்போது எனக்குப் பண்டித ஜவாஹர்லால் நேரு காந்தியடிகளைப் பற்றி வெளியிட்ட அபிப்பிராயம் நினைவிற்கு வருகிறது. "காந்தியடிகள் இருந்த இடமே ஒரு கோயில்; அவர் நடந்த இடமெல்லாம் புண்ய பூமி!" என்றார் நேருஜி, இப்படித்தானே ராமனைக் குறித்தும் சொல்லுகிறார்கள். ராமன் இருந்த இடம் அயோத்தி என்கிறார்கள் நடந்தநெறியெல்லாம் புனித நெறி யென்று எத்தனையோ கோவில்கள் முதலான நினைவுக்குறிகளால் நிறைத்து வைத்திருக்கிறார்கள்' என்றாள் கமலா.

'சரி: எனக்கு வேறொரு ஞாபகமும் வருகிறது. காந்தியடிகள் கொஞ்சமும் மரண பயமில்லாமலே வாழ்ந்து வந்தார். மரணத்தைத் தோழன் என்றே சொல்லிக் கொண்டார். "ஒப்பற்ற தோழன்" என்றார். 125 வயது வாழ விரும்பின போதிலும் ஒவ்வொரு நிமிஷமும் மரணத்தைச் சந்தோஷமாக வரவேற்கச் சித்தமாயிருந்தார். ராமனும் இந்த நிலையில் வாழ்ந்ததாகக் கவி சொல்லுகிறாரல்லவா? "ராவணனுடைய தம்பியான விபீஷணனை நம்ப வேண்டாம். கூட இருந்து கொன்று விட்டால் என் செய்வது?" என்று கவலைப்பட்ட நண்பர்களை நோக்கி ராமன் "அப்படி நான் இறந்து போனால்தான் என்ன? நான் நம்புகிறேன்; அவன் கொல்லட்டும்!" என்றானாம்.

**இறந்த நாள் அன்றோ, என்றும்
இருந்த நாள் ஆவதென்றான்**

என்கிறார் கவி. இதுதான் காந்தியடிகளின் மனப்பான்மையும். காந்தியடிகளின் மோகனச் சிரிப்பே துன்பங்களை நோக்கி இப்படிச் சொல்வது போலத்தான் எனக்குத் தோன்றியது. அவர் தமிழ் நாட்டிலே செய்த ஹரிஜன யாத்திரையின்போது தீண்டாமை விலக்கிலுள்ள கஷ்டங்களையெல்லாம் ஒருவர் எடுத்துக் காட்டியதும் காந்தியடிகள் உரக்கச் சிரித்தார்; குழந்தைபோலச் சிரித்தார். நான் அந்த நகை பூத்த வதனம் காணும் பேறு பெற்றேன்; அந்த நகைப்பொலி கேட்கும் பேறும் பெற்றேன்' என்றேன் நான்.

'இப்போது எனக்குத் திருக்குறள் ஞாபகம் வருகிறது' என்றாள் கமலா.

'நமது கல்வி மந்திரியார் அல்லவா எப்போதும் திருக்குறள் ஞாபக

மாகவே இருக்கிறுர்? அதனுல் தானே எல்லா வகுப்புகளிலும் திருக்குறள் பாடமாக ஏற்பட்டிருக்கிறது உனக்கேன் இப்போது அந்த ஞாபகம்?' என்று கேட்டாள் ஸரோஜா

'காந்தியடிகளின் சிரிப்பை நினைத்துப் பார்க்கவேதான், திருக்குறள் ஆசிரியர் சிரிப்பைக் குறித்துச் சொல்லியிருப்பதும் என் நினைவிற்கு வருகிறது' என்ருள் கமலா

பிறகு இவள், 'இடுக்கண் வருங்கால்' என்று குறளை ஆரம்பித்ததும்,

**'இடுக்கண் வருங்கால் நகுக'**

என்று ராமு சொல்லிக்கொண்டே ஓடி வந்தான் ராமுவின் வகுப்பிலும் குறள் பாடம்தானே. ஆனுல் ராமுவுக்குப் பொருள் தெரியுமா? சொற்களுக்கு அர்த்தம் சொல்லவும் தெரிந்திருந்தது. 'துன்பம் வரும்போது சிரிக்கவேண்டும்' என்று அர்த்தம் சொன்னுன் அந்தக் குறளின் பொருள் உள்ளபடி அவனுக்குப் புரியவில்லை. துன்பம் வரும்போது சிரிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டே தானும் சிரித்தான் ஆனுல் சோமு வந்து ஏதோ ஒரு பரிகாச வார்த்தை சொன்னதும் ராமு அழுதுவிட்டான்.

"இந்தக்குறளை வகுப்பில் படித்திருந்தும் ராமுவுக்குப் புரியவில்லை. குறளைப் படிக்காமலே காந்தியடிகளுக்கு இதன் பொருள் புரிந்துவிட்டதுபோலத் தோன்றுகிறது' என்ருள் ஸரோஜா

'ஏன் அப்படிச் சொல்ல வேண்டும்? காந்தியடிகள் குறளையும் கற்றிருக்கலாமே' என்ருள் கமலா.

'அது எப்படி?' என்று சிரித்தாள் ஸரோஜா.

'தென்னுப்பிரிக்காவில் தமிழர்களான தொழிலாளிகளையும், கூலியாட்களையும் வேறு இந்தியர்களையும் உதவியாகக் கொண்டு காந்தியடிகள் சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டிருந்தாரல்லவா? அப்போது காந்தியடிகள் தமிழ் கற்கவும் முயன்ருர் அந்த நாளில் ரெவரண்ட் ஜி யு. போப் துரையின் ஆங்கில மொழி பெயர்ப்பான திருக்குறளைப் படித்துப் பார்த்தார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்' என்ருள் கமலா.

'அப்படியானுல் குறளைக் கற்றுத்தான் காந்தியடிகள் சிரிக்கக் கற்றுக்கொண்டாரா?' என்று கேட்டாள் ஸரோஜா.

'நான் அப்படிச் சொல்லவில்லையே' என்ருள் கமலா.

'காந்தியடிகள் குறளைப் படித்திருக்கக்கூடும் என்றுதான் கமலா சொன்னுள். தம் சிரிப்பையோ, சன்மார்க்க வாழ்வையோ குறளிலிருந்துதான் கற்றுக்கொண்டாரென்று சொல்லவில்லையே. மேலும் குறளைப் படித்தவர்களுக்கெல்லாம் சன்மார்க்க வாழ்வும் சந்தோஷமும் வந்து விடும் என்ருல், தமிழ்ப்பண்டிதர்களுக்காவது முகத்திலே சந்தோஷம் தாண்டவமாடவேணுமே!' என்றேன் நான்.

'பண்டிதர்களை அரைப் பட்டினிப் பட்டாளத்தில் சேர்த்து வைத்திருக்கும்போது அவர்கள் எப்படிச் சிரிப்பார்கள்? வயிறு வாடும்போது சிரிப்பு ஆடுமா முகத்திலே?' என்ருள் கமலா.

'அப்படியா செய்தி? ராஜ்கோட்டில் 1939–மார்ச்சு 3-ம்தேதி காந்திஜி உபவாசம் கிடக்க ஆரம்பித்தார். மார்ச்சு 7-ம்தேதி உபவாசத்தைப் பூர்த்தி செய்துகொள்வதற்குமுன்பே பத்திரிகைக்காரர்களிடம் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருந்தாரே!' என்ருள் ஸரோஜா.

'காந்திஜி உண்ணுவிரதம் அனுஷ்டித்தார். பண்டிதர்களோ, உபாத்தியாயர்களோ அப்படி ஒன்றும் விரதம் அனுஷ்டிக்கவில்லை என்ருள் கமலா.

'ஆம்; ஒருவன் உண்ணுவிரதம் கிடப்பதற்கும், அவனை முழுப் பட்டினியோ அரைப்பட்டினியோ போட்டு "உண்ணுவிரதம் கிடக்கிருன்!' என்று சொல்வதற்கும் வித்தியாசம் இல்லையா? கர்ணன் மழைக் காலத்தில் தன் அரண்மனையிலுள்ள மர உத்தரங்களையும்வெட்டி யாசகர்களுக்கு விறகாகக் கொடுத்தான் என்று ஒரு கதை இருக்கிறது. "அப்படி உன்னையும் நான் கர்ணனாகச் செய்துவிடுகிறேன்" என்று சொல்லிக்கொண்டே ஒருவன் அடுத்த வீட்டுக்காரனுடைய கூரையைப் பிரித்து மர உத்தரங்களை வெட்டிக்கொள்ளலாமா?' என்றேன் நான்.

'காந்தியடிகளின் சிரிப்பைக் குறித்துப் பேசும்போது தமிழ்ப் பண்டிதர்களைக் குறித்துப் பேசுவானேன்?' என்ருள் கமலா.

'நான் சிறிது ஹாஸ்யமாகத்தான் சொன்னேன். குறள் போன்ற நூலைக் கற்பதால் மட்டும் சந்தோஷ வாழ்வோ சன்மார்க்க வாழ்வோ வந்துவிடாது என்பதை வற்புறுத்தத்தான் இந்த ஹாஸ்யப் பேச்சும்' என்றேன்.

கமலா திடீரென்று, 'சன்மார்க்கத்திற்கும் சந்தோஷத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்று நீ நம்புகிருயா?' என்று என்னைக் கேட்டாள்.

அதற்கு நான் சொன்னேன். 'காந்திஜியின் குதூகலமும் சிரிப்பும் முகமலர்ச்சியும் இவருடைய சன்மார்க்க வாழ்வின் மலர்ச்சிதான் என்பது நிச்சயம். சிலர் சன்மார்க்க வாழ்விற்குச் சோகம் அவசியமென்று கருதுவதுபோலத் தோன்றுகிறது, இது உண்மையல்ல; நமது மதக் கொள்கையுமல்ல.

**உள்ளத்(து) உவகையார்**
**ஜீவன் முக்தர்.**

என்பதுதான் இந்தியாவில் தோன்றுதொட்டு வரும் கொள்கை காந்தியடிகளின் உள்ளத்திலும் உவகை பொங்கிக் கொண்டிருந்தது இந்த உவகைக்கு ஊற்றுக்கண் சன்மார்க்க வாழ்வுதான்.'

'எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது. காந்தியடிகளைப் போல் சன்மார்க்கவாதி வேறு யார் இருக்கமுடியும்? எனினும் குழந்தைகளோடு குதூகலமாய்ச் சிரிப்பார். 1942–ல் "க்ரிப்ஸ் தூது"—காலத்தில் ஸர். ஸ்டாபோர்ட க்ரிப்ஸ் துரைக்குப் பத்திரிகைக்காரர்களை அறிமுகப்படுத்தும்போது "சுருமீன்கள்" என்று குறிப்பிட்டாராம். ஆகவே சந்தோஷ வாழ்வு சன்மார்க்க வாழ்வுடன் முரண்படவேண்டியதில்லை' என்ருள் ஸரோஜா.

'ஆம். சன்மார்க்கத்திலே பூத்தது காந்தியடிகளின் சிரிப்பு; இதனுல்தான் கோடிக்கணக்கான உள்ளங்களைக்கொள்ளைகொண்டார் மோகனதாஸ் காந்தியும் மோகன கிருஷ்ணனைப்போல காந்தியடிகளின் சிரிப்பை எதிர்த்து நிற்கக்கூடிய சக்தியும் உண்டா? ஆகவேதான் காந்தியடிகள் அழகிற்கும் வழிகாட்டியிருக்கிருர் என்றேன் சன்மார்க்க வாழ்விலிருந்து கிடைக்கும் சந்தோஷ வாழ்க்கையே அழகான வாழ்க்கை இதுவே எதிர்காலத்தில் நாகரிக வாழ்க்கையாகவும் கருதப்படும்' என்றேன்.



இந்திய சர்க்கார் போக்குவரத்து மந்திரி ஜனுப் ரபி அகமது கித்வாய் சென்றவாரம் சென்னை விஜயம் செய்தபோது மீனம்பாக்கத்தில் சென்னை மந்திரி ஸ்ரீ பக்தவத்சலம், டாக்டர் சுப்பராயன் முதலியோர் அவரை வரவேற்றனர்:



சென்றவாரம் நடந்த 4-வது கிரிக்கெட் 'டெஸ்ட்' டுக்குச் சென்னைக்கவர்னர் பவநகர் மகாராஜா விஜயம் செய்தபோது மேற்கிந்திய கோஷ்டி, இந்தியக்கோஷ்டி இரண்டையும் சந்தித்த போது எடுத்தபடம். நடுவே கவர்னர். அவருக்கு இடப்புறம் அமார்நாத்: வலதில் மே. இ. கோஷ்டி தலைவர் கோடார்டு.

சமீபத்தில் டில்லியில் நடந்த ஆசிய மகாநாட்டுப் பிரதிநிதிகளைக் காட்டும் படம். மத்தியில் பிரதம மந்திரி நேரு நிற்கிறார்.

---

அட்டைப்படம்

# ஔவைக்கு நெல்லிக்கனி!

தன்னுடைய நாட்டிலுள்ள மலைப் பகுதியில் வேட்டையாடுவதற்காக அரசன் அதியமான் நெடுமான் அஞ்சி ஒருநாள் புறப்பட்டான். மலையை அடுத்து ஒரு பள்ளத்தாக்கு. அங்கே அருநெல்லி மரமொன்று பெருவாரியாகக் காய்த்துக் குலுங்குகிறது. நெல்லிக்கனியை உண்பவர்களுடைய ஆயுள் வளர்ந்து நீடிக்குமாம். காய கல்பம் செய்து கொண்டவர்களுடையதேகத்தைப் போல ஆரோக்கியமும் செழிக்குமாம். இது மனதில் உதிக்கவே மன்னன் அருநெல்லிக் கனிகளை உண்ணக் கொய்துகொண்டு அரண்மனை போகிறான். அங்கு அரசனைக்காண ஔவை மூதாட்டிக் காத்துக்கொண்டிருக்கிறாள். மன்னன் தான் உண்ணக் கொணர்ந்த நெல்லிக் கனிகளை ஔவைப் பாட்டிக்குக் கொடுக்கிறான். வயதை வளர்க்கக்கூடிய அக்கனிகளை தான் உண்ணாமல் கிழப்பருவத்திலுள்ள தனக்கு ஈந்த மன்னனின் தன்னலப்பற்றைக்கண்டு ஔவை வியந்துபோகிறாள்.

அதியமான், தான் நீண்டகாலம் உயிர் வாழ்வதைவிட ஔவைப் பிராட்டி நெடிது வாழ்தலால் உலகத்தினருக்கு மிக்க பயனுண்டு என்று கண்டு அக்கனிகளைத் தமக்குகொடுத்தமைக்காக ஔவை மனங்குழைந்து மன்னனைப் புகழ்ந்து வாழ்த்தி பாராட்டுகிறார். இக்கருத்தைத் தாங்கியுள்ள பாடல் வருமாறு:—

வலம்படு வாய்வா
ளேந்தி யொன்னார்
களம்படக் கடந்த
கழறொடித் தடக்கை
ஆர்கலி நறவி
னதியர் கோமான்
போரடு திருவிற்
பொலந்தாரஞ்சி
பால்புரை பிறைநுதற் பொலிந்த சென்னி
நீலமணி மிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே.

—புற நானூறு.

---

# நமது கலாமண்டபம்

கலைக்காக உயிர் விடுவதாக சில பேர் சொல்வார்கள். அப்படிச் சொல்வதில் ஓரளவு அர்த்தமும் இருக்கிறது. கலை என்ற பெயரில் தயாராகும் சில படங்களைப் பார்க்கும் போது உயிரைக் கூட விட்டுவிடலாம் என்று தோன்றுவது இயற்கை தான். கலை அப்படிப் பிராணபத்தான விஷயமாக இநககக்கூடாதல்லவா? நீங்கள் நமது சினிமாப் படங்களையோ, நாடகங்களையோ, சித்திரங்களையோ பார்க்கும்போது உல்லாசமாகவும், உற்சாகமாகவும் இருக்கவேண்டும் என்பது நமது அபிப்பிராயம். கலைக்கு உயிர்விடுவேன் என்று பயமுறுத்தாமல் கலைக்காக உயிர் வாழ்ந்து தான் தீருவேன் என்று நீங்கள் பிடிவாதம் பிடிக்கவேண்டிய நிலைமைக்கு தமிழ்நாட்டு சித்திரக் கலைகள் உயரவேண்டும் என்பது நமது ஆசை. அப்படிப்பட்ட ஒருகாரியத்திற்கு நம்மால் முடிந்த வரை சேவை செய்யவேண்டும் என்ற எண்ணத்துடனேயே இந்தக் 'கலாமண்டப'த்தை ஆரமபிக்கிறோம். இதில் தமிழ்நாட்டு மக்களை வசீகரிக்கும் சகல கலைகளுக்கும் இடமிருக்கும்.

[ தொடர்ச்சி 26-ம் பக்கம் ]

# சக்ரதாரி சந்தோஷப்படுகிறார்!

சக்ரதாரிக்கு உண்டாயிருக்கும் சந்தோஷம் சொல்லிமுடியாது. தியேட்டருக்குக் கும்பல் ஏராளமாக வருகிறதே என்றா? பாண்டுரங்கன் தரிசனம் கிடைத்துவிட்டதென்றா? இல்லவே இல்லை இதெல்லாம் காரணமல்ல.

ஒரு செய்தியைக் கேட்டுதான் அவ்வளவு சந்தோஷப்பட்டார். மாமனார் வீட்டில் இரண்டாம் பெண்டாட்டி கிடைத்தபோது கூட அவருக்கு அவ்வளவு சந்தோஷமேற்படவில்லை. ஆனால் 'சுதேசமித்திரன்' கலாமண்டபம் ஆரம்பிக்கப்போகிறது. அதுவும் சினிமாவுக்கு அதில் ஏராளமாக இடம் இருக்கும் என்பதைக் கேட்டதும் 'பிரபோ பாண்டுரங்கா!' என்று பரவசத்தில் ஆழ்ந்துவிட்டார். உடனே கையில் சுற்றிக் கொண்டிருந்த (பாண்டம் செய்யும் சக்கரமல்ல) பேப்பர் வெய்ட்டை எடுத்து வைத்துவிட்டு எழுத ஆரம்பித்தார். "அடடே! சக்ரதாரிகாரு! இதெல்லாம் எந்து கண்டி" என்றதையும் பொருட்படுத்தாமல் எழுதிமுடித்து "இதோ எடுத்துக்கொள்ளுங்கள்" என்றார். சிறிது தயங்கினேன். "பாண்டுரங்கன் ஆணை, எடுத்துக்கொண்டு தான் போகவேண்டும்" என்று தீர்மானமாகச் சொல்லிவிட்ட பின் என்ன செய்வது? அதைக்கொண்டு வந்து இதோ உங்களுக்குப் பிரசுரிக்கிறேன்:—

*'சுதேசமித்திர'னைப் போன்ற பொறுப்புள்ள ஒரு பத்திரிகை சினிமாத் தொழிலில் ஊக்கங் காட்ட முன் வந்திருப்பதைப்பற்றி நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்.*

*சென்னையிலுள்ள பெரிய ஆங்கிலப் பத்திரிகைகள் ஏதோ இரண்டொரு ஆங்கிலப் படங்களைப்பற்றிய குறிப்புகளைப் பிரசுரிக்கின்றனவே யொழிய உள்ளூர் தொழில் விஷயத்தில் சிரத்தை கொள்ளவில்லை. அத்தகைய ஒரு சிரத்தையை முனைதாக ஏற்றுக்கொண்டதற்கு 'சுதேசமித்திர'னிடம் தென்னிந்திய சினிமாக்காரர்கள் எப்பொழுதும் நன்றி பாராட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.*

வி. நாகய்ய
25. 1. 49

# ஸ்டுடியோக்களில் என்ன நடக்கிறது?

ஸ்டூடியோ என்றதும் ஜெமினியைப்பற்றி எழுதுவானேன் என்று கேட்கலாம். காரணம இரண்டு. ஜெமினிக்குள் போவது கஷ்டம். போனால் திரும்பி வருவது அதைவிடக் கஷ்டம்.

வெள்ளைக்காரன் கெட்டான் என்று சொல்லும்படியாக அவ்வளவு கெடுபிடியுடன் ஸ்ரீ வாஸன் ஜெமினியை நடத்துவதால் கண்ட பேர் இஷ்டப்படி உள்ளே நுழைவது கஷ்டம். ஆனால் சினிமா சம்பந்தமான காரியமிருந்து முன்னேற்பாடு செய்துகொண்டு ஸ்டூடியோவுக்குள் போய்விட்டோமோ இவ்வளவு ரமயமான இடத்தை விட்டு எதற்காக வெளியே போக வேண்டும் என்று மனது படும் கஷ்டம் மிக அதிகம்.

அவ்வளவு நல்ல முறையில் ஜெமினி வாஸன் ஸ்டூடியோ நடத்துகிறார். ஸ்டூடியோ எங்கும் சுத்தமாக இருக்கிறது. கூச்சலோ கூட்டமோ இல்லாமல் அறிவை அடிப்படையாகக் கொண்ட வேலைகளுக்கு அனுகூலமாக அமைந்திருக்கிறது. படப்பிடிப்புக்கு வேண்டிய நவீன யந்திர சாதனங்கள் பலவும் இந்த ஸ்டூடியோவில் இருக்கின்றன.

## ஔவையார்

ஜெமினியில் இப்பொழுது துரிதமாகத் தயாராகிக் கொண்டுவரும் படம் 'ஔவை' மூதாட்டியின் சரித்திரம். நீங்கள் கீழ்க்கிளாஸில் படித்த 'ஆத்திச்சூடி', 'வாக்குண்டாம்' முதலிய பலவற்றின் நீதிச் சொற்களுடனும் உயரிய காட்சி

[ தொடர்ச்சி அடுத்த பக்கம் ]

சிந்தாமணி என்ற இந்தச் சிறுவன், மாடர்ன் தியேட்டர்ஸ் 'ஆதித்தன் கன'வில் கீர்த்தியாக நடித்து, 'மூர்த்திசிறிதானாலும் கீர்த்தி பெரிது' என்றபழமொழியை நிலைநாட்டியிருக்கிறான்.

இந்திய நடன கலா சோபை முழுமையையும் சினிமாப் படமாகக் காட்டிவிடுவதென்ற பிரதிக்ஞைகொண்ட உதய சங்கரும் அவர் கோஷ்டியும் 'கல்பனா'வில் இவ்வளவு கஷ்டப்பட்டு ஆடினார்கள். இப்படம் இப்பொழுது மேல் நாடுகளில் உலாவுகிறது.

# நமது கலாமண்டபம்

[23-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தப்பகுதியின் பெரும் பாகம் 'சினிமாக்கலை' விஷயமாகவே இருப்பதற்குக் காரணங்கள் உண்டு. காரணங்களைக் கீழே கவனியுங்கள்:

1. இம்மாகாணத்தில் நாள் ஒன்றுக்கு 3 லக்ஷம் ஜனங்கள் சினிமா பார்க்கிறார்கள்.
2. சுமார் 15000 பேர் இத்தொழிலில் வேலை செய்கிறார்கள்.
3. இத்தொழில் மூலம் முதலாளிகளுக்குக் கிடைக்கும் சராசரி வருஷ வருமானம் 2 கோடி ரூபாய்.
4. இந்தத் தொழில்மூலம் கிடைக்கும் தமாஷா வரி மட்டும் பிரதி வருஷம் 76 லக்ஷம் ரூபாய்.
5. இதர வரிகளும் சேர்ந்து இத்தொழில் தனது வருமானத்தில் 55 சத விகிதம் சர்க்காருக்கு வரி கட்டுகிறது.
6. சராசரி 50 படங்கள் பிரதி வருஷம் வெளி வருகின்றன.
7. இம்மாகாணத்தில் இப்பொழுது 281 கட்டிடத் தியேட்டர்களும், 250 கூடார சினிமாக்களும் இருக்கின்றன.
8. சென்ற யுத்தத்துக்கு முன் இம் மாகாணத்தில் பெரிய சினிமாக் கம்பெனிகளாக சுமார் 30 கம்பெனிகளே இருந்தன யுத்த காலத்தில் அவை 80 கம்பெனிகளாக மாறி விட்டன.
9. இப்பொழுது கம்பெனிகள் மூலை முடுக்களிலெல்லாம் கிளம்பி எது சினிமாக் கம்பெனி, எது வெற்றிலை பாக்குக் கடை என்று நிர்ணயிக்க முடியாத தினுசுக்கு சினிமாத் தொழில் வந்து விட்டது.

இவ்விதம் கண் தலை தெரியாமல் அபிவிருத்தியாகி ஜனங்களைப் பெரிதும் கவ்விக்கொண்டிருக்கும் இந்தத் தொழில் விஷயத்தில் பொறுப்புள்ள பத்திரிகைகள் இதுவரை எடுத்துக் கொண்டதைவிட அதிகச் சிரத்தை காட்ட வேண்டும் என்பதற்காகவே இந்த கலாமண்டபம் வாரப் பதிப்பில் ஆரம்பமாகிறது. இதை சினிமாத் தொழில்காரரும் பொது மக்களும் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

ஒரு விஷயக்கை சந்தேகத்துக்கு இடமின்றிச் சொல்லிவிட விரும்புகிறோம். 'கேள்வி பதில்' விவகாரம் சினிமா நடிகர் நடிகைகளின் விலாசம் முதலிய கீழ்த்தர வியாபாரங்களுக்கு இந்தக் கலா மண்டபத்தில் இடமில்லை. தொழில் வளர்ச்சிக்கும் கலை வளர்ச்சிக்கும் அவசியமான பொது விஷயங்கள் மட்டுமே இந்தப் பகுதியில் கவனிக்கப்படும.

வட நாட்டின் மேல் படையெடுத்திருக்கும் ஜெமினி சந்திரலேகாவில் கதாநாயகி டி. ஆர். ராஜகுமாரி இம்மாதிரி புதுத்தோற்றமளிக்கிறார்.

[25 ம் பக்கத் தொடர்ச்சி]

ஜோடனைகளுடனும் இந்தப் படம் தயாராகிறது. 'ஔவை' யை நாளது ஜூலை மாதத்தில் திரைக்குக் கொண்டுவர ஸ்ரீ வாஸன் திட்டம் போட்டிருக்கிறார். இப் படத்தின் ஔவைப்பாட்டி கே.பி. சுந்தராம்பாள்தான் என்று நாம் சொல்லவும்வேண்டுமா?

பூர்வாங்க சீன்கள் எல்லாம் எடுக்கப்பட்ட பிறகு கடைசியாகத்தான் கே. பி. சுந்தராம்பாள் 'ஸெட்' டுககு வருவார் என்று தெரிகிறது கொத்தமங்கலம் சுப்பு இப் படத்தை டைரக்ட் செய்கிறார்.

# ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள் பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:–1 முதல் 3 உமது எதிர் கால கேள்விகட்கு ரூ. 2. 3—க்கு மேல் கேள்வி 1—க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத் ரூ. 35.

குறிப்பு: வெளிநாடுக்கு இரட்டிப்புகட்டணம்.

**Lt. Col. M. N. C.** ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்—தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்கு திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

★

மானேஜர்,

**வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,**

**தெப்பக்குளம் P. O.** (தென் இந்தியா)

---

Estd: 1920

# சேலம் மூன்றுதாமரை

பீடிகளை உபயோகித்து, சந்தோஷமடையுங்கள்

S.A.H

**Rgd. No. 2221.**

**Prop: S. அஹமத் உசேன்,**

கோட்டை, சேலம். S.I.R.

---

அரிய சந்தர்ப்பம்! ★ குறைந்த விலை!

# விலை சகாயம்

**5.** H. P. — L. S. E. மேக்கர், *1440* R P M *3/50/440* வோல்ட் மோட்டார், ஆலன் & வெஸ்ட் ஸ்டார்டர் சேர்ந்தது ரூ. **560.**

*10.* H. P. BROOKS மேக்கர், *960* R P M *3/50/440* வோல்ட் T. E. டைப் மோட்டார், ரெயில்ஸ், புல்லி, ஸ்டார்ட்டர் சேர்ந்தது ரூ. **1200.**

*1/4.* H. P. E. E. CO. மேக்கர் *1420* R. P M. *230* வோல்ட் சிங்கிள்பேஸ் A. C. மோட்டார் ரூ. **150.**

**5.** H. P. L. S. E. மேக்கர், *1440* R P M *3/50/440* வோல்ட் மோட்டார், ஆலன் & வெஸ்ட் ஸ்டார்டருடன் 2½X" 2" சயிஸ் தண்டாயுதபாணி பம்பு சேர்ந்தது ரூ. **8 0.**

*10.* S. D. M. E. M. ஸ்டார் டெல்டா ஸ்டார்டர் ரூ. **65.**

*48"* சயிஸ் ரஞ்சித் சிலிங் விசிறி ரூ. **160.**

விவரங்களுக்கு:

## எஸ். எம். டி. வேலு & கம்பெனி,

**எலக்டிரிகல் இம்போர்டர்ஸ், சேலம் டவுன்.**

தபால் பெட்டி 48. தந்தி: 'வேலு'

## ப்ராங்கியல் தகராறுகள் விடாத இருமல் & சுவாச கஷ்டங்களுக்கு உமக்கு பெப்ஸ் அவசியம்

தொண்டை, சுவாசப்பை சுகராறுகளை நிவர்த்திசெய்ய நல்ல ருசியுள்ள பெப்ஸ் சிறந்தது. பெப்ஸை மென்றவுடன் அதிலுள்ள மருந்தும் கிருமிநாச சத்துக்களும் சுவாசத்துடன் பாதிக்கப்பட்ட விங்களுக்குச் செல்கின்றன பெப்ஸ் இருமலை நிறுத்தி, தொண்டையை சமனமூட்டி கிருமிகளேயும் கொன்று, சளியை தளரச்செய்து வீக்கத்தைக் குறைத்து கிருமிகளை நாசம் செய்யும்.



பெப்ஸ் மருந்துசத்துக்கள் ஒவ்வொரு சுவாச உறுப்புககும் போவதைக் குறிக்கும் படம்.

ஏஜண்டுகள்:— மெஸர்ஸ். தாதா & கம்பெனி, லி. டி., மதராஸ்.

# PEPS

கிருமி நாச

## தொண்டை & மார்பு வில்லைகள்

தொண்டை, மார்பு. சுவாசப்பை தகராறுகளுக்கு சிறந்த பயனளிக்கவல்ல நிவாரணி,






## சக்தி ஆருடம்!

தபால், தந்தி இலாகா ஆபீசர் Sri K. S. சுப்பய்யா B. A., 23—5—48ல் எழுதுகிருர்:—"தாங்கள் கூறியபடியே நான் பிரமோஷனுடன் கெஜட் பதவி உத்தியோகம் பெற்றேன்."

3 எதிர்கால கேள்விகளுக்கு ரு 1. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணு 8. 1 வருட பலன் ரு. 5. ஜாதகம் கணிக்க ரு. 2. சக்தி கவசம ரு. 7—8—0. வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லதுகடிதம் எழுதும் நேரம் தேவை. N. B:—வெளிநாட்டிறகு முன் பணம் தேவை.

**சக்தி ஹோம், விருத்தாசலம் P. O. (S. I.)**



## ஆனந்த குஸுமாகர லேகியம்.

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டுவருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத் தளர்ச்சி, பசியில்லா திருத்தல், மலச்சிக்கல், ஞாபகக் குறைவு, பித்தம், காசம், க்ஷயம்போன்ற எல்லா வியாதிகளேயும் கண்டித்து சரீர புஷ்டியும். உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக்கூடியது. பத்தியமில்லை.

20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரு. 2—8—0

வி. பி, பார்சலில் தேவையுள்ளோர் தபால் செலவு அணு 14 முன் பணம் அனுப்பி பெறறுக்கொள்ளலாம். விவரமான காட்லாக் இனம்

**மலையாள மெடிகல் ஹால் (Regd.)**
**189, வக்கீல் புது தெரு**
**Post Box No. 27. — மதுரை.**



## உங்கள் எதிர்காலம்

பண நிலைமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம், பிரயாணம், எதிர்பாராத லாப நஷ்டம். படிப்பு, ஆரோககியம், அதிருஷ்ட நாள். எண். நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதியனுப்பப்படும. ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்றுமுதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரு. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணு 8, ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரு. 6. வாரப்பலனுக ரு. 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுபலனும் எழுதியனுப்ப ரு. 5. வி. பி. தனி.

**வி. கே. கிருஷ்ணமாச்சாரியார், ஹனுமதுபாஸி, திருவல்லிக்கேணி, MADRAS 5**



| | |
|---|---|
| A. B. C. Talks. | 1 4 0 |
| ராமானுஜதர்சனம் | 1 0 0 |
| தீனதயாளு | 0 12 0 |
| பாலகங்காதர திலக் | 0 8 0 |
| ஸ்வராஜ்யம் | 0 8 0 |
| சங்கராச்சாரியார் | 0 5 0 |
| ஸ்ரீராம ஜனனம் | 0 4 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

★

மானேஜர்:

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், மதராஸ்.



# குகன் சோப்புகள்

சுதேசி தயாரிப்பு சலவைக்கு மிகவும் சிறந்தது.




குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.

# உங்கள் காலபலன்

ராவ்

## மேஷ ராசி

**(அசுவனி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)**

மேஷராசிக்காரர்களுக்கு இம்மாதத்தில் உத்தியோகம், குடும்பம், பண விவகாரங்கள் இவற்றிலெல்லாம் அவர்களது நலன்களை அபிவிருத்தி செய்து வைக்கக்கூடிய நிலைமையிலேயே கிரஹங்கள் அமைந்துள்ளன. இதற்கு முன்னுலிருந்ததைக் காட்டிலும் பண விஷயத்தில் அதிக லாபம் ஏற்பட இடமுண்டு நெருங்கிய நண்பர். அல்லது சேவை புரியும் இலாகா இவற்றிலிருந்தே அத்தகைய அனுகூலம் வாய்க்கும். குதிரைப் பந்தயம், அல்லது போட்டிகள் இவற்றில் ஈடுபட்டால் அதிருஷ்ட மேற்படும். டாம்பிகப்பொருள்களில் வியாபாரம் செய்பவர்களானுல் அவர்களுக்கும்லாபகரமே நண்பர்கள் அவர்களுடைய தொடர்பு இவற்றிலேயே பெரும் பகுதி அவகாசத்தையும் செலவிட நேரும். இம் மாதத்தில் மன உல்லாசத்துக்கு உகந்த காரியங்களைச் செய்துகொள்ள முடியும். புதிய சிநேகிதர்கள் அறிமுகமாவார்கள் நண்பர்கள் வட்டாரத்தில் பல அலுவல்களும், கலியாணம் போன்ற சுபகாரியங்களும் நிகழும் விவாகமானவர்கள் உவகையோடிருப்பார்கள் சூரியனும், செவ்வாயும் எதிரிடையாக விருப்பதால் 14-ந் தேதியிலிருந்து 22-ந் தேதிவரையில் பின்னணியில் அமைதியற்ற சக்திகள் வேலை செய்துவரும் உத்தியோகம். வியாபாரம் அல்லது சொந்த விவகாரங்கள் ஆகியவற்றில் அச் சக்திகள் கைவரிசையைக் காட்டும். சிநேகிதர், அல்லது வியாபாரத்தில் பங்காளியாயிருப்பவர் அல்லது கிட்டிய பந்து இவர்களில் யாரேனும் ஒருவர் மறைமுகமாக துவேஷத்தோடு வேலைசெய்ய இடமிருக்குமாதலால் உஷாராயிருக்கவேண்டும் உறுதிமொழிகளில் நம்பிக்கை வைக்கக்கூடாது உத்யோகத்தில் சற்று அபிவிருத்திதரும் வண்ணம் மாறுதல் இருக்கும், செலவும், கவலையும் அதிகம். வியாபாரிகள் இம்மாத இரண்டாம் பகுதியில் புதிய துறைகளில் இறங்குவதற்கு ஏற்றதாகும். பாக்கிகளை வசூலிப்பதற்கும் அதுவே தகுந்த தருணம். 15, 21-ந் தேதி இவையிரண்டையும் தவிர மற்றப்படி இம்மாதம் ஆரோக்கியம் திருபதிகரமாகவே இருக்கும். பிறருடன் அபிப்பிராயபேதமோ அல்லது தகராறோ வைத்துக் கொள்ளவேண்டாம் குமாரர்களில் ஒருவரது விஷயமாக ஏதேனும் கவலை இருந்துவரும்.

பிப்ரவரி 16, 24, 26, மார்ச் 3, 5, 10, 12 தேதிகள் இவர்களுக்கு நல்ல நாட்கள்.

## விருஷப ராசி

**(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோஹிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் முடிய)**

சில்லரைக் கிரஹங்களெல்லாம் சாதகமாயிருந்தபோதிலும், குரு, சனி போன்ற பெரிய கிரஹங்கள் இந்த ராசிக்காரர்களுடைய சுபிட்ச மார்க்கத்துக்குக் குறுக்கே தான் நிற்கின்றன. மாறுதல் வேண்டுமென்ற பரபரப்பும் துடிப்பும் நிறைவேறுவதற்கு இது மாதமல்ல. சற்று பொறுமையை வரவழைத்துக்கொண்டு சகிப்புத்தன்மையோடிருந்தால் பயனுண்டு. அபிலாஷைகளில் நண்பர்களிடம் நம்பிக்கைகொண்டு பயனில்லை. பண விஷயத்துக்கு இரண்டாம் பகுதியே விசேஷமெனக் காண்கிறது. உத்தியோகத்துறையில் வீண் கவலைகளிருக்கும். இரண்டாம் பகுதியில் எதிர்பாராத விதமாக ஊதிய உயர்வு கிட்ட வழியுண்டு பொதுவாக ஆரோக்கியம் திருப்திகரமாயிராது. புருஷன் அல்லது மனைவியின் தேகாரோக்கியம் பாதிக்கப்படும். எனவே சிறிது காலத்துக்குக் குடும்ப சுகம் திருப்திகரமாயிராது. உறவினர்களில் ஒருவர் இரண்டாம் பகுதியில் கஷ்டப்பட நேரும் மாறுதலேதேனும் ஏற்பட வேண்டுமென்று தோன்றுமேயன்றி அது நிகழாது. கார் சொந்தக்காரர்களானுல் இதற்காகக் கடும் செலவு செய்ய நேரும். இம்மாத முதற்பகுதியில் கார் விபத்துக்கூட ஏற்படலாமென்று சொல்லலாம். முதலாளிக்கும்-- ஊழியருக்கும் உள்ள உறவு பாதிக்கப்படும். சக ஊழியர்களை அல்லது உறவினர்கள் இவர்களுடன் முடிவில்லாத விஷயங்கள் குறித்து விவாதத்தில் இறங்கக்கூடாது இம்மாதம் முழுதும் பண நிலைமை ஒரே சீராகவிராது. திடீரென்று பணப்பொறுப்பைப் பூர்த்தி செய்யும் கட்டமொன்று ஏற்படும். வியாபாரிகள் தங்கள் வியாபாரத்திட்டங்களைச் செப்பனிட்டுச் சரிப்படுத்திக்கொள்வதில் ஈடுபடவேண்டுமேயல்லாது பணம் திரட்டுவதில் முனைவதற்கில்லை. உபாயமான அளவில் குதிரைப்பந்தயம் போன்ற இனங்களில் இறங்குவதற்கு இரண்டாம் பகுதியே ஏற்றது. ரொம்ப நாளாக உள்ளடங்கிக் கிடந்த வியாபாரத் திட்டம் மீண்டும் முன்னணிக்கு வரும். அது லாபகரமாகவும் விளங்கும்.

பிப்ரவரி 16, 18, 22, மார்ச் 3, 6, 11, தேதிகள் இவர்களுக்கு உகந்த நாட்கள்.

## மிதுன ராசி

**(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்வஸு 3-ம் பாதம் முடிய.)**

மிதுன ராசிக்காரர்களுக்கு இந்த மாதம் சென்ற மாதத்தை விடச் சற்று நல்லதுதான் ஆரோக்கியம் திருப்திகரமென்று சொல்வதற்கில்லை சிலருக்குத் தூர தேசப் பயணம் போகும்படி ஏற்படலாம். குழந்தைகளின் சுகவீனத்தால் முதல் பகுதியில் மன நிம்மதியிராது. அல்லதுசெய் முயற்சிகளில் எதிலாவது ஏமாற்றமேற்படும். இரண்டாம் பகுதியில் பண விவகாரங்கள் சற்று அபிவிருத்தியடையும். ஒரு கலியாண விஷயமாகச் சிரத்தை எடுத்துக் கொள்ள நேரும். ஏமாற்றங்களிருப்பது போலவிருந்தாலும் உத்தியோகத்தில் நிலைமை நன்ருகவேயிருக்கும். பிப்ரவரி 21-ந் தேதிவரையில் முதியவர்களுடனே அல்லது மேலதிகாரியுடனே அபிப்பிராயபேதமேற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். கிட்

டிய பந்து மூலமாகவோ அல்லது சகோதரராலோ தவிர்க்க முடியாத கவலைகளேற்படும். ஊழியம் புரியும் இலாகாவில் பெரிய அதிகாரியின் ஆதரவு கிட்டும். குடும்ப வாழ்க்கைச் சற்று பாதிக்கப்படும். இரண்டாம் பகுதியில் வேலையில் கொஞ்சம் மாறுதலேற்படும். தூர இடத்திலிருந்துவரும் தகவல் சந்தோஷகரமாகயிராது. மனைவியின் ஆரோக்கியம் பாதிக்கப்படும். எதிர் பார்ப்பதை விடச் செலவு அதிகமாகும். சனியும், செவ்வாயும் 12-வது இடத்தைப் பார்ப்பதால் ஒரு நண்பரோ அல்லது உறவினரோ இந்த ராசிக்காரர்களுக்கு விரோதமாக வேலை செய்யலாம். தஸ்தாவேஜுகள் மூலமாகவோ கடிதங்கள் மூலமாகவோ ஏதேனும் கவலைகளேற்படும் குடும்பத்தில் சுபகாரியங்களேதாவது நிகழும் முதல் பகுதி வியாபாரிகளுக்கு நல்லது. இரண்டாம் பகுதியில் வியாபார நடப்பு மந்தமாயிருக்கும். அயல் நாட்டு வியாபாரம் ஏமாற்றம் தரும். எதிர்கால வியாபாரத்திட்டங்களைப்பற்றிய கடிதப் போக்குவரத்தை அனுகூலகரமாக வைத்துக்கொள்ளலாம். கைமாற்று வாங்குவதோ கொடுப்பதோ கூடாது இதனுல் சௌஜன்ய உறவு தடைப்பட்டுப்போகும். சிறிது காலத்துக்கு வியாஜ்ய விவகாரங்களினுல் கவலைப்படும்படியிருக்கும். ரேஸ் பிரியர்களுக்கு நல்லதல்ல.

பிப்ரவரி 10, 24. மார்ச் 5, 6, 10, 11 தேதிகள் இவர்களுக்கு உசித தினங்கள்.

## கடக ராசி

### (புனர்வஸு கடைசி பாதம் முதல் புஷ்யம், ஆயில்யம் முடிய)

இந்த மாதம் அனேகமாக எல்லாக் கிரஹங்களும் 6, 7, 8,-வது வீடுகளில் இடம் பெற்றிருப்பதால் குடும்பத் தொல்லைகளும், துக்கங்களும் இந்த ராசிக்காரர்களுக்கு இருந்துவரும் சகல விஷயங்களிலும் மன நிம்மதியிராது. பணவிஷயத்தில் அசௌகரியங்கள் உண்டு. சில இனங்களில் கடன்படும்படிகூட இருக்கும். புருஷனைவிட மனைவிதான் அதிகமாகக் கஷ்டப்படும்படியிருக்கும். உத்தியோகத்தில் சுமுகமான நிலைமையிராது மனச்சாந்தியொன்றினுல்தான் மனதைத் தளரவிடாமல் வைத்துக்கொள்ளமுடியும் சூழ்நிலை அதிருப்திகரமாயிருப்பதற்குப் பரிகாரமாக ரஜாப்பெறும்படி தோன்றும்.

இரண்டாம் பகுதி சற்று பாதகமில்லை. இருப்பினும் ஆரோக்கிய நிலைமை திருப்திகரமாயிராது பண விஷயமாகச் சில மனஸ்தாபங்கள் ஏற்படும். கிட்டிய பந்து ஒருவர் இந்த ராசிக்காரர்களிடம் அதிருப்தி கொள்ளலாம் பார்க்கப்போனுல் இந்த மாதம் எந்த விஷயத்திலும் நம்பிக்கைகொண்டிருப்பதற்கில்லை வியாபாரிகளின் நடப்பும் திருப்திகரமாயிராது. ஷேஷ்யங்கள் லாபகரமில்லாமல் போவதற்கும் இடமுண்டு. இரண்டாம் பகுதியில் ஒரு தூரதேசப்பயணம் வாய்க்கலாம். தூர இடத்திலுள்ள வாடிக்கைக்காரர்களுடன் செய்யும் வியாபார இனங்களில் கவலை மூளும் குமாரர்களில் ஒருவருடைய தேகநிலை பாதிக்கப்பட்டு அபாரமாகச் செலவு செய்ய நேரிடும். இரண்டாம் பகுதியில் இருக்கும் வீட்டைப் பற்றி கவலை ஏற்படடு இதனுல் தகராறுகளும் உண்டாகும். பந்தய இனங்களில் நிலைமை உற்சாகம் தருவதாயிராது.

பிப்ரவரி 17, 21, 22, 24, மார்ச் 2, 5, 6, 11 தேதிகள் இவர்களுக்கு சிறந்த தினங்கள்.

## ஸிம்ம ராசி

### (மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய.)

இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் அனுகூலம் தரத்தக்க கிரஹங்கள் ரொம்ப சொற்பம் முதல் பகுதியில் குரு மட்டிலும் சாதகம். பின்னர் குரு நீசம். எனவே பணத்தைப்பற்றியும், குழந்தைகள் ஆரோக்கியம் குறித்தும் கவலைகளேற்படும். நல்ல வருமானம் இருந்தாலும் செலவு கடுமையாகிக் கடன் வாங்கும் நிலைமை ஏற்படும். இது கொஞ்சகாலம் வரையில். பணக்காரர்களுக்குப் பணமுடை மட்டிலும்தான் ஒரு குமாரனைப்பற்றியோ அல்லது ஒரு குழந்தை ஜனனம் குறித்தோ கவலைப்படும்படியிருக்கும். தம்பதிகளுக்குள் ஏற்படும் மனஸ்தாபத்தால் குடும்ப சுகம் பாதிக்கப்படும். விவாக ஏற்பாடுகள் சுலபமாக வெற்றிபெருது. உத்தியோகத்துறையில் அதிக வேலை சுமத்தப்படும். முக்கியமாக இரண்டாம் பகுதியில் மேலதிகாரிகள், பெரியோர்கள் இவர்களுடன் அபிப்ராயபேதம் கொள்ள நேரும். நன்கு பரிசீலனை செய்தபிறகு புதிய ஊழியர்களைப் பொறுக்கலாம். முதலாளிகளானுல் ஊழியர்களால் உபத்திரவமேற்படுவது பிரத்யேகாம்சமாகும். பிப்ரவரிமாதம் 22-ந் தேதி வரையில் சூழ்நிலைமை அமைதியாயிராது வியாபாரிகளுக்கு முன்னேற்றப் பாதையில் தடைகளுண்டு. கெட்ட தசா,புக்தி நடப்பிலுள்ளவர்களுக்கு ஏமாற்றம் கௌரவத்துக்குஹானி, வியாஜ்யம், நண்பர், உறவினர் அதிருப்தி முதலியவையெல்லாம் ஏற்படும். வயோதிகர்களுக்கு. கீல்வாயு, நரம்புத் தொல்லை, முதலிய கோளாறுகளெல்லாம் ஏற்படும் பணவிஷயத்துக்குக் கடைசீ வாரம் நல்லது குதிரைப்பந்தயப் பற்றுள்ளவர்களுக்கு முதல் பகுதி பரவாயில்லை.

பிப்ரவரி 15, 16, 24, 25, 26, மார்ச் 2, 5, 8, 12 தேதிகள் இவர்களுக்கு விசேஷம்.

## கன்யா ர்ராசி

### (உத்திரம் 2-ம் பாதம் முதல் ஹஸ்தம், சித்திரை 2-ம் பாதம் முடிய.)

இம் மாதம் கன்யாராசிக்காரர்களுக்குக் கிட்டக்கூடிய பலன்கள் நல்லதும் கெட்டதும் கலந்து கட்டியாக விருக்கும் முதற் பகுதியில் மட்டும் குடும்பத்தில் சந்தோஷமுண்டு இதேபோல பண விஷயத்திலும் நிலைமை திருப்திகரமே. இரண்டாம் பகுதியில் கடன் வாங்கும்படி ஏற்படும். பணம் கொடுப்பவர்களாயின் ஏதேனும் நஷ்டமேற்படும். எந்த நடவடிக்கையிலும் நாணயம் சரியான முறையிலிராது. எதிரிகளினுல் தொந்திரவுகளோ அல்லது அவதூரோ ஏற்படும். நண்பர்களில் ஒருவருடனே அல்லது உறவினருடனே தகராறு ஏற்படும். இரண்டாம் பகுதியில் சொற்ப நஷ்டமேற்படலாம் வேலைக்காரர்கள் தொந்திரவுக்காகத் தீவிரமாகச் சிந்திக்கவேண்டி வரும். அல்லது ரொம்பப் பிரியமாகக் கருதியிருக்கும் வஸ்து களவு போகும் இரண்டாம் பகுதியில் ஆரோக்கியம் எதிர்பார்க்கும் அளவுக்குச் சுகமாயிராது. ஹிருதயக் கோளாறுகள் உள்ளவர்களுக்கு இரண்டாம் பகுதி ஏற்றதல்ல. பிப்ரவரி 28-ந் தேதி சந்தோஷகரமாயிராது. எந்த விதத்தில் முயன்று பார்த்தாலும் பணம் திரட்டுவது கஷ்டமாகும். ஆனுல் எதிர்பாராதவிதமாகத் திடீரென்று லாபம் வரவும் இடம்

**1949-ம் வருஷம் பிப்ரவரிமீ 13உ முதல் 1949-ம் வருஷம் மார்ச்சுமீ 14உ வரையில் பொதுவாக ஒவ்வொரு ராசிக்காரர்களுக்கும் பலன்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ராசியைத் தெரிந்துகொள்ள நட்சத்திரங்களும், பாதங்களும் கூடவே கொடுக்கப்பட்டிருக்கின்றன.**

உண்டு. புதிய சிநேகிதர்கள் ஏற்படுவார்கள். பழைய நண்பர்கள் விரோதமாவர். உத்தியோக வாழ்க்கை உவகை தருவதாயிராது. இரண்டாம்பகுதியில் கீழ்த்தரச் சிப்பந்திகளால் தொல்லைகளேற்படும். இதனால் மனநிம்மதிகெடும். எனவே அவர்களை அதிருப்திக்கிடமின்றி பார்த்துக்கொள்ள வேண்டும். இல்லையானால் தொந்திரவுகளே அதிகரிக்கும் வேலையில், மேலதிகாரிகளின் ஆதரவு எதுவும் கிட்டாது. வியாபாரிகளுக்கும் இந்தக் கட்டம் தரமில்லை. வியாபாரத்தில் எதிர்பாராத சங்கடம் ஏற்படும்.

*பிப்ரவரி 15, 16, 17, 24, 28, மார்ச் 5, 6, 10, 12 தேதிகளில் இவர்களுக்கு அனுகூலம்.*

**1949-ம் வருஷம் பிப்ரவரிமீ 13-ந் தேதி காலையிலுள்ள கிரஹ நிலை.**

| | | | |
|---|---|---|---|
| | ராகு | | உரானஸ் |
| சூரியன் செவ்வாய் | ராசி | | சந்திரன் |
| புதன் சுக்கிரன் | | | சனி |
| குரு | | கேது | நெப்டியூன் |

## துலா ராசி

**(சித்திரை, 3-ம் பாதம் முதல், சுவாதி, விசாகம் 3-ம் பாதம் முடிய.)**

துலாராசிக்காரர்களுக்குச் சாதகமான சக்திகள் இம்மாதத்தில் இயங்குகின்றன. சுபகாரியங்கள். குடும்ப சந்தோஷம் குழந்தைகள்பற்றிய மகிழ்ச்சிகரமான தகவல்கள், பண வசதி முதலியவைகளெல்லாம் இம்மாதம் முக்கியமாக முதல் பகுதியில் நிகழக்கூடிய நல்ல அம்சங்கள். இரண்டாம் பகுதியில் 5-வது இடத்தில் பல கிரஹங்கள் கூடுகின்றன இதனால் மனதில் பல விஷயங்கள் புகுந்து பெரிய சுமையாகவிருக்கும். குமாரர்களில் ஒருவருடைய பிரச்னை பெரிதாகி பரிகாரம் தேட வேண்டி வரும். பண விஷயத்தில் லாபம் கிட்ட ஹேதுவுண்டு சகோதரரில் ஒருவருக்கோ அல்லது உறவினருக்கோ தக்க சமயத்தில் உதவி புரிய நேரும். சொந்த ஊருக்குப் போகும் சந்தர்ப்பமும் வாய்க்கலாம். உறவினர்களை உபசரிக்க நேரும். முதல் பகுதியில் ஆரோக்கியம் திருப்திகரம். வயிற்றுக் கோளாறினால் வெகுநாளாக அவதிப்பட்டு வந்தவர்களுக்கு இம்மாதம் அதிகக் கஷ்டமாகவேயிருக்கும் இது முதல் பகுதியில் சம்பவிக்கக்கூடியது மனதை எந்த அளவுக்கு வேண்டுமாயினும் உயர்ந்த ரீதியில் பண்படுத்திக் கொள்ளலாம். இலக்கியம்போன்ற துறையிலுள்ளவர்களுக்கு இம்மாதம் ஒப்பற்ற வசதிகளை உண்டுபண்ணிக் கொடுக்கும். எழுத்தாளர்கள். நிருபர்கள், ஓவியர். முதலியவர்களுக்குச் சிறந்த காலம்; உல்லாஸப் பயணத்துக்கும் உகந்த மாதம் முதற் பகுதியில் 3 வது இடத்தில் குரு இருக்கிறார் எனவே மனதை உயர்ந்த லட்சியங்களில் ஈடுபடுத்தி ஆத்மிகத் துறையில் கவனம் செலுத்தலாம். இது மனச் சாந்தியை அளிக்க உதவும். உத்தியோக வாழ்க்கை பாரமாகவேயிருக்கும். வியாபாரிகளுக்கு உபாயமான கால நிலை கடன் கொடுப்பது இச்சமயத்தில் உசிதமல்ல சக ஊழியர், சிப்பந்திகள் இவர்களால் கவலைகளேற்படும் வீடுபற்றிய சச்சரவுகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவும்.

*பிப்ரவரி 17, 22, 24, 28, மார்ச் 2, 5, 6, 10, 11 தேதிகள் இவர்களுக்கு உத்தமம்.*

## விருச்சிக ராசி

**(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)**

இருக்கும் வீட்டைப்பற்றிய பிரச்னை, குடும்பக் கவலை ஆரோக்கிய நிலைமையினால் வியாகூலம், பண விஷயங்களைப்பற்றிய இலேசம் முதலியவையெல்லாம் இம்மாதம் விருச்சிகராசிக்காரர்களுக்கேற்படக்கூடிய முக்கியமான அம்சங்கள். பணம் சம்பந்தப்பட்ட வரையில் முதல் பகுதி பரவாயில்லை. உத்தியோகத்தில் நல்ல ஆதரவுண்டு. வேலையும்அதிகமாயிருக்கும். மேலதிகாரியின் ஆதரவுண்டு. சிலருக்கு ஒரு பிரயாணம் ஏற்படக்கூடும். கார் சொந்தக்காரர்களுக்குத் தங்கள் வண்டியைப்பற்றி ஏதாவது கவலைகளேற்படும். கார்களோ அல்லது வீடோ வாங்குவதற்கு இம்மாதம் சுபகரமாகும். புதிய சிநேகிதர்கள் ஏற்படுவார்கள். குடும்ப சந்தோஷத்தை நாடும்படியிருப்பினும் இது சுலபமாகக் கைகூடாது. சிலருக்கு தற்போதிருக்கும் இடத்தை விட்டு வேறு இடத்துக்குக்கூடப் போகும்படி நேரும். புத்திரர்களில் ஒருவருடைய தேக நிலைபற்றி ரொம்பக் கவலை ஏற்படும். விவாக முயற்சிகள் சில இனங்களில் வெற்றியடையும். ஆனால் இதில் உஷாராயிருக்கவேண்டும். ஏனெனில் எதிர்தரப்புக்காரர்களுடன் மனஸ்தாபம் கொள்ள நேரிடும். முதியவர் ஒருவரின் தலையீட்டினால் விவாக விஷயமான பேச்சு தட்டிப் போகும். வியாபாரிகளுக்கு இம் மாதம் ஓரளவு அதிருஷ்டகரமே. இருப்பினும் வியாபாரம் மந்தமடைந்து முதல் முடங்கிக் கிடக்கும்படி நேரும் புதிய வாடிக்கைக்காரர் ஏற்பட்டு பேச்சு வார்த்தைகள் துவங்கும். இதற்கு முதல் பகுதி தரமாயிருக்கும். அரசியல் துறையிலுள்ளவர்களானால் பிரகாசமான நிலைமை. மனதுக்குப் பிடித்தமான புத்தகங்களில் பயிற்சிபெறத் தூண்டுதல் பிறக்கும் இரண்டாம் பகுதியில் மனைவி அல்லது புருஷனின் தேகாரோக்கியம் பாதிக்கப்படும். முதற்பகுதியில் மட்டும் குதிரைப் பந்தயப் பிரியர்களுக்கு காலபலம் அதிருஷ்டகரமாயிருக்கும்.

*பிப்ரவரி 16, 18, 22, 24, மார்ச்சு, 25, 7, 10, 12, தேதிகள் இவர்களுக்குத் திவ்யம்.*

## தனுர் ராசி

**(மூலம், பூராடம்; உத்திராடம் முதல் பாதம் முடிய.)**

இந்த மாதம் தனுர்ராசிக்காரர்களுக்குச் சுமாரான ஆதரவைத் தருவதாகவேயிருக்கும். பண விஷயத்தில் அபிவிருத்தி ஏற்படும் குடும்ப சுகம் மத்தியமம். உத்தியோக உயர்வுண்டு. உறவினர்களுடனும் ஊழியம் புரியும் இலாகாவுடனும் கடிதப்போக்குவரத்து நடத்துவதறகு இம்மாதம் ஏற்றது. இலக்கியத்துறையிலுள்ள அலுவல்களுக்கும் இது தரமானமாதமே ஒரு சிறிய பிரயாணம் நேரும். புதிதாகக் கல்யாணமானவர்களானால் மனைவி அல்லது புருஷனுக்குச் செல்வம் சேரும். புத்திரரில் ஒருவர் எதிர்பார்க்கும் அளவில் அபிவிருத்தியடைவார் நிலம் அல்லது வீடு இவற்றில் பணம் முதலீடு செய்யும்படியிருக்கும். செலவு கட்டுமீறி அதிகரிக்கும் அனுகூலம் தரத்தக்க முறையில் நண்பர்கள் ஏற்படுவர் இரண்டாம் பகுதியில் போராடியே காரியங்களைச் சமாளிக்க வேண்டியிருக்கும். பணமுடை கடுமையாக விருக்கும். தற்காலிகமாகப் பணம் புரட்டும்படியிருக்கும். வியாதியிலிருந்து குணமடைந்து வருவோ

ருக்கு மீண்டும் வியாதி திருப்பிக்கொள்ளும். ரோக ராசியில் இரு தீய கிரகங்கள் இருப்பதே இந்நிலைமைக்குக் காரணம் உறவினர்களோடும், அண்மையில் இருப்பவர்களுடனும் அபிப்ராயபேதம் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். பிப்ரவரி 15, 17, 21 தேதிகளில் வேலைசெய்யும் கிரஹங்கள் சாதகமாயிருக்காததலால் சந்தோஷமேற்படாது. இந்த தினங்களில் புதியவேலையில் இறங்குவதோ மேலதிகாரியிடம் ஆதரவை நாடுவதோ கூடாது. முக்கியமாக முதல் பகுதிதான் வியாபாரிகளுக்கு நல்லது இரண்டாம் பகுதியில் கண்மூடித்தனமான நடவடிக்கைகளால் நஷ்டமடையும்படியான நிலைமை இன்னும் இருந்தே வருகிறது இருப்பினும். ஹேஷ்ய பூர்வமான அலுவல்களுக்கு இம்மாதம் முழுவதுமே கெடுதல் என்று சொல்லிவிட முடியாது. உத்தியோகம், தொழில் இவற்றில் பிரவேசிக்க எண்ணியுள்ளவர்களுக்கு இந்த சமயம் ஏற்றதாகும். முதல் பகுதியில் பந்தய இனங்களில் சுமாரான வருமானமுண்டு

பிப்ரவரி 16, 18, 22, 24, மார்ச் 2, 5, 10, 12 தேதிகள் இவர்களுக்குச் சிலாக்கியம்.

## மகர ராசி

### (உத்திராடம் 2-ம் பாதம் முதல் திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் முடிய.)

கிரஹங்களில் கெடுதலான ஸ்தான விசேஷத்தால் தீய பயன்களே இந்த ராசிக்காரர்களுக்கு இம்மாதம் மேலோங்கி நிற்கும் பொதுவாக எல்லா விஷயங்களிலும் மன நிம்மதியிராது. இரண்டாம் பகுதியில்தான் குடும்ப விஷயங்கள் அபிவிருத்தியடையும். முதற் பகுதியில் பணமுடை அதிகம் என்றாலும் பண விவகாரங்களிலுள்ள சங்கடங்களைத் தற்காலிகமாகச் சமாளிக்க இயலும். இதனால் ஏமாற்றங்கள், சச்சரவுகள் முதலியன ஏற்படடாலும் இரண்டாவது வாரத்தில் நிலைமை சரிப்பட்டு விடும பிப்ரவரி 15-ந்தேதி வாக்கில் திடீரென்று திரவிய லாபமேற்பட நியாயமுண்டு. இந்த சந்தர்ப்பத்தை செவ்வையாகப் பயன்படுத்திக்கொள்ளவேண்டும் இல்லையானால் ஏமாற்றமே கிட்டிய பந்துக்கள், பெரியோர்கள், மேலதிகாரிகள் முதலியவர்களுடன் இம்மாதம் மனஸ்தாபம் கொள்ளவும் நேரிடும் முதல்பகுதியில் ஒரு பிரயாணம் கூட உண்டெலாம் இந்த சமயத்தில் உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவு கிட்டும். நல்ல காரியத்தின் நிமித்தம் அதிகமாகச் செலவு செய்ய நேரிடும். கடன்படாமல் பார்த்துக்கொள்ளவும் குடும்ப வாழ்க்கையில் மன நிம்மதி யிராது. இச்சமயத்தில் ஏதேனும் தகராறு மு...க்கும். இதை லட்சியம் செய்யவேண்டியதில்லை இன்னும் சிறிது காலத்துக்கு ஆரோக்கிய நிலை திருப்திகரமாயிராது. கீல்ப்பிடிப்பு, நரம்புக்கோளாறு இதனால் அவதிப்பட நேரும். மனைவிகூட தேக சுகவீனமுறக்கூடும் வியாபாரிகளுக்கு மாத ஆரம்பம் லாபகரமாயிருக்கும். சில தடைகளிருப்பினும் இரண்டாம் பகுதி வியாபார அபிவிருத்திக்கு ஏற்றதாகும். முதல் பகுதியில்தான் குதிரைப்பந்தயத்தினால் ஏதேனும் லாபமேற்படும். ஆனால் கண்மூடித்தனமான ஹேஷ்யங்கள் செய்தால் ஏமாற்றம்தான்

பிப்ரவரி 17, 22, 24, 26, மார்ச் 2, 5, 6, 12, தேதிகள் இவர்களுக்கு உன்னதமானவை.

## கும்ப ராசி

### (அவிட்டம் 3-ம் பாதம் முதல் சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் முடிய)

கும்பராசிக்காரர்களுக்கு இம்மாதம் பொதுவாக எல்லா விஷயங்களும் மந்தமாகவே யிருக்குமென்றாலும் கிரகங்களின் போக்கு அனுகூலகரமாகவேயிருக்கும். குரு 11-வது இடத்திலிருந்து பெயருவதற்கு முன்னதாக சுபிட்சந்தை உண்டுபண்ணுவது திண்ணம். குரு பிப்ரவரி 28 ந்தேதி பெயருகிறார். இம்மாத இரண்டாம் பகுதியில் 4 கிரகங்கள் லக்னத்திலிருக்கும் சனியின் பார்வை அவற்றிற்குண்டு இதனால் நிலைமை உறுதிப்பட்டு சேவைத்துறையில் பிரகாச நிலை ஏற்படும். உத்தியோகத்தில் பொறுப்பு அதிகரிக்கவும் இடமுண்டு. பணவிஷயத்தில் அனுகூலங்கள் பிறக்கக்கூடும். ஈடுபடும் நடவடிக்கைகளில் முன்போலவின்றி அதிகாரம் பிரயோகமாகும். பலவேறு கோளாறுகள் காரணமாகக் குடும்பத்தில் மனநிம்மதி இல்லாமல் போகும். பிப்ரவரி முதல் தேதியிலிருந்து செலவு வெகு கடுமை. செலவினங்கள் அதிகமாகும். வேலை புரியும் இலாகாவில் ஆதரவுண்டு. மேலதிகாரியுடன் மனஸ்தாபம் கொள்ள வேண்டாம். இல்லற சுகமே இராது புதிதாகக் கல்யாணமானவர்களும் சௌஜன்யமாயிருக்க முடியாது. வியாபாரிகளுக்கு இம்மாதம் சுலபமாயிராது. ஏதாவது எதிர்ப்பு காரணமாக வசதிகள் இல்லாமற்போகும்.

பிப்ரவரி 17, 18, 22, 24, 26 மார்ச் 2, 5, 6, 10, 12 தேதிகள் இவர்களுக்கு நல்ல நாட்கள்.

## மீன ராசி

### (பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)

சென்ற மாதத்தைப்போல இம்மாதம் அவ்வளவு சாதகமாயிராது. பணமுடை அதிகமேயென்றாலும் முதற் பகுதி அனுகூலகரம் மேலதிகாரியின் பாராட்டுதல் காரணமாக உத்தியோகத்தில் மனதிற்குப் பிடித்த மாறுதலேற்படும் மனம் குடும்பத்தில் மாறுதலை விரும்பும். செலவு உச்சத்தை அடையும். ஏற்கனவே ஏற்பட்ட கடன் காரணமாகக் கவலை ஏற்படும் பணக்காரர்களுக்கும் எதிர்பாராத செலவேற்படும் குடும்பத்தில் சுப காரியங்களும் நிகழும். நேர் முகமாகவோ மறைமுகமாகவோ திடீரென்று திரவிய லாபம் கிடைக்க வழி உண்டு. பணத் தகராறுகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளவும். முதல் பகுதியில்தான் குடும்பத்தில் சந்தோஷமாயிருக்க முடியும். எதிரிகள் ரகசியமாக இந்த ராசிக்காரர்களுக்கு எதிராக வேலை செய்வராயினும் பயன்படாது சொந்த முறையில் பார்க்குமளவில் இம்மாதம் நூதனமானதென்றே சொல்லவேண்டும் எதிர்பாராத தடைகளினால் வாழ்க்கை ஒரே குழப்பமாகவிருக்கும். இந்த நிலைமை கொஞ்சகாலம் வரையில்தான். இந்தக் கட்டத்தில் முதலாளிகளுக்கு ஏமாற்றம் ஏற்படும் வகையில் ஊழியர்கள் ரஜா பெற்றுப்போக நேரும். நண்பர்களை இச்சந்தர்ப்பத்தில் நம்பிப் பிரயோசனமில்லை தூரதேசப் பயணம்கூட ஒன்றுநேர இடமுண்டு. பண விஷயத்தில் ஹேஷ்யங்கள் கூடாது. பண வசதிகளுக்கு உதவிகரமாகக் கிரக நிலைமை இல்லை. தேகசுக மற்று இருந்தவர்களுக்குத் திரும்பவும் நோய்பீடிக்க இடமுண்டு. எனவே ஜாக்கிரதையாகவிருக்கவேண்டும். முதற்பகுதியில் கூட்டு வியாபார ஏற்பாட்டைச் சாதகமாக அமைத்துக்கொள்ளலாம். இரண்டாம் பகுதியில் இதைச் செய்தால் நீடித்து நிற்காது.

பிப்ரவரி 15, 16, 17, 22, 24, மார்ச் 2, 5, 6, 10, 12 தேதிகள் இவர்களுக்கு உபயோகமான தினங்கள்.

★

ஸ்ரீ பி. வி. ராவ்,
5, வாசுதேவபுரம், ஐஸ் ஹவுஸ் ரோடு,
திருவல்லிக்கேணி.




# 38

## கதையில் வளர்ந்த நந்தனார்

★

பெரிய புராண காலத்திற்கு முன்பு வாழ்ந்த நம்பியாண்டார் நம்பியாவது, அவருக்கும் முன்பு வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமியாவது நந்தனார் தீக்குளித்த வரலாற்றைக் குறிப்பாகவும் வெளியிடவில்லை ஆனால் சேக்கிழார் பெருமானின் காலத்திற்குப் பின்பு வாழ்ந்த சந்தானாசாரியருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் நந்தனார் தீக்குளித்த வரலாற்றை இந்தச் சரித்திரத்தின் முக்கிய அம்சமாக வற்புறுத்துகிறார்.

**நன்மை திகழ் மேற்கா நாட்(டு)**
**ஆத னூர்வாழ் நந்தனார்**
**புறத்தொண்டர் 'நாளைப் போக,**
**பொன் மலிதென் புலியூர்க்(கு)!'**
**என்(று)உரைப்பார், புன்கூர்ப்**
**பொய்கை அமைத்(து)**
**அடல் ஏறு பிரிய நோக்கி,**
**வன்மதில் சூழ் தில்லை இறை**
**அருளால் வாய்ந்த வண்தழலின்**
**இடை மூழ்கி, மறையோர்**
**[போற்ற,**
**மின்மலிசெஞ் சடை முனியாய்**
**எழுந்து, நாதன் விளங்கு நடம்**
**தொழ, மன்றுள் மேவி னாரே.**

[புறத்தொண்டர்—(ஆலயத்திற்கு) வெளியே நின்று தொழும் தொண்டர் பொன் மலி தென்புலியூர்—அழகு மிகுந்த சிதம்பரம் புன்கூர்ப் பொய்கை—திருப்புன்கூரில் நீர் நிலை. அடல் ஏறு — வலிமை வாய்ந்த ரிஷபம். பிரிய—விலக நோக்கி— (இறைவனைத்) தரிசனம் செய்து வன்மதில்—வலிமையான மதில். தில்லை இறை—சிதம்பர நடராஜா. வண்தழல்—கொழுங்கனல் மின்மலி—ஒளி மிகுந்த. மன்றுள்—சபையில்.]

இது உமாபதிசிவம் கூறும் திருநாளைப் போவார்- புராணஸாரம் சோழவளநாட்டின் பகுதியான மேற்காநாட்டைச்சார்ந்த ஆதனூரில் நந்தனார் என்னும் பெயருடைய புறத்தொண்டர் ஒருவர் தோன்றினார். ஆலயத்தில் சென்று தொழுதல் தம்மரபுக்கு இசையாததால் இவர் ஆசைபற்றி 'பூலோக சிவலோகம் 'என்று' அடியார்கள் கொண்டாடும் சிதம்பரத்தில் நடராஜதரிசனம் செய்ய நாளைப்போவேன், நான் நாளைப்போவேன்!' என்று சொல்லிக் கொண்டிருந்தார் இவ்வாறு பல தினங்கள் சென்றபடியால் நந்தனார் 'திருநாளைப்போவார்' என்ற பெயரும் பெற்றார் இவர் திருப்புன்கூரில் ஒரு பொய்கை அமைத்து, அவ்வூர் ஆலயத்தில் அற்புதமாக நந்திவிலக வெளியேயிருந்து சிவதரிசனம் செய்தார் இது நந்தனார் சரித முற்பகுதியாக உமாபதி சிவாசாரியரால் குறிக்கப்படுகிறது.

இவ்வளவு அற்புதமான பக்தியனுபவத்துடன். தொடங்கும் சரித்திரம் எவ்வாறு முற்றுப் பெறுகின்றது பாருங்கள்! தில்லையில் திருநடம் புரியும் இறையருளால் வாய்ந்த தீயில் குளித்து மறையோர் போற்ற மறைமுனியாய் எழுந்து திருநடம் தரிசிக்கக் கனகசபையுள் புகுந்தார் நந்தனார் என்ற பேரற்புதத்தோடு இக்கதை முற்றுப்பெறுகின்றது. இவ்வாறு உமாபதிசிவம் காட்டும் நந்தனார் கதை, சேக்கிழார் பெருமான் பாடிய 'திருநாளைப்போவார் நாயனார் புராண'த்தின் ஸாரமே யாகும்.

நந்தனார் தீக்குளித்த வரலாறு சேக்கிழார் காலத்திலே பிரசித்தமாக வழங்கியதென்று கருதலாம். நந்தனார் பிறந்த புலைப்பாடியை உள்ளவாறே கவிமுறையில் அமைத்துக் காட்டும் சேக்கிழார் பெருமான் தாம் கேட்ட நந்தனார் கதையையும் உள்ளது உள்ளவாறே-கேட்டது கேட்டபடியே—பாடியுள்ளார் என்று கருதுவதில் தவறொன்றுமில்லை சேக்கிழார் பெருமான் கேட்டறிந்த விவரங்கள் கவிமுறையில் 'பக்திரசம் ததும்பும் ஒரு தீங்கனியாக'ப் பெரிய புராணச் சோலையில் காட்சியளிக்கின்றன.

சேக்கிழார் பெருமானை உமாபதிசிவம் பின்பற்றித் தீக்குளித்த வரலாறு கூறுவதுபோல். 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை' ஆசிரியரான கோபால கிருஷ்ண பாரதிகளும் கூறியுள்ளார் - பக்திரஸத்துடன் சோகரஸம், ஹாஸ்யரஸம் முதலியவைகளும் 'சரித்திரக்கீர்த்தனை'யில் காணப்படுகின்றன இப்படிப்பல புதிய அம்சங்கள் சேர்ந்திருப்பதால், சேக்கிழார் பெருமானின் உண்மை வரலாற்றைத் திரித்துக் கூறினாரே கோபாலகிருஷ்ண பாரதி என்று கருத வேண்டிய அவசியமில்லை. உண்மையில் 'நந்தனார் சரித்திரக் கீர்த்தனை'யும் பெரிய புராணத்தில் வரும் சரித்

திர நிகழ்ச்சிகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கிறது.

பின்னேன் வேண்டும்

விகற்பம் கூறி

என்னும் இலக்கணம் தழுவிக் கோபாலகிருஷ்ண பாரதியார், சேக்கிழார் பாடும் திருநாளைப் போவார் புராணத்தின் வழிநூலாகவே தமது கீர்த்தனை நூலை இயற்றியிருக்கிறார். கீர்த்தனை நூலானதால் இசை நூல் அமைதிகள் அமைத்திருக்கிறார். கதாகாலட்சேபங்களிலும், நாடக மேடைகளிலும் உலாவிப் பெருந்தொகையினரான மக்களுக்கும் பயன்பட வேண்டுமென்று தமது சரித்திரக் கீர்த்தனையைப் பலவகை ரஸங்களுக்கும் ஒரு களஞ்சியமாக்கியிருக்கிறார். இதனால்தான் நந்தனரை ஆதனூர் வேதியருக்கு அடிமையாகக் காட்டி, இப்பெரியாரின் பக்திப் பைத்தியம், சேரியில் பூசை, பெரிய கிழவன் வருகை களையெடாமல் ஜலம் விடாமல் பயிர் விளைதல், நந்தனர் வேதியருக்கு உபதேசித்தல் முதலான பல விஷயங்களையும் ரஸமாகச் சேர்த்துப் பாடியிருக்கிறார் கோபாலகிருஷ்ண பாரதியார். இந்தப் புதிய அம்சங்களில் சில, கர்ணபரம்பரையாகப் பாரதியார் கேட்டறிந்த விஷயங்களாகவும் இருக்கலாம் வேறு சில, தலபுராண வியாசமூர்த்திகளின் தயவால் கிடைத்த சரக்காகவும் இருக்கலாம் இந்த அம்சங்களில் முக்கியமானவை ஆசிரியரின் கற்பனையாகிய சொந்தச் சரக்காகவும் இருக்கக் கூடும்.

எனினும் வழிநூல் ஆசிரியர் தம் வழிநூற்போக்கிலும், சேக்கிழாரின் உள்ளக் கிடக்கையை மறந்துவிட்டார் என்றோ புறக்கணித்தார் என்றோ சொல்லமுடியாது. சேக்கிழார் கூறும் புராணத்திலே நந்தனரது மெய்யன்பு சாதியால் ஏற்பட்ட தடையினால் சிறிதும் குன்றாது நாளுக்குநாள் வளர்ந்து கொண்டே போயிற்று. இந்த உயி

வேலைக்குவந்தவன் :— இதுக்கு முந்தி 8-வருசம் ஜெயில்லே இருந்தேனுங்க.........

கிரஹஸ்தர் :—ஐய்யய்யோ......... ஊஹூம்.........

வேலைக்குவந்தவன் :—சே...சே!... ஜெயில் வார்டரா இருந்தேனுங்க. வேலை புடிக்காமே வுட்டுட்டேனுங்க!

ராசை இடையூறுகளுக்கெல்லாம் இடையூறாகி வெற்றி சூடியது— என்பது அதிமுக்கிய அம்சம். இந்த அம்சத்தை வழி நூலிலும் தெளிவாகக் காண்கிறோம் தில்லைவாழ் அந்தணருக்கும் கற்பித்தார் நந்தனர் என்ற ஒரு குறிப்பும் பெரிய புராண வரலாற்றில் காணப்படுகின்றது இதை உணர்ந்தே கோபாலகிருஷ்ண பாரதியார் ஆதனூர் வேதியருக்கு நந்தனர் உபதேசம் செய்திருப்பதாகக் கதை வளர்த்திருக்கவும் கூடும். சுருங்கச்சொன்னல், சிவபெருமானிடம் பக்திபூண்ட பாரதியாருக்குச் சேக்கிழார் பெருமானிடத்திலும் பக்திக்குக் குறைவில்லை.

சேக்கிழார் காலந் தொட்டுக் கோபாலகிருஷ்ண பாரதியார் காலம் வரை நந்தனர் சரித்திரமும் நந்தனரின் பக்திபோல் வளர்ந்துகொண்டே வந்திருக்கிறது என்று கருதுவதிலும் தவறில்லை ஆனல் அடிப்படையான சரித்திர நிகழ்ச்சிகளிலும், சேக்கிழாரின் உள்ளக்கிடக்கையிலும் ஒன்று பட்டே கோபாலகிருஷ்ண பாரதியார்,

நந்தன் சரித்திரம்
ஆனந்தம்

என்றும்,

திருநாளைப் போவான் சரித்ரம்
தேனிலும் பாலினும் இனியது
[கண்டீர்!

என்றும் தாம் பாடியிருக்கும் இந்தத் திவ்ய சரித்திரத்தை ஆனந்தமான இசையமைதிகளுடன் தேனிலும் பாலினும் இனிய இசைத் தமிழில் பாடியிருக்கிறார்.

'தாழ் குல'த்துதித்து 'உயர்வற உயர்'ந்ததொரு லட்சியம் கொண்டு, அதற்காக உடல், பொருள் ஆவி என்னும் மூன்றினையும் ஒருங்கே துறந்து வாடாத புகழ் சூடிவரும் ஓர் உத்தம பக்தமணியின் சரித்திரமாகவே நந்தனர் சரித்திரத்தைக் 'குலக் கவி' சேக்கிழாரும் இசைக் கவி பாரதியாரும் அமைத்திருக்கிறார்கள். லட்சிய பக்த மணியின் வாழ்க்கையில் ஏற்படும் சோதனைகளையும், முறுகி முதிர்ந்து விளையும் பக்தியனுபவங்களையும், மாசுகளையும் இடையூறுகளையும் ஒருங்கே சுட்டெரித்து வாழ்க்கையைத் தூய தங்கமாகக் காட்டுவதற்கே 'இறையருளால் வாய்ந்த' துன்பமென்னும் கொழுந் தழலையும்' இத்தழலில் முங்கி முழுகி ஒரு மாசிலாமணியாகக் காட்சிதரும் பக்த மணியையும் பெரிய புராணத்தில் காண்பதுபோல் சரித்திரக் கீர்த்தனையிலும் காண்கிறோம்.

பெரிய புராண நந்தனரே சரித்திரக் கீர்த்தனையில் மேலும் வளர்ச்சி பெற்றிருக்கிறார். ஒரு பனையைப் பனித்துளி பிரதிபிம்பமாய்க் காட்டுவதுபோல் பெரிய புராண நந்தனரைக் காட்டுவதுதான் உமாபதி சிவத்தின் திருநாளைப் போவார் புராண ஸாரம். இத்தகைய அழகான பக்திப் பெருங்கதையின் அடிப்படையான சரித மூலங்களைச் சுந்தரமூர்த்தி நாயனரின் 'திருத்தொண்டத் தொகை'யிலும் நம்பியாண்டார் நம்பியின் திருத்தொண்டர் திருவந்தாதி'யிலும் காணலாம்.



# பரதேசியின் தந்திரம்

ரசு

ஒரு நாள் காலையில் மாம்பழ வியாபாரி ஒருவன் தன் பழங்களை வண்டியில் ஏற்றிக் கொண்டு விற்பதாகச் சந்தைக்குப் போனான். அங்கே போய்ப் பழங்களை விற்று வந்தான். பழங்கள் மிகவும் ருசியுள்ளவை. மரத்திலேயே பழுத்தவை. ஆனால் விலை மட்டும் அதிகம்.

இப்படி அவன் விற்றுக் கொண்டிருக்கும் சமயத்தில் பரதேசி ஒருவர் அங்கு வந்து சேர்ந்தார். பழம் வியாபாரியிடம் சென்று தனக்கு ஒரு பழம் கொடுக்கும்படிக் கேட்டார். வியாபாரி மறுத்து விட்டான். பரதேசி கெஞ்சிக் கூத்தாடினார். வியாபாரி அதற்கும் மசியவில்லை. "இந்த இடத்தை விட்டுப்போ" என்று எரிந்து விழுந்தான். அதற்குப் பின்பு பரதேசி போகவில்லை. வியாபாரியின் கோபம் எல்லையைக் கடந்துவிட்டது. அந்தப் பரதேசியைத் தன் வாயில் வந்தபடி எல்லாம் திட்டினான்; சபித்தான்.

பரதேசி வியாபாரியை அன்புடன், "ஐயா! உன்னுடைய வண்டியில் நூற்றுக்கணக்கான பழங்கள் இருக்கின்றன. நான் கேட்பதோ ஒரே ஒரு பழம் தான். ஒரு பழத்தைக் கொடுப்பதால உனக்கு நஷ்டம் ஏற்படாது. நீ எதற்காக என்மேல் இப்படிக் கோபப்பட்டு எரிந்து விழுகிறாய்?" என்று கேட்டான்

கூட்டத்திலிருந்த ஜனங்களில் சிலர் அந்த வியாபாரியைப் பார்த்து பரதேசியிடம் ஒரு பழத்தைக் கொடுத்து அனுப்பும்படிச் சொன்னார்கள் ஆனால் வியாபாரி நிர்தாட்சண்யமாக மறுத்து விட்டான்

முதலிலிருந்து இந்தக் கலவரத்தைக் கவனித்து வந்த ஒரு கடைக்காரன் தன் பையிலிருந்து நாலு அணா நாணயத்தை எடுத்து வியாபாரியிடம் கொடுத்து, நல்ல மாம்பழம் ஒன்றை வாங்கிப் பரதேசியிடம் கொடுத்தான். பரதேசி அதை வாங்கிக்கொண்டு அவனுக்கு வந்தனம் அளித்தான்

பிறகு கூட்டத்தில் உள்ள மக்களைப்பார்த்து பின் வருமாறு சொன்னான்: "மகா ஜனங்களே! நாங்கள் வீடு வாசல்களைத் துறந்தவர்கள். எங்களுக்கு என்று சொந்தமாக உலகத்தில் ஒன்றும் இல்லை. எங்களுக்குச் சொந்தமானவை எல்லோருக்கும் சொந்தமானவைகளே. இப்பொழுது என்னிடம் சில அருமையான மாம்பழங்கள இருக்கின்றன. அவைகளை நான் உங்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கப்போகிறேன்."

கூட்டத்திலிருந்து ஒருவன் முன் வந்து, "உங்களிடம் பழங்கள் இருக்கின்றன என்றால், ஏன் இந்த வியாபாரியிடம் ஒரு பழத்திற்காக இப்படிக் கெஞ்சிக் கூத்தாடினீர்கள்?" என்று கேட்டான்.



"ஏன் என்றால் அந்தப் பழங்களை உண்டாக்குவதற்கு ஒரு விதை அவசியமாயிருந்தது. அதை அடைவதற்காகத்தான் அவனிடம் கேட்டேன்" என்று பரதேசி பதிலளித்தார். பிறகு, தன் கையிலிருந்த மாம்பழத்தை அவசர அவசரமாகக் கடித்துச் சாப்பிட்டார் விதையை பூமியில் வைத்தார் தம் தோளிலிருந்து பையைக் கீழே இறக்கி அதிலிருந்து ஒரு சிறிய கடப்பாறையை எடுத்து பூமியில் ஒரு குழி தோண்டினார். குழியை ஒரு முழ ஆழத்துக்குப் பள்ளமாகத் தோண்டி



னுர். அந்தக் குழியிலே விதையைப்போட்டு மண்ணைத் தள்ளி மூடினுர்.

பிறகு ஒரு ஆளைக்கூப்பிட்டு, தாம் பூமியிலே நட்டவிதைக்கு ஊற்றக்கொஞ்சம் வெந்நீர் வேண்டுமென்று கேட்டார் ஒரு போக்கிரி விளையாட்டிற்காகப் பக்கத்திலே பலகாரக் கடையில் அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும் வெந்நீரைக் கொதிக்க கொதிக்கக் கொணர்ந்து கொடுத்தான்.

அந்தப் பரதேசி அதை வாங்கி விதை போட்டிருக்கும் குழியில் கொஞ்சம் தெளித்தான். எல்லோரும் கண்கொட்டாமல் அதையே பார்த்துக்கொண்டே இருந்தனர் அப்பொழுது பூமியில் விதை போட்டிருந்த குழியிலிருந்து ஒரு சிறு செடி வெளி வந்தது கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து பெரிய செடியாக மாறியது. சிறிது நேரத்தில் மரமாக வளர்ந்துவிட்டது மொட்டுகள் உண்டாயின: பிறகு பூக்கள் பூத்தன; காய்கள் உண்டாயின: சிறிது நேரத்திற்கெல்லாம் மரம் முழுவதும் மாம்பழம் குலுங்க ஆரம்பித்து விட்டது.

பரதேசி ஒவ்வொரு பழமாகப் பறித்து எல்லோருக்கும் கொடுத்தார். மரத்தில் இருந்த பழங்கள் எல்லாம் ஆய் விட்டன. பிறகு தம் கோடரியினுல் மரத்தை வெட்ட ஆரம்பித்தார். அடிமரத்தை வெட்டியதும் மரம் கீழே சாய்ந்தது. பிறகு இலைகள், கிளைகள் எல்லாம் மறைந்து விட்டன. ஒரே ஒரு தடிக்கம்பு ஒன்றுதான் மிஞ்சியது. அதை எடுத்துக் கொண்டு பரதேசி அவ்விடத்தை விட்டுக் கிளம்பினுர்.

ஆரம்பமுதல் கடைசி வரையில் கவனித்துவந்த பழ வியாபாரி தன் வியாபாரத்தை மறந்து விட்டான் பரதேசி கிளம்பிப் போக ஆரம்பித்த பிறகுதான் அவனுக்குத் தன் வண்டியைப் பற்றிய நினைவு வந்தது சட்டென்று திரும்பிப்பார்த்தான். என்ன ஆச்சர்யம்! வண்டியில் ஒரு பழம்கூட இல்லை. தவிர வண்டியின் பக்கங்களில் சொருகியிருந்த கழிகளின் ஒன்றைக் காணவில்லை அப்பொழுது தான் அவனுக்குப் புரிந்தது, தன்னுடைய வண்டியிலுள்ள பழங்களையே பரதேசி மந்திரத்திஞல் மரத்தில் வரவழைத்து ஜனங்களுக்குப் பறித்துக் கொடுத்தான் என்பது



உடனே பரதேசியைப் பிடிப்பதற்காக ஓடினுன் அப்பொழுது தான் பரதேசி அருகிலுள்ள சந்து ஒன்றில் திரும்பினுர். வியாபாரியும் சந்தில் நுழைந்தான் என்ன ஆச்சர்யம்! தன் வண்டியில் காணுமல்போன கட்டை அங்கே சந்துத்திருப்பத்தில் கிடந்தது. பரதேசியைக் காணவில்லை. என்ன செய்வான்? 'ஒரு பழத்தைக் கேட்டதற்குக் கொடுக்க மாட்டேன் என்றேனே, இப்பொழுது எல்லாம் போய்விட்டனவே' என்று அழுதான் அழுது என்ன பயன்? போன பொருள் திரும்பிவருமா? இதைப்பார்த்த ஜனங்கள் வயிறு குலுங்கச் சிரித்தார்கள்.

# விமலா

எல். வி. எஸ். மணியன்

"நிர்மலா ஏண்டி நீ இவ்வளவு நாளாக ஸ்கூலுக்கு வரலே?"

"இன்னிக்கிக் காலம்பரதான் பம்பாயிலிருந்து வந்தேன், காமு. அதனுல்தான் வரவில்லே."

"பம்பாய் எப்படி இருக்கு?"

"ரொம்ப ஜோராத்தான் இருக்கடி?" நீ பரீட்சையிலே முதல் மார்க்கு வாங்கியிருக்கையாமே, கோமு சொன்னுளே."

"அது இருக்கட்டும். புதிய பாட்டு வாத்தியாரம்மா ஒத்தி வந்திருக்கா. உனக்குத் தெரியுமோ?"

"தெரியாதடி. பழைய டீச்சர் எங்கே போனு?"

"அவளுக்கும் ஹெட்மிஸ்ட்ரஸ்ஸுக்கும் சண்டையாம். அதனுலே வேலையிலேயிருந்து தள்ளிட்டாளாம்."

"அந்த குண்டு பெருச்சாளி ஹெட்மிஸ்ட்ரஸை டிஸ்மிஸ் பண்ணியிருக்கப்படாதோ?"

"புது பாட்டு டீச்சருக்கு கண் குருடடி"

"கண் குருடா?"

"ஆமாம். இரண்டு கண்ணும் குருடு. ஆனுல் நிர்மலா, பார்த்தா யாருமே குருடுன்னு சொல்ல மாட்டா. கண் இரண்டும் திறந்துதான் இருக்கு. ஆனுல் பார்க்கமுடியாதாம்."

"அதுக்கு "விழிக்குருடு"ன்னு பேரு."

"எவ்வளவு ஜோரா பாடரு தெரியுமா? எத்தனை நாழி பாடினுலும் கேட்டுக்கொண்டேயிருக்கணும் போலேயிருக்கு."

"கிண்டலா சொல்றையா? நிஜமா?"

"நீ வேணுமானு இன்னிக்கி பாட்டு வகுப்பிலே பாரேன். பெரிய பெரிய 'ஸினிமா' ஸ்டார் கூட இவ்வளவு இனிமையா பாடமாட்டா!"

"எத்தனை அழகாயிருக்கா தெரியுமா? நல்ல சிகப்பு. நல்ல சிரிச்ச முகம். வேடிக்கை வேடிக்கையா பேசி நம்மை எல்லாம் ஒரேமுட்டா சிரிக்க வைச்சுடரா."

"பிரம்பையே கொண்டுவரது கிடையாதடி" என்ருள் பிரம்பு என்ருல் நடுங்கும் பார்வதி.

"குட்டுவதும் கிடையாது, கிள்ளுவதுகூட கிடையாது. ஒருத்தரையும் கோபித்து அடிப்பது கிடையாதடி. ரொம்ப நல்ல டீச்சர்." இந்த 'ஸர்டிபிகேட்' கொடுத்தது விசாலம்.

மேற்கூறிய சம்பாஷணை **சாரதா வித்யாலயா** பள்ளி மாணவிகளிடையே நடந்தது. அவர்கள் மூன்ருவது வகுப்பில் படிக்கும் மாணவிகள். அதில் நிர்மலா என்பவள் நிரம்பவும் விஷமக்காரி. 'இரட்டைவால்' என்ருலும் பொருந்தும். அவள் தமிழ் டீச்சரை அழாத குறையாகச் செய்து விடுவாள். நிர்மலா பள்ளிக்கூடம் வரவில்லை என்ருல்தான் தமிழ் டீச்சருக்கு நிம்மதி. அந்த அசட்டு 'டிராயிங்' வாத்தியாரம்மாவை அவள் படுத்திவைக்கும் பாட்டை சொல்லவே முடியாது. இங்கிலீஷை எடுத்துக்கொள்ளும் தலைமை உபாத்தியாயினியைக் கண்டால்தான் அவளுக்குச் சற்று பயம். அதுகூட பிரம்பைக் கொண்டு வர மறந்து போய் அவள் வந்து விட்டால், காதைத் தானே திருகுவாள், பெஞ்சியின் மேல் தானே நிற்க வைப்பள், ஒருகை பார்ப்போம் என்று காது வலியைப் பொருட்படுத்தாமல், ஒரு கை பார்த்தே விடுவாள் நிர்மலா. அத்தனை பொல்லாத்தனம் அவளுக்கு. இத்தனை பொல்லாத்தனம் **இருக்கிறதே** ஆனுல், மகா சூடிகை. வணங்கிப் படித்தாளானுல், அவளை மிஞ்ச அந்த வகுப்பில் யாராலும் முடியாது. அவளது போக்கு அறிந்து நடந்து கொள்ளும் உபாத்தியாயினி யாரும் அப்பள்ளியில் இல்லாததால், நிர்மலாவின் குறும்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே வந்தது

அன்று நான்காவது 'பீரியட்' வந்தது. அது பாட்டு வகுப்பு. 'மானீட்டர்' கமலா பாட்டு டீச்சரை கூட்டிக்கொண்டு, வருவதற்காக, உபாத்தியாயினிகள் இடைநேரத்தில் தங்கியிருக்கும் அறைக்குப் போயிருந்தாள். மூன்ருவது 'க்ளாஸ்' க்ளாஸாக இல்லை. சந்தைபோல் இருந்தது. ஒரே இரைச்சல். மாணவிகள் எல்லாரும் கொம்மாளம் அடித்துக் கொண்டிருந்தனர். பக்கத்து வகுப்பில் கணக்கு வாத்தியாரம்மாவுக்குப் பாடம் நடத்தமுடியாமல் போகவே கையில் பிரம்பை எடுத்துக்கொண்டு வந்து மேஜைமேல் பலமாக இரண்டு தட்டு தட்டி, உதவி சட்டாம்பிள்ளை **ரஞ்ஜினி**யைக் கூப்பிட்டு "இனிமேல் யாராவது சத்தம் போட்டால் என்னிடம் இழுத்துவா" என்று மிரட்டி விட்டுப் போனதும் ஒழுங்காக அவரவர்கள் இடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தனர். காமு, ரஞ்ஜினிக்கு வேண்டாதவள். அவள் தொண்டை வலியால் சிறிது கனைக்கவே, அவளை தரதர வென்று இழுத்துக்கொண்டு கணக்கு வாத்தியாரம்மாவிடம், பக்கத்து வகுப்புக்குப் போனுள் ரஞ்ஜினி.

அந்த சமயத்தில் "பாட்டு டீச்சர் விமலாவைக் கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வகுப்பினுள் நுழைந்தாள் சட்டாம்பிள்ளை கமலா. நுழைந்ததுதான் தாமதம்.

மாணவிகள் எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள். "யாராவது இனிமேல் சிரித்தால் ஹெட் மிஸ்ட்ரஸ்ஸிடம் காதைப் பிடித்து இழுத்துக்கொண்டு போவேன்' என்றதும் சிரிப்பு அடங்கியது.

பாட்டு டீச்சர் விமலா "எதற்காக இந்தச் சிரிப்பு" என்று வகுப்பைப் பார்த்து, மாணவிகளை நோக்கிக் கேட்டாள்.

ஒருவருமே பதில் சொல்லாமல் கரும்பலகைப்பக்கம் பார்த்தார்கள். எல்லோருடைய பார்வையும் 'போர்ட்' இருந்த திக்கில் செல்லவே கமலா திரும்பிப் பார்த்தாள். கரும்பலகையில், கொட்டை எழுத்தில் "குருட்டு பாட்டு டீச்சர்' என்று எழுதியிருந்தது.

அதைப் படித்துவிட்டு கமலா 'குருட்டு பாட்டு டீச்சர்' என்று யாரோ 'போர்ட்'டில் எழுதியிருக்கா ஸார்.

"இதற்காகவா இந்தச் சிரிப்பு? உண்மையைத்தானே எழுதியிருக்கா! யாரம்மா அதை எழுதினது?" என்று விசாரித்தாள் விமலா.

ஒருத்தருமே வாயைத் திறக்கவில்லை

"விசாலத்தின் கையெழுத்துப் போலிருக்கு" என்றாள் கமலா.

"நான் ஒண்ணுமே பண்ணலே டீச்சர்" என்று "ஓ"வென்று விக்கி விக்கி அழ ஆரம்பித்துவிட்டாள் விசாலம்.

"ஏனம்மா அழறே விசாலம்? நீதான் எழுதவில்லை என்று சொல்லிவிட்டையே. கண்ணைத் துடைத்துக்கொண்டு சமத்தா உட்கார்ந்துகொள்."

"யார் என்று ஒருத்தரும் சொல்லாவிட்டால் ஹெட் மிஸ்ட்ரஸ்ஸை கூட்டிக்கொண்டு வந்து எல்லாருக்கும் பிரம்படி வாங்கி வைப்பேன். உண்மையைச் சொல்லி விடுங்கள்" என்று மானீட்டர் கமலா மிரட்டினாள்.

"டீச்சர்! டீச்சர்! அதோ! பச்சை கவுன் போட்டிருக்காளே அவதான் டீச்சர் எழுதினா" என்றான் சரோஜாவோடு வீட்டில் விஷமம் செய்கிறான் என்று அனுப்பப்பட்டிருந்த அவள் மூன்று வயது தம்பி விசு.

"நிர்மலாவா?" என்று கமலா கேட்டாள்.

"நான் ஒன்றும் இல்லை. நான் பாட்டில் பேசாமல் 'கதா மஞ்சரி'யைப் படித்துக் கொண்டிருக்கிறேன் டீச்சர்" என்றாள் நிர்மலா.

"அவளாகத்தான் இருக்கும் டீச்சர். இரட்டைவால் அவள்."

"உதவி மானீட்டரை வேண்டுமானால் கேட்டுப்பாருங்கள். நான் இடத்தைவிட்டு நகரவே இல்லை."

"ரஞ்ஜினி, காமுவை கணக்கு வாத்தியாரிடம் இழுத்துக்கொண்டு போனபோது, நிர்மலா தான் எழுதினாள் டீச்சர்" என்றாள் கருப்பாயி.

"நிர்மலா நிஜத்தைச் சொல்லு உன்னை அடிக்கவில்லை". என்றாள் பாட்டு வாத்தியாரம்மா விமலா.

"என்னோடு கருப்பாயி 'காய்' விட்டிருக்காள், அதனால்தான் வேணும்னு அவள் கோள் சொல்றா டீச்சர்.

"ஹெட் மிஸ்டரஸ்கூட நீ துஷ்டை என்று சொன்னாள் நிர்மலா. கமலா! நிர்மலாவின் நோட்டை வாங்கிப்பார்! அவள் நோட்டிலிருக்கும் கையெழுத்தும். போர்டிலிருக்கும் கையெழுத்தும் ஒன்றாயிருக்கா" என்று கவனி

கமலா பார்த்துவிட்டு 'ஒன்றாயிருக்கு டீச்சர்." என்றாள்.

"நிர்மலா! என் அருகில் வா" என்று கூப்பிட்டாள் விமலா.

அருகில் வந்தாள் நிர்மலா. கமலா, அவளை டீச்சரின் பக்கத்தில் போய் நிற்கும்படி தள்ளிவிட்டாள்.

விமலா, நிர்மலாவைப் பக்கத்தில் அழைத்து அணைத்துக்கொண்டு கன்னத்தை அன்பாகத் தடவிக்கொண்டே "நிர்மலா! பொய் சொல்லாதே! நான் உன்னை அடிக்கமாட்டேன்! பயப்படாதே! எனக்குக் கண் பார்வை இல்லை என்பது நிஜம்தானே! அதைத்தான் நீ எழுதினாய் இல்லையா?" என்றாள்

இந்த நாள் வரை டீச்சர்களிடம் உள்ள பிரம்புதான் அவளை வரவேற்றிருக்கிறது. "கையை நீட்டு. ஊம். கையை நீட்டு" என்று கையை நீட்டச்சொல்லி "சுரீர்" என்று பிரம்பு கையைப் பதம் பார்த்ததும் "கடைசிபெஞ்சியின் மேல் போய் நில். அடுத்த "பீரியட்" கூட நிற்கவேண்டும்" இல்லாவிட்டால், பொது அறிவு டீச்சர் போன்றவர்கள் காதைப் பிடித்து 'திருகு ஆணி'யைத் திருகுவதுபோல 'வீல்' என்று கத்தும் வரை திருகிவிட்டு அனுப்புவார்கள். இப்படித்தான், அநேகமாக எல்லா உபாத்தியாயினிகளும் அவளுக்குத் தண்டனை விதித்திருக்கிறார்கள். அதற்கு முற்றும் மாறாக விமலா தன்னை அன்போடு அணைத்துக்கொண்டு, தடவிக்கொடுத்ததும் இவ்வளவு தங்கமான டீச்சரிடம் இப்படி நடந்துகொண்டோமே என்று வருந்தினாள். விமலாவின் சுந்தர வதனம் அவளை அப்படியே கவர்ந்துவிட்டது. அந்த சௌந்தர்யம் நிறைந்த முகத்தை மெய்மறந்து பார்த்துக்கொண்டே "தெரியாமல் செய்துவிட்டேன் டீச்சர். இனிமேல் செய்யமாட்டேன்" என்று 'கோ' என்று அழுதே விட்டாள் நிர்மலா.

"இதற்குப்போய் அழலாமா அசடே! போனால் போகிறது. இனிமேல் துஷ்டத்தனம் செய்யாமல் கெட்டிக்காரப்பெண் என்று பெயரெடு. "பாட்டு வகுப்பின் போது என் பக்கத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு பாடவேண்டும். என்ன?"

"ஆட்டும் டீச்சர்."

"நீ! சமத்துப்பெண் எல்லாரையும்விட நீ எவ்வளவு சீக்கிரத்தில் நன்றாகப் பாட்டுக் கற்றுக்கொள்ளப் போகிறாய் பார்! எல்லாருடைய வகுப்பிலும் இப்படிப் போக்கிரித்தனமாகத்தான் நடந்துகொள்ளுவாயா, என்ன?

"ஆமாம டீச்சர்! ஹெட்மிஸ்ட்ரஸ்ஸைத் தவிர யாரிடமுமே இவளுக்குப் பயம் கிடையாது டீச்சர். அதிலும் தமிழ் டீச்சர் என்றால் 'தொக்கு டீச்சர் இவளுக்கு." என்றாள் கமலா.

"தமிழ டீச்சர் குண்டாயிருக்கிறதினாலே 'புளிமூட்டை'ன்னு பேர் வச்சு கேலி பண்ணுவள் டீச்சர்!"

"என்ன நிர்மலா! இதெல்லாம் நிஜமா? இந்தமாதிரி யாரையும் நையாண்டி செய்யக்கூடாது. உன்னைப்போல, சின்ன பெண்ணாயிருக்கிறபோது எனக்குக்கூட இரண்டு கண்களும் நன்றாகத் தெரிந்தது."

"நிஜமாவா டீச்சர்" என்று இடைமறித்து ஏககாலத்தில் ஆச்

சர்யம் பொங்க, நிர்மலா, கமலா, ரஞ்ஜினி மூவரும் கேட்டனர்.

"ஆமாம்! அப்புறம்தான் ஒரு நாள் கண் பார்வை போய்விட்டது. நமக்கு என்னென்ன ஆபத்துக்கள் வரும்னு முன்னுடியே தெரியுமா? கண் நன்ருகத் தெரிகிறவாளுக்கு, கண்ணில், ஏதாவது குத்தி, எதிர்பாராமல் எந்த சமயத்திலும் 'பொட்டை'யாகப் போய்விடலாம். கால், கை சரியாக இருக்கிறவா, கீழே விழுந்து, காலும் கையும் முறிந்து போய் நொண்டியாகப் போய் விடலாம்............"

"எங்க அண்ணனுக்குக்கூட போன மாதம் மாடிப்படியிலேயிருந்து கீழே உருண்டு விழுந்து கால் நொண்டியாகப் போய்விட்டது டீச்சர்" என்ருள் குறுக்கிட்டு நிர்மலா.

"பார்த்தாயா? அதனுலே ஒருத்தரையும் "நொண்டி" "செவிடு" அது. இது என்று கேலி செய்யக்கூடாது, கேலி செய்தால் 'பகவான்' நம்மை தண்டித்து விடுவார்" என்ருள் விமலா.

"டீச்சர்! டீச்சர்!" உங்களுக்குக் கண் ஏன் டீச்சர் தெரியாமே போயிடுத்து!" என்று கேட்டாள் விமலாவின் பரம சிஷ்யை ஆகிவிட்ட நிர்மலா.

"அது கதையம்மா! வகுப்பிலே அதையெல்லாம் சொன்னுல் பாடம் கெட்டுப் போய்விடும்."

"வகுபபு முடிந்ததும் சொல்றீங்களா டீச்சர்?"

"ஆகட்டும். ஆனுல் இன்றையிலிருந்து நீ துஷ்டத்தனத்தைவிட்டுவிட்டு எல்லா டீச்சர்களுடைய வகுப்பிலும் 'நல்ல பெண்' என்று சொல்லும்படி பெயர் எடுக்க வேண்டும். அப்படி நடந்துகொள்ளுவதாகச் சொன்னுல், நான் சொல்வேன்."

"நீங்கள் சொல்கிறபடியே இன்னிமேல் நடந்துகொள்ளுவேன் டீச்சர்." என்று வாக்குக் கொடுத்தாள் நிர்மலா.

"சரி. எல்லோரும் "செந்தமிழ் நாடெனும்" பாட்டு பாடுங்கள்.

பாட்டு வகுப்பு முடிந்தது. பக்கத்தில் பாடம் நடத்திக் கொண்டிருந்த உபாத்தியாயினிகள், எல்லோருமே ஆச்சர்யத்தால்,அசந்தே போயினர் மூன்ருவது 'பி' வகுப்புதானு பக்கத்தில் இருப்பது, இல்லை வேறு ஏதாவது வகுப்பு அது இருந்த இடத்திற்கு வந்து இருக்கிறதா என்று அவர்களுக்குச் சந்தேகம் வந்து விட்டது. ஒரு நாளாவது பாட்டு 'க்ளாஸ்' இவ்வளவு ஒழுங்காக மூன்ருவது 'பி' வகுப்பில் நடந்ததே கிடையாது. பெஞ்சியின் மேல் 'தட, தட'வென்று தாளம் போடடு கூச்சல் போட்டு ஒவ்வொருவரும் தங்களுக்கு, இஷ்டமான குரலில் பாடி, பாட்டு 'பிரியட்'டை 'கலாட்டா' பிரியட்டாகச் செய்யாமல் பழைய பாட்டு டீச்சர் இருந்தபோது, ஒருநாளாவது, இருந்ததே கிடையாது. மூன்ருவது 'பி' வகுப்பு மாணவிகள், இதற்காகவே காக்கைகளோடு சேர்ந்தால், குயிலும் காக்கைகளாகி விடப் போகிறது என்று, கொஞ்சம் கெட்டிக்காரப் பெண்கள் என்பவர்களை 'ஏ' வகுப்பில் சேர்த்து விட்டு, 'மக்கு உதவாக்கரை 'வாயாடி' 'வால்' என்ற ரீதியில் வரும் பெண்களை 'பி' வகுப்பில் சேர்ப்பது வழக்கம். இப்படி ஒருவர் நன்மதிப்பையும் பெருத வகுப்பு மற்ற வகுப்பு மாணவிகளுக்கு ஒரு எடுத்துக்காட்டாக, ஒழுங்காக நடந்துகொண்டது எல்லோரையும், அதிசயப்படும்படி செய்தது. அவர்களும் தங்கள் பாட போதனையை மூட்டை கட்டி வைத்துவிட்டு விமலாவின் சுந்தர கானத்தையும், அதற்கு இணையாக பின்னணிபோன்ற குழந்தைகளின் மழலை கலந்த இன்ப கானத்தையும் கேட்டு அனுபவித்தனர்.

அந்த சமயத்தில் வகுப்புகளைப் பார்வையிட்டுக்கொண்டு அங்கே வந்த தலைமை ஆசிரியையும், இந்த அற்புதத்தைக் கண்டு, ஆனந்த மடைந்தாள். விமலாவிடம் நல்ல மதிப்பு உண்டாயிற்று அவளுக்கு. வகுப்பு முடியும்வரை, மணி அடிக்கும்வரை சத்தம் போடாமல் மறைவிலிருந்து இதை அனுபவித்துவிட்டு, மணி அடித்ததும் வகுப்பினுள் வந்து 'விமலா'வைப் பாராட்டிப் பேசினுள் "நிர்மலாவைககூட கையினுள் போட்டுக் கொண்டு விட்டையா விமலா? நீ நிரம்பவும் சாமர்த்தியக்காரிதான்" என்ருள் தலைமை உபாத்தியாயினி.

"இனிமேல் பாருங்களேன்! நிர்மலாவைப்போல நல்ல பெண் இந்தப் பள்ளிக்கூடத்திலேயே கிடையாது என்று சொல்வீர்கள்" என்ருள் விமலா



"என்ன? நிர்மலா! அப்படியா!" என்று ஹெட்மிஸ்ட்ரஸ் நிர்மலாவைக் கேட்டாள்

"ஏஸ். டீச்சர். இனி நான் துஷ்டத்தனத்தையெல்லாம் விட்டுவிடப் போகிறேன்."

"எல்லோரும் வீட்டுக்குப் போங்கள் நாழியாகிறது. வீட்

டில் உங்கள் தாய், தகப்பனுர் தேடுவார்கள்." என்று சொல்லி விட்டு தலைமை உபாத்தியாயினி சென்றுவிட்டாள்.

இடத்தை விட்டு ஒருவராவது நகரவில்லை. அவரவர்கள் இடத்தில் பெஞ்சியில் உட்கார்ந்து கொண்டு "டீச்சர் சொல்லுங்கோ! டீச்சர்!" என்று விமலாவை நச்சரித்தனர் மாணவிகள்.

"சத்தம் செய்யாமல் இருங்கள் சொல்கிறேன்" என்று சொல்லி விட்டு விமலா கதையைப்போல சொன்ன விவரம் வருமாறு:—

* * * *

தீபாவளி அன்று. "பட்...பட்" "பட்...பட்" "சுர்...ர்...ர்ர்" "கிர்...ர்...ர்...ர்..." என்ற சப்தங்களே அந்நேரத்தில் கேட்டது. ரோட்டிலிருந்த எலக்டிரிக் விளக்குகளின் மங்கலான வெளிச்சத்தை, பச்சை, சிகப்பு, முதலிய வர்ண மத்தாப்புக்கள் எரிவதிலிருந்து வந்த வர்ண ஒளிகள் கேலி செய்து கை கொட்டி சிரிப்பதுபோல இருந்தது.

அந்த தீபாவளியின்போது எனக்கு ஐந்து வயது. வெடிகளைக் கண்டாலே பிடிக்காது எனக்கு. அவைகள் வெடிக்கும்போது சப்தத்தைகூட கேட்கப் பயந்து இரு செவிகளையும் இறுக மூடிக் கொண்டு விடுவேன். என் ப்ரேமை யெல்லாம், மத்தாப்பு, கம்பி வாணம், விஷ்ணு சக்கரம், மேஜிக் வொயர்போன்ற ஒளியை விடும் வாணங்கள்மீது தான். இத்தகைய வாணங்களிலிருந்து தோன்றும் பல் நிற ஒளிகளைக் கண்டு நான் சந்தோஷத்தில் ஆழ்ந்திருந்தேன்.

அப்போது எனது அண்ணன் சந்துரு "விமலா, நானும் கோபுவும் புதிய வெடி ஒன்றுசெய்கிரோம், இங்கே வா" என்று வேடிக்கை பார்க்கக்கூப்பிட்டான். விதி இழுக்க, வெடியைச்சிறிதும் விரும்பாத நான், என் அண்ணன் சந்துரு அழைப்பிற்கு இணங்கி வேடிக்கை பார்க்கப் போனேன்.

சந்துருவும் கோபுவும் வெடிக்காத பட்டாசுக்களைப் பிரித்து, அதிலிருந்த மருந்தை எடுத்தார்கள். பிறகு நன்ருய் வெடிக்கக் கூடிய, யானை வெடி, ஒற்றைவெடி, எலக்டிரிக் பட்டாஸ், முதலிய பல வெடிகளிலிருந்தும் மருந்து எடுக்கப்பட்டது. அதன் பிறகு எல்லா மருந்தையும் ஒன்று சேர்த்து ஒரு சிறிய காகிதக்குழாயில் அடைத்துவிட்டு, திரியொன்றும் அதற்கு வைத்தார்கள். தீயும் வைக்கப்பட்டது அந்தப் புதிய வெடிக்கு. அது வெடிக்கும் சமயம், எதிர் வீட்டில் காமு என்ற என் சிநேகிதி விட்டுக்கொண்டிருந்த புதிய வாணத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அதுவரை உற்சாகத்தில் நான் வெடியின் அருகில் உட்கார்ந்திருப்பதை மறந்துபோயிருந்த சந்துரு "தள்ளிப் போடி, விமலா! வெடி வெடிக்கப் போகிறது" என்று கத்தினுன். நான் திடுக்கிட்டு வெடியைத் திரும்பிப் பார்த்தேன். அதே சமயத்தில் பெரிய சப்தத்துடன் வெடித்தது வெடி. அதுதான் விதியின் விளையாட்டு. அந்த வெடியின் சப்தத்தை விட "ஐயோ!" என்று கண்களைப் பொத்திக் கொண்டு நான் அலறிய கூக்குரல் கேட்டது. வெடி வெடித்தபோது, என் கண்களில் மருந்தை வாறி யடித்து விட்டது. ஒரே புண்ணாய் விட்டன என் கண்கள். புண் குணமானதும் பார்வைபோய் விட்டது. அன்றை தினத்திலிருந்து கண்ணிரண்டும் பார்ப்பவர்களுக்கு, நன்ருக இருந்தாலும், பார்வையை இழந்து நான் குருடியாய் விட்டேன். எவ்வளவோ வைத்தியம் செய்தார்கள் என் பெற்ருேர்கள், வருஷக்கணக்காக செய்யாத வைத்தியம் எல்லாம் செய்து பார்த்தார்கள்.

பணம்என்று பார்க்காமல் செலவு செய்தார்கள். ஆனுல் நான் பார்வையைத் திரும்பிப்பெற முடியவில்லை. இதே வருத்தத்தால் என் அப்பாவும், அம்மாவும், ஒருவர் பின் ஒருவராக இறந்து விட்டனர். இப்பொழுது நானும் என் அண்ணன் சந்துருவும்தான் இருக்கிரோம். என் அண்ணன் ஆபீஸிற்குப் போய்விடுகிருன், பிறகு வீட்டில் நான் தனியாக ஒன்றும் செய்யாமல் சும்மாதானே உட்கார்ந்திருக்கவேண்டியிருக்கிறது? பொழுதைப் போக்குவது நிரம்பவும் கஷ்டமாயிருந்தது. உங்களுக்கெல்லாம் பாட்டு சொல்லிக் கொடுத்துக்கொண்டு சந்தோஷமாக இருக்கலாம் என்று தான் உங்கள் பள்ளிக்கூடத்திற்கு வந்திருக்கிறேன். என்னைக் கண்டால் உங்களுக்குப் பிடிக்கவில்லையென்ருல் சொல்லிவிடுங்கள், நான் வேலையை விட்டுவிட்டுப்போய் விடுகிறேன். என்ன நிர்மலா நான் இருக்கவா? வேலையைவிட்டு விட்டுப் போய்விடவா?"

"நீங்கள் போகக்கூடாது டீச்சர், நீங்கள் சொன்னதைக் கேட்டதும் எங்களுக்கு ரொம்ப வருத்தமாயிருக்கு டீச்சர். இனிமேல் நாங்கள் ஒருவரும் உங்களுக்கு ஒரு தொந்திரவும் கொடுக்காமல், நீங்கள் சொல்லுகிறபடி நடந்து கொள்ளுகிரேம்" என்று எல்லா மாணவிகளுமே வாக்குக் கொடுத்தார்கள்.

வாயிலில் 'பூம்' 'பூம்' என்று கார் ஹார்ன் சப்தம் கேட்டது. விமலாவின் அண்ணன் கார் அது, மாலை, மில்லிலிருந்து வீட்டிற்குத் திரும்பும்போது, விமலாவையும் அழைத்துப் போவதற்காக அவன் தினந்தோறும் ஸ்கூலுக்கு வருவது வழக்கம். தன் கண்களிலுள்ள குறை பார்ப்பவர்களுக்கு சட்டென்று தெரியாமலிருப்பதற்காக, அணிந்துகொள்ளும் புகைக் கண்ணுடியை எடுத்து போட்டுக் கொண்டே விமலா "என் அண்ணன் வந்துவிட்டார்! நான் வீட்டிற்குப் போகவேண்டும். நீங்கள் எல்லோரும் ரோட்டில், அக்கம் பக்கம் பார்த்துக்கொண்டு ஜாக்கிரதையாக வீட்டுக்குப் போங்கள்" என்ருள்.

நிர்மலாவும், கமலாவும், விமலாவை கையைப்பிடித்து அழைத்துச் சென்று காரில் ஏற்றிவிட்டார்கள்.

"நாளைக்கு சனிக்கிழமை லீவு தானே. நிர்மலா நீயும், கமலாவும் என் வீட்டிற்கு வாருங்கள். எனக்குப் பொழுது போக்காக இருக்கும்" என்ருள் விமலா.

(தொடரும்)




"ஒரு முடிவுக்கும் வராமெ இப்படியே இடிச்ச புளி மாதிரி உட்கார்ந்திருந்தா என்ன பிரயோசனம்? ஒண்ணு உங்க வழிக்கு அதை இழுக்கணும்; இல்லாகாட்டி அது போவற வழியிலே நீங்கபோவணும்......... என்னமோ நான் சொல்றதைச் சொல்லியாச்சு வேலாண்டி அம்மா இப்பகூட வந்துட்டு போச்சு! இருபது வராகன் பரியம்' போடுதாம். கடிய முடிச்சா பொங்கலுக்குள்ளே அந்தக் கம்மலை மார்வாடிக்கடையிலே இருந்து வாங்கி காதிலே போட்டுக்கலாம்...'' என்று படபடவென்று அடுக்கிக் கொண்டே போனாள் வேலம்மா. அவள் கையில் கஞ்சிப் பானை இருந்தது முருகய்யன் அவள் எதிரே உட்கார்ந்துகொண்டு கூழ் குடித்துக்கொண்டிருந்தான்.

"அதுதான் ஒரே பிடிவாதமா கண்ணாளமே வேண்டாங்கறதே, அதை எப்படிக் கட்டாயப்படுத்தறது?''

'வேணும்னா விட்டுடுவாங்களா? வயசு பொண்ணு லக்ஷணமா பெரியவங்க சொல்ற இடத்திலே கண்ணாளத்தை பண்ணிக்காமெ தலையை விரிச்சுக்கிணு அது கூத்தாடுது, அதுக்கு நீங்க இடம் கொடுத்துக்கிணு இருக்கிறீங்களே!...ஒரு அதட்டல் போட்டு ஒரு முடிவு பண்ணுங்க.''

"சின்னபோதிலே இருந்தே ரொம்ப செல்லமா வளர்ந்துட்டுது. அதோடு அம்மா சாகும்போது 'அவளைக் கண்கலங்க விடாதேன்னு சொல்லிவிட்டுப் போயிருக்காங்க. அதனாலேதான் கொஞ்சம் கடுமையா இருக்க முடியலே...''

"எத்தனை நாளுதான் இப்படி இருக்கிறது? இன்னிக்கு அது வந்ததும் இதுக்கு கண்டிப்பா ஒரு முடிவு கட்டிடுங்க. வேலாண்டிக்குக் கொடுத்துட்டா நாமசொகமா இருக்கலாம்'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே எழுந்து சென்றாள் வேலம்மா.

இதுவரை வாசற்படியருகிலேயே இடுப்பில் ஒரு கூடையுடன் நின்றுகொண்டு இச்சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்த பொன்னி, ஒரு பெருமூச்சுவிட்டாள். அவள் கண்களில் கண்ணீர் தேங்கி நின்றது. ஆனால் உள்ளேயிருந்து முருகய்யனாவது வேலம்மாவாவது வந்துவிடப் போகிறார்கள் என்று தன் புடவைத் தலைப்பால் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு மெதுவாக உள்ளே சென்றாள் பொன்னி.

பொன்னியைக் கண்ட வேலம்மாவின் முகத்தில் ஒருவித பயமும் அகங்காரமும் மாறி மாறித் தோன்றின. தான் தன் கணவனிடம் சொல்லிக்கொண்டிருந்ததை ஒரு சமயம் பொன்னி ஒட்டுக் கேட்டுக்கொண்டிருந்திருப்பாளோ என்று அவள் மனம் எண்ணியது இருந்தாலும் ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு, பொன்னியைப் பார்த்து. "ஏண்டீ! புல் அறுக்கப் போனா எத்தனை நேரம்? சீக்கிரம் கை, கால் கழுவிண்டு கூழ் குடிக்க வா!' என்றாள் வேலம்மா.

ஒரு இயந்திரம்போல் பொன்னி புல் கூடையை மூலையில் வைத்துவிட்டுக் கை, கால் கழுவிக்கொண்டு தன் கிண்ணத்தில் கரைத்து வைக்கப்பட்டிருந்த கூழைக் குடிக்க ஆரம்பித்தாள். வேலம்மா தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த பசுவுக்குப் புல்லைப் போடுவதற்காக புல் கூடையை எடுத்துக்கொண்டு வெளியே சென்றாள்.

கூழ் குடித்துக்கொண்டே உட்கார்ந்திருந்த பொன்னியைப் பார்த்த முருகய்யன், "பொன்னி! இன்னிக்குக் கண்டிப்பா உன் தீர்மானத்தைச் சொல்லித்தான் ஆவணும். அவுங்க பரியம் போடறத்துக்குத் தயாரா இருக்காங்க.'' என்றான்.

பொன்னிக்குத் துக்கத்தை அடக்க முடியவில்லை. தன் அண்ணனும் அண்ணியும் எப்படியாவது தன்னை வேலாண்டிக்குக் கொடுத்து விட வேண்டும் என்று பாடுபடுகிறார்கள் என்று அவளுக்குத் தெரிந்துவிட்டது இருந்தாலும் தன் உறுதியை விட்டுவிட அவள் தயாராக இல்லை.

"அண்ணே! என்னை இன்னும் கொஞ்ச நாளைக்குத் தொந்தரவு செய்யாதே! என் மனசு ஒண்ணும் சரியா இல்லை........'' என்றாள் பொன்னி.

விம்மலுக்கு இடையே வெளிப்பட்ட அவளது வார்த்தைகள் அவளது மனதின் அடியில் படிந்திருந்த ஒருவித ஏமாற்றத்தை எடுத்துக் காட்டியது.

"நீ சின்ன புள்ளை இல்லை! என்னிக்கி இருந்தாலும் யாரையாவது கண்ணாளம் பண்ணிண்டுதான் ஆவணும். யோசனை பண்ணி சொல்லு'' என்றான் முருகய்யன்

இதற்குள் தொழுவத்திலிருந்து காலிக் கூடையுடன் திரும்பிய வேலம்மா, "நல்லா இருக்குடி உன் பேச்சு! போவுது போவுதுன்னு விட்டுக் கிட்டே இருந்தா ரொம்ப மிஞ்சிப் போவறயே? வயசு வந்த ஒரு பொம்பளையை யாருக்கும் கட்டிக் கொடுக்காமெ வீட்டிலேயே வச்சிருந்தா ஊரார் என்ன சொல்ல மாட்டாங்க?'' என்று சீறிவிட்டுத் தன் வேலையைக் கவனிக்கச் சென்றாள்.

பொன்னியின் மனம் குழம்பி இருந்தது நிம்மதியாக எங்காவது சற்று நேரம் சென்றிருக்க வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது, பக்கத்து ஊரில் யாரோ ஒரு கழைக் கூத்தாடி தன் சகாக்களுடன் வந்து அன்று வேடிக்கை காண்பிக்கப் போகிறான் என்ற விஷயம் அவளுடைய ஞாபகத்துக்கு வரவே, அவள் கலசத்தைக் கவிழ்த்து விட்டு, பக்கத்து வீட்டிலிருந்த தன் சிநேகிதி மரகதத்தையும் அழைத்துக் கொண்டு கஞ்சனூரை நோக்கிக் கிளம்பி விட்டாள்.

## 2

நான்கு வருஷங்களுக்கு முன்பு தான் வேலம்மா முருகய்யனுடன் குடித்தனம் செய்ய வந்தாள். அப்போது பொன்னிக்குப் பதிமூன்று வயதிருக்கும். பொன்னி முருகய்யனின் ஒரே தங்கை. சிறுவயதில் அவர்கள் வாழ்ந்து வந்தது தென்பெண்ணை ஆற்றங்கரையில் காயல்பட்டி என்ற கிராமம் முருகய்யனும் பொன்னியும் சிறுவயதினராய் இருக்கும்போதே அவர்களுடைய தந்தை-முத்தய்யன் இறந்து விட்டான் காயல்பட்டியில் அவர்களுக்கு ஒரு வீடும் கொஞ்சம் நிலமும் இருந்தன. இவர்களின் தாய்-செல்லாயி-தன் கணவன் இறந்தபின் அந்த நிலத்தில் இருந்துவந்த வருவாயை வைத்துக் கொண்டு, தன் குழந்தைகளை வளர்த்து வந்தாள். காயல்பட்டியிலேயே முத்தையனின் அக்கா ஒருத்தி இருந்தாள். செங்கண்ணன் அவளுடைய பிள்ளை. பொன்னியைக் காட்டிலும் ஐந்து வயது பெரியவன் சிறுவயது முதலே பொன்னியிடம் அவனுக்கு ஒருஅலாதி ஆசை. மாடுமேய்க்கப் போகும் போதும், வேர்க்கடலைக் கொல்லையைக்காவல் பார்க்கப்போகும் போதும் அவர்களை ஒன்ருகவே பார்க்கலாம். பொன்னியின் மனதிலும் செங்கண்ணனைக் கண்டு விட்டால் ஒருவிதக் குதூகலம் நிரம்பி நிற்கும். அவர்கள் இருவரும் தெய்வமே பிரத்யட்சமாக வந்தால்கூடத் தங்களைப்பிரிக்க முடியாது என்று எண்ணி இருந்தனர்.

காலச்சக்கரம் சுழன்றது. முத்தையன் இறந்து ஒரு வருஷமாகி இருக்கும். செல்லாயியிக்கும் செங்கண்ணனின் தாயாருக்கும் நில விஷயமாக ஏதோ சில சில்லரைத் தகராறுகள் கிளம்பின. நாளாவட்டத்தில் அது பெரிய சண்டையாக மாறி கோர்ட்வரையிலும்கூட போய் விட்டது. பொன்னி, செங்கண்ணன் ஸ்நேகத்துக்கும்கூட ஒரு முற்றுப் புள்ளி விழுந்தது எதிர்பாராத இவ விஷயம் இருவர் மனத்திலும் பெரும் ஏக்கத்தையும் ஏமாற்றத்தையும் உண்டாக்கியது.

கடைசியில் செல்லாயி காயல் பட்டியில் இருக்கப்பிடிக்காமல் தன் பங்கு நிலத்தையும் வீட்டையும் விற்றுவிட்டுத் தன் குழந்தைகளுடன் தன் பிறந்த ஊரான செங்கம் பூண்டிக்கே வந்துவிட்டாள். தான் கொண்டு வந்த பணத்தில் கொஞ்சம் நிலமும் ஒரு சிறு குடிசையும் விலைக்கு வாங்கினுள். தன் ஒன்றுவிட்ட தம்பி மகள்—வேலம்மாவை—முருகய்யனுக்குக் கட்டிவைத்தாள்

ஆனல் பொன்னியின் மனதில் மாத்திரம் ஆருத துக்கத்தின் வடுவொன்று ஏற்பட்டுவிட்டது தனிமையில் செங்கண்ணனைப்பற்றி நினைத்து நினைத்து ஏங்குவாள் ஆயினும் என்றைக்காவது ஒரு நாள் செங்கண்ணனைச் சந்திப்போம் என்ற உறுதி மாத்திரம் குலையவில்லை.

பொன்னியிடத்தில் செல்லாயியிக்கு அபார வாஞ்சை. எந்தக் காரணத்தைக்கொண்டும் அவள் வருத்தப்படுவதைக் காண அவள் சகிக்கமாட்டாள். பொன்னி, செங்கண்ணன் இருவர் மனதிலும் வேரூன்றி இருந்த ஸ்நேகத்தின் ஆழத்தையும் செல்லாயி அறியாமல் போகவில்லை இருந்தாலும் பொன்னிக்காகத் தன் சுய கௌரவத்தை விட்டுவிட அவள் தயாராக இல்லை.

செங்கம் பூண்டிக்கு வந்த ஒரு வருஷத்துக்கெல்லாம் செல்லாயி இறந்துவிட்டாள். இறக்கும் தருவாயில் முருகய்யனைத் தன் அருகில் அழைத்து 'பொன்னியை எந்தக் காலத்திலும் கண்கலங்கவிடாதே' என்று சொல்லிவிட்டுப் போனுள்.

செல்லாயி இறந்து இரண்டு, மூன்று தினங்கள் ஆகியிருக்கும். தன் தாயின் மறைவுக்குப் பிறகாவது தங்களுக்கும் தன் அத்தை குடும்பத்தாருக்கும் இருந்து வந்த விரோதம் நீங்கிவிடும், தன் வாழ்க்கையின் லட்சியம் நிறைவேறும் என்று நினைத்திருந்த பொன்னிக்குக் காயல்பட்டியில் இருந்துவந்த ஒரு செய்தி திடுக்கிடச் செய்தது. ஒரு மாதத்திற்கு முன்பு தாயுடன் சண்டையிட்டுக்கொண்டு செங்கண்ணன் எங்கோ சென்றுவிட்டான் என்பதை அறிந்த அவள் இருதயம் வெடித்துவிடும்போல் இருந்தது அவள் வாழ்க்கையே அஸ்தமித்து விட்டது போன்ற ஒரு உணர்ச்சி ஏற்பட்டது.

இது நடந்து மூன்று வருஷங்களாகிவிட்டன. செங்கண்ணனைப் பற்றி ஒரு தகவலும் தெரியவில்லை. பொன்னிக்கும் பதினேழு வயதாகிவிட்டது. வேலம்மாவுக்குப் பொன்னி தன் வீட்டிலே இருப்பது பெரிய பாரமாக இருந்தது. ஏற்கனவே காலத்தின் கொடுமையால் அவர்களுடைய நிலத்தில் இருந்துவந்த வருவாய் சாப்பாட்டுக்குப் போதாமல் போகவே, நிலத்தைச் சிறிது சிறிதாக ஈடுகாட்டிக் கடன் வாங்கிச் செலவழித்துக் கொண்டிருந்தான் முருகய்யன். போன பொங்கலின்போது வட்டிக்கடைக்குப்போன, வேலம்மாவின் கம்மல் ஏறக்குறைய ஒரு வருஷமாகியும் இன்னும் திரும்பவில்லை.

இந்நிலையில் தன் குடும்பத்துக்குப் பொன்னி ஒரு அனுவசியமான சுமை என்று கருதினுள் வேலம்மா. ஆகவே பொன்னிக்குச் சீக்கிரம் கலியாணத்தை முடித்து அவளைப் புருஷன் வீட்டுக்கு அனுப்பிவிட்டால்தங்கள் கஷ்டம் கொஞ்சம் குறையும் என்பது அவள் எண்ணம்.

பொன்னிக்குச் செங்கண்ணன் மேல் இருந்த ஆசையை முருகய்யன் அறிவான் தன் தாய் போய் விட்ட பிறகு பொன்னிக்காக அவன் தன் விரோதத்தை மறந்து செங்கண்ணனுக்குப் பொன்னியை மணம் செய்து கொடுத்துவிடலாம் என்று நினைத்திருந்தான். எப்படியாவது தன் ஒரே தங்கை சந்தோஷமாய் இருந்தால் போதும் என்பது அவன் எண்ணம். ஆனால் செங்கண்ணன் வீட்டை விட்டுப் போய் விட்டது முதல் அவனுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை.

வேலம்மாவின் தொந்தரவு முருகய்யனுக்குப் பெரிதாகப் போய்விட்டது. பொன்னியோ எத்தனை நாட்களானாலும் செங்கண்ணனுக்காகக் காத்திருப்பது என்று முடிவு செய்துவிட்டாள்

வேலாண்டி அந்த ஊர்க்காரன். ஒரு சிறிய ஜவுளிக்கடை வைத்திருந்தான் பொன்னி அந்த ஊருக்கு வந்தது முதலே எப்படியாவது அவளைத்தான் மணம் செய்து கொள்ளவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தான் அவனுடைய தாய்க்கும் பொன்னியை மருமகளாக அடைய வேண்டும் என்று அளவிலாத விருப்பம். இருபது வராகன் வரையில் பரியம் கொடுக்கத்தயாராக இருந்தார்கள் அவர்கள். வேலமமாவும் அவ்வளவு பணம் வரும்போது எப்படியாவது பொன்னியை வேலாண்டிக்கே கொடுத்துவிட எண்ணம் கொண்டிருந்தாள். ஆனால் இவ்விஷயத்தைப்பற்றிப் பிரஸ்தாபித்த பல தடவைகளிலும் பொன்னி ஈடு கொடுத்து ஒரு பதிலும் சொல்லவில்லை.

## 3

கஞ்சனூருக்கும் செங்கம்பூண்டிக்கும் கூப்பிடு தூரம். மரகதத்துடன் கிளம்பிய பொன்னி பதினைந்து நிமிஷத்தில் கஞ்சனூரை அடைந்தாள். ஊர் நாட்டாண்மைக்காரன் வீட்டெதிரே ஒரே கூட்டம். தெரு நடுவே ஒரு பெரிய கம்பம் நடப்பட்டிருந்தது. கூத்தாடிகள் ஆட்டத்தை ஆரம்பித்து விட்டனர் முன்னே கூட்டம் அதிகமாக இருந்ததால் பொன்னியும் மரகதமும் ஆட்டத்தை நன்ருகப் பார்ப்பதற்காக பக்கத்து வீட்டுத் திண்ணையில் ஏறிக்கொண்டனர்.

ஏதேதோ வித்தைகளை எல்லாம் பலர் காட்டினர். கடைசியில் கிழக் கூத்தாடியின் குரல் உரக்கக் கேட்டது. 'ஐயா! மகாராஜாக்களே! இப்போ இவன் அந்தக்கம்பத்தின் உச்சிக்கு ஏறப் போருன்! மேலே போய் ஒத்தக்காலாலே நிப்பான். கர்ணம் போடுவான்! ஐயா! கரணம் தப்பினு மரணம்தான்! வவுத்துப் பிழைப்புக்காக இந்த அபாய வேலை செய்ருேம்! பாக்கறவங்க எல்லாரும் தயவு செய்து அவங்களாலே ஆனதைப் போடுங்கள் ஐயா!........"

என்று கிழக்கூத்தாடி சொல்லி முடித்ததும் சுமார் இருபத்திரண்டு வயது வாலிபன் ஒருவன் கிடுகிடுவென்று கம்பத்தின் உச்சிக்கு ஏறினுன் ஒற்றைக்காலால் நின்ருன். மயிரிழை தவறினுல் உருப்படியாக ஒரு எலும்புகூட கிடைக்காது எல்லோரும் ஆச்சரியத்துடன் அவனையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

பொன்னியின் கண்களும் அதிசயத்துடன் அவனை உற்று நோக்கின. ஆனால் மறுகணம் பயத்தால் அவள் இருதயமே நின்று விடும்போல் இருந்தது. தலை சுற்றியது அவள் வாய் 'ஐயோ' என்று கூச்சலிடத் துடித்தது வாஸ்தவத்தில் கம்பத்தின் மேல் நின்று வித்தை காட்டுவது செங்கண்ணன்தானு அல்லது மனக்கலக்கத்தால் தனக்கு ஏற்பட்ட பிரமையா என்பதே அவளுக்குப் புரியவில்லை.

அதே சமயத்தில் கம்பத்தின் உச்சியில் உட்கார்ந்து மிகவும் அபாயகரமான வேடிக்கையைக் காட்டிக் கொண்டிருந்த செங்கண்ணனும் கீழே கூடியிருந்த கும்பலின்மேல் தன் பார்வையைச் செலுத்தினுன். அருகே இருந்த தட்டோட்டு வீட்டில் நின்றுகொண்டிருந்த பொன்னியைக் கண்டதும் அவன் கண்களில் ஒரு விதப் பிரகாசம் ஏற்பட்டது. மனதில் ஒருவிதத் துடிப்பு. அடுத்த நிமிஷம் அவன் பிடி சற்றுத் தளர்ந்தது. கும்பலில் இருந்து "ஐயோ!" என்ற சப்தம். கிழக்கூத்தாடியும் சற்று அசந்து விட்டான்.

இதற்குள் சறுக்கிக்கொண்டே கம்பத்தின் பாதி தூரத்துக்கு வந்துவிட்ட செங்கண்ணன் சட்டென்று சமாளித்துக்கொண்டு மெதுவாகக் கீழே இறங்கினுன் இத்துடன் ஆட்டம் முடிந்துவிட்டது.

'மகாராஜன்களே! இந்நேரம் பிள்ளை சாவறதுக்கு இருந்தது. புண்ணியாத்மாக்களே! ஏதாச்சியும் போடுங்க ஐயா!" என்று சொல்லிக்கொண்டே ஒரு தட்டை எடுத்துக் கொண்டு பிச்சை வாங்க வந்துவிட்டான் கிழவன் கும்பல் கொஞ்சம் கொஞ்சமாகக் கலைய ஆரம்பித்தது.

பொன்னிக்குக் கம்பத்தின் அருகில் நின்று கொண்டிருந்த செங்கண்ணனுடன் எவ்வளவோ பேசவேண்டும் என்று மனம் துடியாய்த் துடித்தது. ஆனால் பற்பல சந்தேகங்கள் அவள் மனதில் தோன்றின.

கூத்தாடி கோஷ்டியில் இருந்த செங்கண்ணனுடன் வயது வந்த பெண்ணுன தான் பேசினுல் உண்மையை அறியாத மரகதமும் கிராமத்தாரும் என்ன எண்ணிக்கொள்வார்களோ என்று அஞ்சினுள். அதோடு மரகதம் வேறு சீக்கிரம்

வீடு திரும்ப வேண்டும் என்று தொந்தரவு செய்து கொண்டிருந்தாள். ஆகவே ஒரு முடிவுக்கும் வர முடியாமல் சிறிது நேரம் தவித்துக் கொண்டிருந்த பொன்னிக்கு, அக் கூத்தாடி கோஷ்டியார் இன்னும் இரண்டு, மூன்று தினங்கள் அங்கு தங்கப் போகிறார்கள் என்ற செய்தி சிறிது ஆறுதளித்தது எப்படியாவது மறுநாள் காலையில் தான் மாத்திரம் தனியாக வந்து செங்கண்ணனைச் சந்தித்து எல்லா விஷயங்களையும் சொல்லி விடுவதென்று தீர்மானித்துக்கொண்டு மரகதத்துடன் ஊரை நோக்கிப் புறப்பட்டாள் அவள் மனம் இன்பக் கடலில் தத்தளித்துக்கொண்டிருந்தது கால்கள் தம் போக்கில் நடந்தன.

கும்பல் கலைந்ததும் செங்கண்ணன் சுற்றுமுற்றும் பார்த்தான் பொன்னி காணப்படவில்லை. ஆட்டம் முடிந்ததும் அவளைப் பார்த்துப் பேசவேண்டும் என்றிருந்த அவனுக்கு அவள் காணுமற்போனது பெரும் ஏமாற்றத்தை அளித்தது அங்கும் இங்கும் பார்த்தான் செங்கம் பூண்டியை நோக்கி மற்றொரு பெண்ணுடன் வயல் வெளியில் அவள் போய்க் கொண்டிருந்தது தெரிந்தது

உடனே செங்கம் பூண்டியில் இருந்த அவள் வீட்டுக்குச் சென்று அவளைச் சந்திக்கலாம் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது ஆனல் மறுகணம் முருகய்யன் இன்னும் அந்தப் பழைய விரோதத்தை மறவாமல் இருந்தால் என்ன செய்வதென்ற சந்தேகமும் கூடவே எழுந்தது ஆயினும் அவன் அன்று மாலை எப்படியும் செங்கம் பூண்டிக்குப் போவதென்றும். யாருக்கும் தெரியாமலாவது பொன்னியைச் சந்தித்துப் பேசிவிட்டு வந்து விடுவதென்றும் முடிவு செய்துகொண்டான்

வீடு சேர்ந்த பொன்னி அன்றெல்லாம் பித்துப் பிடித்தவள்போல் நடந்துகொண்டாள் விவரிக்க முடியாத ஒரு இன்ப உணர்ச்சி அவள் இதயத்தில் தோன்றி இருந்தது. எப்பொழுது செங்கண்ணனைச் சந்திக்கப் போகிறோம் என்ற ஆவல் அதிகமாகிக் கொண்டே வந்தது.

அன்று சூரியன் மலைவாயில் விழும் தருணம். பொன்னி வழக்கம் போல் இடுப்பில் குடத்தை வைத்துக் கொண்டு தண்ணீர் எடுத்து வர குளத்தை நோக்கிக் கிளம்பினுள். அன்று அவளுடைய் நடையில் ஒரு விதமிடுக்குகாணப்பட்டது. முகத்தில் ஒருவித சோபை மனதில் குதூகலம்.

குளத்தினுள் இறங்கிய அவள் குடத்தை நன்றாகக் கழுவி தண்ணீர் மெள்ளப் போகும் சமயத்தில், அடுத்த படித்துறையில் யாரோ முகம் கழுவிக் கொண்டிருந்தது போல் தெரிந்தது அவளுக்கு. 'குடி தண்ணீர் குளத்தில் முகம் கழுவுவது யார்? யாராவது அசலூராக இருக்குமோ?' என்று நினைத்து அப்பக்கம் பார்த்த அவள் ஒருகணம் அப்படியே வாயடைத்து நின்றுவிட்டாள். அடுத்த கணம் "செங்கண்ணு!" என்று கூவிக்கொண்டே கிடுகிடு என்று அங்கே ஓடினுள்.

"யாரது? பொன்னியா? காலம்பற ஆட்டம் பார்க்க வந்தவள் அப்படியே மாயமா மறஞ்சுட்டேயே? நீ என்னைப் பார்த்தயோ இல்லையோன்னு சந்தேகம். உங்க வீட்டுக்கு வந்தா உங்க அண்ணன் என்ன சொல்லுமோன்னு பயம். இப்படியெங்கேயானு கண்ணிலே பட்டா உன்னைக் கண்டு நாலு வார்த்தை பேசிப்புட்டு போகலாம்னு மனசு துடிச்சுது. இப்படி வந்தேன்! நானு நெனச்சதுபோல நீயும் வந்துட்டே..." என்ருன் செங்கண்ணன்.

"எம்மா நாளாச்சு! நீ வூட்டை விட்டு போயிட்டதைக் கேட்டதும் எவ்வளவு கஷ்டப்பட்டேன் தெரியுமா நானு?...கடைசியிலே உசிருக்கும் துணிஞ்சு கொம்புமேலே கூத்தாடற கதியா உனக்கு வரணும்?" என்று சொல்லும் போதே பொன்னியின் கண்கள் கலங்கின.

"என்ன செய்யறது பொன்னி! அது நான் செஞ்ச பாவம்'' என்ருன் செங்கண்ணன்.

பின் இருவரும் அக்குளத்தின் ஒரு மூலையில் இருந்த மாமரத்தின் அடியில் போய் உட்கார்ந்துகொண்டனர் தத்தம் மனதில் பதிந்து கிடந்த விஷயங்களையெல்லாம் வெளியே கொட்டினர். கடைசியாகப் பொன்னி, "எப்படி இருந்தாலும் உன்னைத் தவிர வேறு யாரையும் கட்டிக்கிறது இல்லைன்னு நான் உறுதி பண்ணிட்டேன் நீ கட்டாயம் எப்படியும் வருவேன்னு தெரியும். ஆனு அண்ணி மாத்திரம் இந்த ஊரிலே இருக்கிற யாரோ ஒரு குடிகாரப் பயல் இருபது வராகன் பரியம் கொடுக்கிருன்னு சொல்லி என்னை அவனுக்குக் கட்டிக் கொடுத்துடுன்னு அண்ணனைத் தொந்தரவு பண்ணுது......... எங்க அம்மா காலமான பிறகு அண்ணன் உங்க பேரிலே இருந்த விரோதத்தை அடியோடெ மறந்துடுச்சு......"என்ருள்.

"ஏதோ அம்மா கிட்டே சண்டை போட்டுக்கிட்டு வீட்டை விட்டு போய் சம்பாதிக்க வேறு வழியில்லாமெ இந்தக் கூத்தாடிங்களோடு சேர்ந்துட்டேனே தவிர என் மனசு எல்லாம் உன்பேரிலேதான் இருந்துச்சு. உன்னை எப்போ. பார்க்கப் போறோம்னு இருந்துச்சு காலம் பர உன்னை அந்த ஊட்டுத் திண்ணையிலே பார்க்கச்சே என் மனசு என்னபாடு பட்டுது தெரியுமோ இல்லையோ... கை சறுக்கிக்கூட பூடிச்சு......"

"ஆனு என்னைக் கட்டிக்கிறதா இருந்தா இந்தக் கூத்தாட்டத்தையெல்லாம் விட்டுடணும்.....!" என்ருள் பொன்னி சற்று விறைப்பாக.

அதே சமயத்தில் வயல் வெளிக்குச்சென்று திரும்பி அந்தப் பக்கமாக வந்துகொண்டிருந்த முருகய்யன் மாமரத்தடியில் பொன்னியின் குரல் கேட்கவே சற்று எட்டிப் பார்த்தான் மங்கலான வெளிச்சத்தில் பொன்னி யாரோ ஒரு வாலிபனின் பக்கத்தில் உட்காரந்து கொண்டு பேசிக்கொண்டிருந்தது தெரிந்தது. உடனே அவன் மனதில் பலவித விபரீத எண்ணங்கள் எல்லாம் தோன்றின. 'பொன்னி யாரோ ஒருவனிடத்தில் கள்ள நட்பு கொண்டிருக்கிருள் ஆகையால் தான் அவள் வேலாண்டியைக் கலியாணம் செய்துகொள்ள ஒப்பவில்லை' என்ற சந்தேகம் எழுந்தது. அவன் உடல் துடித்தது. அவன் கண்கள் கோபத்தால் சிவந்தன. கை பதறியது அவளுடைய கள்ளக் காதலனை அன்றுடன் ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துக்கு வந்துவிட்டான் அவன். உடனே அவன் இடுப்பில் செருகி இருந்த பேனுக்கத்தியைக் கையில் எடுத்துக் கொண்டு. "டேய்! யாருடா நீ? எத்தனை நாளடா பொன்னியோடெ இந்த ரகசிய சிநேகம் வச்சிருக்கே? இன்னியோடு நீ எமலோகம்தான்'' என்று கூவிக்கொண்டே, சரேலென்று அவர்கள் அருகே பாய்ந்து செங்கண்ணனைக் குத்தக் கத்தியை ஓங்கிவிட்டான்.

எதிர்பாராத இச்செய்கையினுல் செங்கண்ணன், பொன்னி இருவருமே சற்று பயந்துவிட்ட போதிலும், பொன்னி சட்டென்று தன்னைச் சமாளித்துக்கொண்டு எழுந்து, "ஐய்யய்யோ! அவரைக் கொல்லாதே! நம்ப செங்கண்ணனுச்சே இது!........." என்று சொல்லிக் கொண்டே அண்ணனின் கையில் இருந்தகத்தியைபிடுங்கிகொண்டாள்.

"என்ன? செங்கண்ணனு? ஐயோ! ஆத்திரத்திலே எவ்வளவு பெரிய பாவம்செய்ய இருந்தேன்!' என்ருன் முருகய்யன் வாஸ்தவத்தில் நன்ருக உற்றுப் பார்த்தபோது அது செங்கண்ணன்தான் என்பதை அறிந்த அவனுக்குச் சந்தோஷம் தாங்க முடியவில்லை.

செங்கண்ணனின் கதையைக் கேட்கக்கேட்க முருகய்யன் மிகவும் வருத்தப்பட்டான். பின் மூவரும் வீடு சேர்ந்தனர்.

ஒரு வாரத்தில் பொன்னியின் கழுத்தில் மஞ்சள் கயிறு ஏறியது. பொன்னன்தான் கூத்தாடிச் சேர்த்து வைத்திருந்த ஐந்நூறு ரூபாயில் இருபது வராகன் பரியம் கொடுத்தான் வேலம்மாவின் கம்மல்களும் பழையபடி அவள் காதுகளை அலங்கரித்தன.

---



# நாமொன்று நினைக்க—!

ய. மகாலிங்க சாஸ்திரி, எம்.ஏ.பி.எல்.

அன்று காலையில் அத்திம்பேர் உத்திரவுப்படி சிவராமன் மாரியேஜ் ரிஜிஸ்டிராரின் ஆபீஸுக்குச் சென்று உஷா ராமநாதன் விவாகப் பதிவு விஷயமான நோட்டீஸை எழுதிக் கொடுத்தார். உஷாவுக்கு சிவராமன் கார்டியனாகக் கையெழுத்திட்டார் ராமநாதனுக்கும் ஒரு கார்டியன் தேவையோ என்று ஸ்ரீ வேங்கிட சுப்பையர் சந்தேகித்தார் அவனுக்கு உண்மையான வயது இருபதுதான் ஆனால் யாருடையதவருலோ அவனுக்குப பள்ளிக்கூடத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த வயது ஒரு வருஷம் அதிகமானதாகவே இருந்தது அதை அனுசரித்து அவன் 21 வயதான மேஜர் என்றும் கார்டியன் இல்லாமல்தானே விவாஹ ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் சட்டப்படி லாயக்குள்ளவனென்றும் தீர்மானித்து அவர் அதில்தான் தலையிடாமல் பின்னே நின்று காரியத்தை நடத்தலானார்.

சிவராமன் வெளியே போயிருக்கும்போது கி. முத்துஸ்வாமி ஸ்ரீ வேங்கிட சுப்பையரிடம் வந்தான். அவன் ஹெட்மாஸ்டரால் அனுப்பப்பட்டிருந்தான். ஹெட்மாஸ்டர்தான் ஐயர் அவர்களைப் பார்ப்பதற்கு காலையில் தகுதியாயிருக்குமா அல்லது மாலையில் ரெளமா என்று கேட்டு வரச்சொல்லி அவனை அனுப்பியிருந்தார் முத்துஸ்வாமி முன் ஹாலில் கால் வைத்ததும் காந்திமதி அவன் எதிரில் வந்து ஆங்கிலத்தில் 'தயவு செய்து உட்காருங்கள் அப்பாவுககுத் தெரிவிக்கிறேன்' என்றுஉபசரித்தாள்.முத்துசாமி அவளுக்குநன்றி கூறிவிட்டுஒரு சேரில் உட்கார்ந்தான். செல்லம் அவன் முன் வரவில்லை பக்கத்து ரூமில் இருந்து அவனை கவனித்துக் கொண்டிருந்தாள். "வெந்த உள்ளம்" என்று கையெழுத்திட்டுக் கவிதை கட்டிய ஆவேசக்காரன் எவ்வளவு ஸாதுவாய் அங்கு உட்கார்ந்திருக்கிறான் என்று நினைத்துப்பார்க்கும்போது அவளுக்குச் சிரிப்பாயிருந்தது. இந்த ஸாதுவுக்குச் "சாந்த சக்தி" என்ற புனைப்பெயருடன் ஒரு பதில் கவிதையை உருவாக்கி அனுப்பக் கொஞ்சநாளாய் செல்லம் முயன்றுகொண்டிருந்தாள். ஆனால் ஒரு வரிகூட அவளால் சேர்க்க இயலவில்லை. அர்த்தத்தைச் சிந்தித்தல்லவா பதத்தைத் தேட வேண்டும்? அர்த்தம் உசிதமானதாயிருக்க வேண்டியது அவசியம் அது உணர்ச்சியைப் பின்பற்றுமென்றாலும் எல்லா உணர்ச்சிகளையுமே உசிதமானவை என்று சொல்லிவிட முடியாது. செல்லத்திற்கு முத்துஸ்வாமியிடமிருந்த உணர்ச்சி பரிகாசம். விளையாட்டு இடக்கு, திமிர், அகந்தை, அலக்ஷ்யம். தன் பெருமை, சஞ்சலம் முதலிய அனுசிதமான கவசங்களை எரித்துவிட்ட ஸாத்வீக உணர்ச்சியல்ல ஆகையால் எழுதப் புகும்போது உசிதப் பண்பாடுடைய பாவங்களே அவளுக்கு உதயமாகவில்லை. அந்த நிலையில்தான் அவளும் அதை அறிந்தாள். கொஞ்சம் வெட்கினாள் தன் உள்ளத்தை மேன்படுத்திக்கொள்ளவேண்டிய அவசியத்தை உணர்ந்தாள் அவளுக்குத் தன் சிறுமித்தனத்தின் அடையாளங்களான சில குறைபாடுகள் உண்மை உணர்ச்சிக்கு மாறானவை என்ற அறிவு தோன்றலாயிற்று. எவ்வளவு உயரிய பண்பாடிருந்தால் உசிதமான பாவங்கள் நிறைந்த கவிதை கட்ட இயலும் என்பதை அவள் சிந்திக்கலானாள்.

முத்துஸ்வாமியின் சிந்தனைகளோ அச்சமும் துடிப்பும் நிறைந்த பாதையில் ஓடிக்கொண்டிருந்தன தன் விசாரணைக்கும் பூர்வாங்கமாக ஹெட்மாஸ்டரின் அழைப்பு ஏற்பட்டிருக்கிறதென்று அவன் ஊகித்தான் நிஜம் ருசுவானால் தன்னைக் குற்றம் பாதிக்காதென்றாலும் நிஜம் எப்படி ருசுவாகும்? அதை யார் நம்புவார்கள்? பொய்யை நம்பச் செய்யும் சூழ்நிலைகளுடன் நிஜம் போராடி வெற்றியடைவது அரிதல்லவா? பொய்யின் தாஷ்டீகமும் நிஜத்தின் கோழைத்தனமும் பிரும்ம சிருஷ்டியின் இயல்புகள் என்பதை எவன் மறுக்கமுடியும்! உக்தாந்ருதம் ருஷிம்யதா—என்று வால்மீகி சொன்னது தர்மத்தை அடிப்படையாகக் கொண்டிருந்த காலத்தில்! அர்த்தம் என்ற பணத்தை அடிப்படையாகக்கொண்ட நாகரீக காலத்தில் அந்ருதம் பிரும்ம வித்தையின் பெருமையை அடைந்து விட்டது. அந்ருதம் பிறரை ஏமாற்றும் நோக்கமுடையது அதன் பலன் சுயநலம் இந்த அசுப சூசகமான கொள்ளிக்கட்டைச் சுழலை நாகரீக காலத்தின் ஆரம்பத்தில் விளங்கிய ஸ்ரீ காளிதாஸ மஹாகவி, சுட்டிக்காண்பித்திருக்கிறார். அங்குபேசுபவர் ஒரு ரிஷி — பேசப்படுபவர் நாகரீக வாழ்க்கையில் அரசு புரியும் ஒரு மன்னன் நாகரீக வாழ்க்கையில் பொய் புரட்டுக்களால் உண்மை உருத்தெரியாமல் பாதாளத்திற்கு அடித்துத் துரத்தப்படுவதை மிருச்சகடிகம் என்ற மிகப் பழைய காலத்து நாடகம். எவ்வளவு பரி

கடைக்காரர்:—என்னங்க உங்களுக்கு இந்த ஷர்ட் பிடிச்சிருக்கா?

வந்தவர்:—ஆமாம் பாய்! நல்லா பிடிக்குது. எல்லா இடத்திலேயும் ஷ்டிப்பா பிடிக்குதே!

தாபகரமாய் எடுத்துக் காட்டுகிறதென்று முத்துஸ்வாமி ஞாபகப் படுத்திக்கொண்டான்.

முத்துஸ்வாமியை ஸ்ரீ வேங்கிட ஸுப்பையரே மாடியின் மேல்புறம் வரையில் வந்து மேலே ஏறிவரும்படி அழைத்தார்.

முத்துஸ்வாமி மிக்க அடக்கவொடுக்கமாய்ப் படி ஏறிச்சென்று ஸ்ரீ வெங்கடேச அய்யர் அறையின் வாசற்படியை அடைந்தான் அவனை உள்ளே வந்து ஒரு நாற்காலியில் உட்காரும்படி வேங்கட ஸுப்பையர் எவ்வளவு சொல்லியும் அவன் அதற்கு இணங்கவில்லை. அவனுடைய களங்கமற்ற தோற்றமும் வினயசம்பத்தும் வேங்கிட சுப்பையருக்கு வியப்பை அளித்தன. இந்தக் காலத்திலும் இந்தப் பட்டண வாசத்திலும் இப்படி ஒரு பிள்ளை உண்டா என்று தனக்குத் தானே அவர் கேட்டுக்கொண்டார்.
'ஹெட்மாஸ்டர் எப்போது வர சௌகரியப்படும் என்று சொல்லி அனுப்பியிருக்கிறார்'' என்று அவர் முத்துசாமியை விசாரித்தார்

"தங்கள் சௌகரியத்தைத்தான் அவர் அறிந்து வரச்சொன்னார். காலையானாலும், மாலையானாலும் உத்திரவு பெற்றவுடன் அவர் வரத் தயாராகவிருக்கிறார்'' என்று முத்துஸ்வாமி தெரிவித்துக்கொண்டார்.

"அவர் மாலையிலேயே வரட்டும். அவரைப் பார்க்க விரும்பிய சிவராமன் இப்போது வெளியே போயிருக்கிறார் என்று ஐயர் கூறினார்.

உடனே முத்துஸ்வாமி ஐயருக்கு வந்தனம் சொல்லிவிட்டு விடைபெற்றுக்கொள்ள முயன்றான் ஆனால் ஸ்ரீ வெங்கிடேசய்யர் அவனைக் கேள்விக் கேட்கத் துவக்கியதால் அவன் எடுத்த காலைத் திருப்ப வேண்டியதாயிற்று.

"நீ எந்தக் கிளாஸில் வாசிக்கிறாய்?''

"ஆறாவது பாரத்தில்''

அவன் வயதுக்கு அவன் படிப்புத் தாமதமாயிருப்பதற்குக்காரணத்தை ஐயர் கேட்டறிந்துகொண்டார்.

"உன்னைப்போல் அதிக வயதான பையன்கள் பள்ளிக்கூடத்தில் எத்தனை பேர் இருப்பார்கள்?''

"வயதில் என்னைப்போன்றவர் அநேகம் பேர்கள் இருக்கிறார்கள். கணக்குத் தெரியாது ஆனால் அவர்களின் தாமதித்த படிப்பிற்குக் காரணங்கள் வெவ்வேறு.—''



கலிபோர்னியா சட்டப்படி, விவாக நற்சாட்சியைப் படித்து, கையொப்பமிட்டு மேலதிகாரிக்குத் தெரிந்த யாராயினும் விவாகத்தை நடத்தி வைக்கலாம். இந்தப் புரோகிதத்தை 4-வயதுள்ள ரெவரெண்டு மார்ஜோ கார்ட்டனர் சென்ற மாதம் லாஸ் பீச்சில் நடத்திவைத்தபோது எடுத்த படம். மணமகன், மாலுமிரேமண்ட்மில்லர்; மணமகள் சல்மா பிரௌன்.



மேலே விமானங்கள் புறப்பட்டுச் செல்லலாம். கீழே அமைந்த பாதையில் கார்கள் போகலாம். இத்தகைய ஏற்பாடு யு. எஸ். ல் சென்ற நவம்பரில் ஆரம்பிக்கப்பட்டது.

வேங்கிட சுப்பையர் சிரித்துக்கொண்டார்.

"உன்னைப்போல் அத்யயனத்திலும் பிதிரு காரியத்திலும் காலதாமதமானவர்கள் அல்ல?"

"ஆமாம், பள்ளிக்கூடத்திலேயே காலம் கடத்தியிருக்கிறுர்கள்" என்றுன் குறும்புத்தனமாய் முத்துஸ்வாமி

வேங்கிட சுப்பையர் இன்னும் விரிவாகச் சிரித்துவிட்டு— "சிலர் பால்ய வயது, படிப்பிற்கு ஏற்பட்டதென்பதையே அறியாதவர்களாயிருக்கலாம்."

"குலாசாரமும் கலாசாரமும் ஒத்துக்கொள்வதென்றுல் வெகுப்பேருக்குப் புதுமையாகத்தானிருக்கிறது. ஆனுல் வெள்ளிமலை வலுவில் இழுக்கிறது" என்றுன் முத்துசாமி. ஸம்பாஷணையின் சுவாரசியத்தில் உட்புகுந்தவனுய்.

வேங்கிட சுப்பையருக்கு அவன் பேரில் ஏற்பட்ட திருப்திக்கு அளவு கிடையாது அவனை மறுபடி உட்காரச் சொல்லி நிர்ப்பந்தித்தார். அவன் உடன்பட மறுத்தான்

"அப்படி வயதான பையன்கள் படிப்பதால் பள்ளிக்கூடத்தின் ஒழுங்கு முறை, கட்டுப்பாடு, கலாசார முன்னேற்றம் இவைகள் பாதிக்கப்படலாமோ?" என்று வேங்கிட சுப்பையர் தன் பிரச்ன மாலிகையைத் தொடர்ந்தார்.

"ஆமாம், விசேஷமாய் இரு பாலரும் படிக்கும் பள்ளிக்கூடத்தில் எல்லாம் பாதிக்கப்படுவது சகஜம்" என்று முத்துஸ்வாமி அய்யரைத் திகைக்கவைக்கும் தீரத்துடன் அவர் அந்தரங்கத்தில் ஒளித்து வைத்திருக்கும் பிரச்னையை முன் கூட்டியே அம்பலப்படுத்தினுன்.

வெங்கிட சுபபையர் வெட்ட வெளிச்சமாய் யுத்தம் செய்யத் தானும் பின் தங்கவில்லை என்று நிருபிப்பவர்போல்—"ஆகையால் காதல் கடிதங்கள் பிறப்பதில் ஒன்றும் ஆச்சரியமில்லை?" என்று கேட்டார்.

"பிறக்கக்கூடியதெல்லாம் பிறக்கும்" என்றுன் முத்துஸ்வாமி தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டு.

வேங்கிட சுப்பையர் சிரிப்புக்கு இடம் கொடுக்காமல் அவன் பேசும் தோரணையில் "குற்றமுள்ள நெஞ்சல்லவா, குறுகுறு என்கும்? எனக்கு என்ன பயம்? நீர் எதை வேண்டுமானுலும் கேளும், உம் சந்தேகங்களை நான் ஸத்திய சக்தியால் தகர்த்து எறிவேன்" என்ற வீர பிரதிக்ஞை த்வனிப்பதை நிதானித்தறிந்துகொண்டார். அதற்குமேல் அவனைக் கேள்விகள் கேட்க அவருக்கு யோசனையாகிவிட்டது. செல்லத்திற்குக் காதல் கடிதம் இவன் எழுதியிருக்கமாட்டான் என்றும் அப்படி எழுதியவனுய் தாம் அவனைச் சந்தேகபபடுவதால்ரோஷம்கொண்டு அந்தச் சந்தேகத்தை தைரியமாய் எதிர்த்து விரட்டிவிட அவன் முஸ்தீப்புடன் இருப்பதாயும் அவர் ஊகித்தார் அந்த நிலைமையில் அவனை மேலே கிளறிவிடுவது சமயோசிதமல்லவென்று தீர்மானித்துக்கொண்டார். அவன் நுண்ணறிவு வேங்கிட சுப்பையரைத் திணரவைத்தது. தனக்கு ஏற்ற எதிர்வாதம் செய்பவன் ஒரு சிறுவன் என்று நினைக்க அவர் ஆச்சரியமடைந்தார். தான் அவனை நிலை போட நினைக்குமுன் தன்னை அவன் நிறுத்து அளவையும் குறிப்பெடுத்து வைத்திருப்பது காண அவருக்குச் சிறிது வெட்கமாயுமிருந்தது.



ஹெலிக்காப்டரின் புரோபெல்லரில் ஒளிவீசும் சாதனங்கள் அமைக்கப்பட்டு பரீட்சிக்கப்பட்டபோது எடுத்த படம். இரவில் வானவீதியில் ஒளிக்கிரணங்கள் வீசிப் பரவ இது உதவியாயிருக்கும். அனுகோஸ்டியாவில் நடந்த ஒத்திகையிது.

வேங்கிட சுப்பையர் சம்பாஷணையை வேறு வழியில் செலுத்தி முத்துசாமியின் இருப்பிடம், ஆகார வசதி முதலியவற்றைப்பற்றி விசாரித்தார். முத்துசாமி சுருக்கமாயும் நேர் முகமாயும் தன் சரித்திரத்தை எடுத்துரைத்தான். சர்மாவின் பிரஸ்தாபம் வந்ததும். 'அவனுேடு உன்னுல் எப்படி இருக்கமுடிந்தது" என்று வினவினுர் வேங்கிட சுப்பையர். "துஷ்கரமே வக்ருதம்" என்றுன் முத்துஸ்வாமி ஸம்ஸ்கிருதத்தில். ("முடியாததைத்தான் செய்தேன்") மேலும் அவன், "ஹிதோபதேசத்தில் ஒரு கதையிருக்கிறது. ஹம்ஸமும் காக்கையும் ஒரு மரத்தில் உட்கார்ந்திருந்தபோது ஒரு வழிப்போக்கனுக்குக் காக்கை செய்த தீமைக்காக ஹம்ஸம் அடிபட்டு உயிர் இழந்தது என்பது அக்கதை. எனக்கு அது

சில அம்சங்களில் பொருந்தும்'' என்றான்.

வேங்கிடசுப்பையர் அவன்பேச்சில் உள்ள சோக ரஸத்தை உணர்ந்து மனம் களிந்தார். அவன் தன் மனதில் உள்ள பிரச்னைக்கு மறைமுகமாகப் பதில் அளிக்கப் பிரயத்தனப்படுவதை அவர் நன்கு உணர்ந்தார். ஆனல் சர்மா செல்லத்திற்குக் காதல் கடிதம் எழுத எப்படி நேர்ந்தது என்று கேட்க அவன் துணியவில்லை. முத்துசாமிக்கும் அந்தக் காலித்தனத்திற்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை என்று அவர் பிரமாணம் செய்யத் தயாராகவிருந்தார். அதற்குமேல் அவனைச்சோதிக்கும் மனப்பான்மையுடன் கேள்விகள் கேட்டு அவன் மனதைப் புண்படுத்த அவர் விரும்பவில்லை. ஆனல் அவன் அப்படிப்பட்ட அவருடைய வெளிப்படையான கேள்வியை எதிர்பார்ப்பதாயும் அதற்கு அவன் நேரிடையான பதில் அளிக்க முஸ்தீப்புடன் இருப்பதாயும் அவர் நன்கு கண்டுகொண்டார்.

மறுபடி வேங்கிட சுப்பையர் ஸம்பாஷணையை சாவதானமான பாதையில் நடத்திப்போக முயன்றார் ஆனல் செல்லமும் காந்திமதியும் இவனே அக்காதல் கடிதம் எழுதியதாய் நினைப்பது எவ்விதம் என்று அவருக்கு மனதில் இடறிக்கொண்டே இருந்தது. அந்த அஸ்திவாரத்தில் பிறந்த கேள்வி பின்வருமாறு:

"எல்லாக் காதல் கடிதங்களும் வெறுக்கப்படுவதில்லை சில வரவேற்கப்படலாம். அப்போது அவற்றைக் குற்றமென்று கருதுபவர்கள் இருக்கமாட்டார்கள்—அல்லவா?''

"இருக்கலாம்'' என்றான் முத்துசுவாமி. வேங்கிடசுப்பையருக்குத் தூக்கி வாரிப்போட்டது. தன் மதியோட்டத்திற்கு அவன் ஊகம் எப்போதும் ஒரு காதவழி முன்னேயே சென்றுகொண்டிருப்பது அவரைச் சிறியோனாக்குவதுபோலிருந்தது.

"யார்?" என்ற கேள்வி அவரை அறியாமலே வெளிவந்தது முத்துசாமியின் பதில் தயாராகவிருந்தது.

"தன் வீட்டுப் பெண்ணின் போக்கை அறியாத சுற்றத்தார்'' என்றான் அவன்.

வேங்கிடசுப்பையர் சிரித்துக்கொண்டார். அவன் பேசியதின் தாத்பரியத்தைச் சற்றுச் சிந்தித்து மனமுவந்தார்.

முத்துசாமியிடம் மேலே பேச்சுக்கொடுக்க அவர் முயலவில்லை,

"உனக்குப் பள்ளிக்கூடம் உண்டல்லவா?''

"ஆம்"

"சரி. ஹெட்மாஸ்டர் இன்று மாலை வரட்டும் சிவராமன் அப்பொழுது வீட்டிலிருப்பார்'' என்று வேங்கிட சுப்பையர் முத்துசாமிக்கு விடைகொடுத்தார்.

அவனும் அவருக்கு வணக்கம் செய்துவிட்டுக் கீழே இறங்கினான்

அவன் சென்றதும்—'' சிவராமன் இவனுடன் பேசி என்ன புரிந்துகொள்ள முடியும்? அசட்டுப்பட்டம் வாங்கிக்கொள்ள வேண்டியதுதான்'' என்று வேங்கிட சுப்பையர் தானே பேசிக்கொண்டார்.

முத்துசுவாமியோ, "வேங்கிட சுப்பையர் அக்காதல் கடிதத்தைச் சுற்றிச் சுற்றி வந்தாரே ஒழிய, ஏன் நேரிடையாக ஒன்றும் கேட்கவில்லை? நான் நடந்ததை எல்லாம் மேல் விசாரணைக்கு இடம் இல்லாமல் சொல்லிவிடத் தயாராகவிருந்த போதிலும், எனக்கு அவர் கேட்காததைப் புகுத்திப் பேச மனம் துணியவில்லை—'' என்றவாறு சிந்தனைக் குழப்பத்தில் ஆழ்ந்து பங்களாவின் வாசலை அடைந்தான். அப்போது, திடீரென்று ஏதோ ஒரு உணர்ச்சி உதயமாகி அவனைத் திரும்பிப் பார்க்கச் செய்தது

அவன் கண்களின் கூரிய பார்வையால், அம்பினால் அடிபட்ட பறவை போல், செல்லம் ஒரு ஜன்னல் வழியே அவனை நோக்கிக்கொண்டிருந்தவள் சரேலென்று ஜன்னலின் கீழே மறைந்தாள்

(தொடரும்)

## பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்'' வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ் கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

**காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—**

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32–க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24–க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12–க்கு ரூ. 3 0 0

**செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—**

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15–க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80–க்கு ரூ 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன. ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்'' புத்தகசாலை, மவுண்ட் ரோடு, சென்னை.

## கட்டுரையாளருக்கு

★

"சுதேசமித்திரன்'' வாரப்பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதா பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

—ஆசிரியர்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57.

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்ச் : மன்னார்குடி.)

**சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

**வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்**

**பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு**

**முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.**

ஸோல் ஏஜெண்டுகள்:—

**புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,**
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை ஃ பாலக்காடு ஏஜெண்டு)

**B. Balapattabi Chettiyar,**
246, Vysyal St.,
**COIMBATORE.**

# மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால் இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும் பெற இச்சையுண்டானால் இன்றே

**"ஜீவவசிய பரம ரஹஸ்யம்"**

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப் படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்த சாஸ்திர சம்பந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று, பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப் படித்து பயன் பெறுங்கள்.

விலை ரூ. **4-8-0.**

வி. பி. செலவு அணா 9.

# மண வாழ்க்கை

★

சதி—பதிகள் விஞ்ஞான ரீதியாகவும் ஒழுக்க முறைப்படியும் இல்வாழ்க்கையை எவ்வாறு நுகரவேண்டுமென்பதை மிக நுணுக்கமாகவும், விளக்கமாகவும் ஆபாசமின்றி போதிக்கும் அபூர்வ நூல். கற்றோரும், மற்றோரும், பாலியர்களும் சங்கோஜமின்றிப் படித்துணரத்தக்க சிறந்த நூல். கலை கலைரும் வனப்புவாய்ந்தது.

344 பக்கங்கொண்ட பெரிய நூல்.

மலிவுப் பதிப்பு ரூ. 3—12—0

பரிசுப் பதிப்பு ரூ. 5—8—0

வி. பி. வேறு.

**ஷாஜஹான் புக் டெப்போ,**

**34,** சாந்தோம் : : **சென்னை 4.**

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press. Victory House Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B. A.

# உங்கள் முறை தவறானது

தரகர்கள் — நிபுணர்கள் — அவரவர் சொந்த நலனுக்காக லாபம் சம்பாதிக்கும்பொருட்டு, தமது அன்பான (!) உதவியின்றி வியாபாரியிடம் நீங்கள் நேரடியாகச் செல்லாமலிருக்க சாதுர்யமாகப் பேசுகின்றனர்.

ஆகையால், நீங்கள் வியாபாரியை அடையும் முறை தவறானது. வியாபாரி பைசாச மானாலும், உமது அறியாமையை எளிதில் கண்டுபிடிப்பார்; அதுவே அவரது கொள்கை. உமது அறியாமையை அறிய எவ்வளவோ வழி அவருக்கு இருக்கிறது. நீங்கள் மிகவும் புத்திசாலியாயிருந்தாலும் வியாபார விஷய மறியாதவர்தானே.

ஜப்பானிய விலைகளில், பிரிட்டிஷ் நம்பிக்கையுடன் ஜெர்மன் சரக்குகளை எதிர்பார்ப்பது முட்டாள்தனமாகும். விலை விகிதங்களை மட்டும் பரிசீலித்து உமது நிபுணரை ரகத்தை தெரிந்தெடுக்க அனுமதிப்பது நெருப்புக்கோழி வழிபோலாகும். உமது நிபுணர் சொல்லிக் கொடுத்துள்ள வழியைப் பின்பற்றுவதாலும் நன்றாக விவரித்துக் கூறுவதாலும் சரியான ரகம் கிடைக்காது நீங்கள் கொடுக்கும் பணத்துக்கு ஏற்ற சரக்குதான் கிடைக்கும்.

நேர்மை, நம்பிக்கை, பெயர், நீண்டகால சேவை இவை பொருந்திய வியாபாரி கிடைப்பது உமக்கு அனுகூலமாகும். உமக்கு நம்பிக்கையான சரக்கு கிடைக்கக்கூடும். உங்களுக்குத் தேவையான நகையை அவரிடம் சொல்லுங்கள். நீங்கள் கொடுக்கக்கூடிய தொகையும் கூறுங்கள். சரியான விலையில் சரியான சரக்கு பெறுவதற்கு அது போதுமானது.

உமது வாங்கும் முறையைச் சீர்படுத்துங்கள். சுயநலம்பெற்ற தரகர்களின் வம்பு பேச்சில் சிக்கிக்கொள்ளாதீர்கள்.

**நேர்மையான வியாபாரியை நம்புங்கள்**
**நாணயமுள்ள சரக்கு கிடைக்கும்.**

## வியாபாரி உண்மையில் நேர்மையானவர்

# ஸூராஜ்மல்ஸ்

"1895 முதல்"

**நம்பிக்கையான நகை வியாபாரிகள்**

313, எஸ்பிளனேட் :: மதராஸ்.